ஏப்ரல் 25 - மே 01, 2010 April 25 - May 01, 2010 பக்கங்கள் - 28 25.00

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

# சுடர் ஒளி

THE SUDAROLI

வார மலர்



## தமிழ் மக்களும் பஸ் பயணமும்





## பார்வதி அம்மாளுக்கு என்ன நடந்தது?



## உயிர் வலிக்கும் கணங்கள்...!





## நாடாளுமன்றத்தில் தமிழ் எம்.பிக்கள் என்ன செய்யப் போகிறார்கள்?

# கூட்டமைப்பு அரசுக்கு நீட்டியுள்ள நேசக்கரம்

வருட ஆரம்பத்திலேயே இருதேர்தல்கள் அரங்கேற்றப் பட்டு, அமளிகள் யாவும் முடிவுக்கு வந்து விட்டன. தேர்தல் திருவிழா ஆரவாரம் எல்லாம் ஓய்ந்துவிட்டன.

இப்போது பேரம் பேசும் நாடகம் ஆரம்பமாகி விட்டது.



தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும் பான்மை யைப் பெறுவோம் என ஆளும் தரப்புக் கூறிவந்தது. ஆனால் மூன்றில் இரண்டு பெரும்

கவனத்தில் எடுக்கப்படுமா? அதிகாரப் பரவலாக்கம் மேற்கொள்ளப்படுமா? என்ற கேள்விகளும் எழுப்பப்படு கின்றன.

அதிகாரப் பரவலாக்கலைக் கிராம மட்டத்துக்கு கொண்டு செல்லக் கூடிய வகையில் அரசமைப்பில் மாற்றங்கள் செய்யப்படும் என இனப்பிரச்சினைக் குத் தீர்வு காண நியமிக்கப்பட்ட அனைத்துக் கட்சிகளின் தெரிவுக் குழுவின் தலைவர் திஸ்ஸ விதாரண தெரிவித்திருந்தார்.

மாகாண, மாவட்ட, கிராம மட்டங்க ளில் அதி காரங்களைப் பரவலாக்குவது தொடர்பாக அனைத்துக் கட்சித் தெரிவுக்குழு இணக்கம் கண்டுள்ளது.

ஐ.தே.கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி., ஹெல உறுமய ஆகிய கட்சிகளுடன் கலந்துரையாடி இறுதி முடிவு எடுக்கப்படும் என்று திஸ்ஸ விதாரண தேர்தலுக்கு முன்னர் தெரிவித் திருந்தார்.


அந்தத் தீர்வு தமிழ் மக்களின் அபிலாஷைகளைத் தீர்க்குமா? என்று இப்போதைக்குக் கூறமுடியாது.

அரசின் தீர்வுத் திட்டம் முழுமை யாக வெளிவரும்போது தான் அதை அறியமுடியும்.

எதுவாக இருந்தாலும் இப்போது கிடைத்துள்ள சந்தர்ப்பத்தை அரசு சரியான முறையில் பயன்படுத்த வேண்டும். அப்போதுதான் நாடு அபிவிருத்தியை நோக்கி நகர முடியும்.

தேர்தல் முடிந்த கையோடு, அரசுப் பக்கம் இருந்துவந்துள்ள கருத்துக்கள், சர்வதேசத்தில் இருந்து வந்துள்ள

எதிர் காலச் செயற்பாடுகள் குறித்து விளக்கமளித்துள்ளார்.



ஒருமித்த நாட்டுக்குள் தமிழ் மக்களின் நியாயமான - சட்டபூர்வமான - நிலைத்து நிற்கவல்ல - அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்ற வலுவுள்ள தீர்வு ஒன்றைக் காணும் பொருட்டு அரசுக்கு ஒத்துழைப்பு வழங்கக் கூட்டமைப்புத் தயாராக உள்ளது என்று சம்பந்தன் பகிரங்கமாக அறிவித்துள்ளார்.

இலங்கை அரசு எந்த விதத்தில் தமக்குக் கிடைத்த வெற்றிக்கு மதிப்பளிக்கின்றதோ, அதேவகையில் - அதே விதத்தில் வடக்கு - கிழக்கு மக்கள் எமக்கு அளித்துள்ள வெற்றியை மதிக்கவேண்டும் என்று கூறியுள்ள சம்பந்தன் -

தேர்தல் மூலம் மக்கள் எமக்கு வழங்கியுள்ள ஆணையை மதித்து அரசு செயற்பட வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் விடயத்தில், மக்களை மீளக்குடியமர்த்தும் விடயத்தில் வடக்கு - கிழக்கில் அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் விடயத்தில் தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளை ஈடுபடுத்த வேண்டியது அரசின் கடமை என்று சுட்டிக்காட்டியுள்ள சம்பந்தன் -

இந்தக் கருமங்களை - விடயங்களை - நிறைவேற்ற அரசுக்குச் சகல

கடந்த 18 ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகை தந்த இந்தியத் தூதர் அசோக் கே.காந்த் வெளியிட்டுள்ள கருத்துக் கள், வடக்கு - கிழக்கில் இந்தியா பல்வேறு திட்டங்களை முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளது என்பதை வெளிப்படுத்தியுள்ளன.

இந்தியாவா? சீனாவா? வடக்கு - கிழக்கின் அபிவிருத்தியில் முக்கிய பாத்திரம் வகிக்கப் போகின்றன எனப் போட்டி நிலவும் நிலையில் -

இந்தியத் தூதரின் கருத்துக்கள் வந்துள்ளன.

கோடிக் கணக்கான நிதியைக் கொட்டிப் பல்வேறு திட்டங்களைச் செயற்படுத்த சீனா கால்பதித்துள்ள நிலையில், இந்தியாவும் பல்வேறு



பான்மையைப் பெறுவதற்கு இன்னும் ஆறு ஆசனங்கள் அரசுக்கு தேவையாக வுள்ளது.

இந்த ஆறு ஆசனங்களையும் பெற்று அரசமைப்பை மாற்றி தனது இலக்கை அடைய அரசுத்தரப்பு பேரம் பேசும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளைச் சேர்ந்த நாடா ளுமன்ற உறுப் பினர்கள் சிலரை வளைத்துப் போட்டு, மூன்றில் இரண்டு பெரும் பான்மையைப் பெறுவதற்கு அரசு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

எப்படியாவது ஆறுபேரைத் தம்வசம் ஆக்கி மூன்றில் இரண்டு பெரும்பான் மையைப் பெற்று அரசமைப்பைத் தமக்குச் சாதகமாக அரசு மாற்றிவிடும் என்பது திண்ணம்.

ஜனாதிபதி ஆறு வருடகாலம் முடிந்தும் தொடர்ந் தும் பதவியில் இருக்க வசதியாக அரசமைப்பு மாற்றப் படும். தேர்தல் முறை உட்பட பல்வேறு விடயங்கள் கூட அரச மைப்பின் மாற்றம் ஊடாக முன்னெடுக்கப் பட்டுவிடும்.

புதிய அரசமைப்பு மாற்றங்களின் போது தேசியப் பிரச்சினையான இனப்பிரச்சினைத் தீர்வு விடயமும்

கருத்துக்கள், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டியதன் அவசியத்தைச் சுட்டிக்காட்டி நிற்கின்றன.

அரசின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான மைத்திரிபால சிறிசேன, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட எதிர்க்கட்சிகளுடன் பேச்சு நடத்த அரசு திட்ட மிட்டுள்ளது என்று கூறியுள்ளார்.

இந்தப் பேச்சுக்கான அழைப்பு இன்னமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எழுத்து மூலம் கிடைக்காத நிலையில் -

அக்கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளார்.

வடக்கு - கிழக்கில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 14 நாடா ளுமன்ற உறுப்பினர் களும் கடந்த 18 ஆம் திகதி திருகோணமலை யில் கூடி எதிர்கால நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆராய்ந்தனர்.

அந்தக் கலந்துரையாடல் முடிவடைந்த பின்னர் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கட்சியின்

ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங் கத் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பினரான நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று கூறியுள்ளார்.

இந்த விடயத்தில் எம்மை மதிக்காது, அழைக்காது அரசு விடுமானால் என்ன முடிவை எடுப்போம் என்பதை அப்போதைக்கு வெளியிடுவோம். அதற்கும் எமக்கு வழி உண்டு என்று சம்பந்தன் காட்டமாகக் கூறியுள்ளார்.

கடந்த காலங்களை அரசு மறந்து கூட்டமைப்பு நீட்டியுள்ள நேசக்கரத் தைப் பற்றிப் பிடித்து அவர்களை உள்வாங்கித் தமது செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

**யாழவன்**

அப்படியில்லாவிட்டால் நாடு மீண்டும் படுகுழிக் குள்தான் விழும் நிலை ஏற்படும். இதுதான் யதார்த்த நிலையாகும்.

அரசு எடுக்கப்போகும் அடுத்த கட்ட நகர்வுகள் தான் நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கப் போகின்றன.

அது நிற்க -

துறைகளில் கால் ஊன்றத் தயாராகி விட்டது என்பது தூதரின் கருத்தைப் பார்க்கும்போது தெரியவருகின்றது.

இரு நாடுகளும் போட்டி போட்டுக் களம் இறங்கியுள்ளதை அவதானிக்கும் போது, இலங்கை அரசுக்கு வேலை இல்லாமல் வடக்கு மீள் எழுச்சிபெறப் போகின்றது என்று கருத இடமுண்டு.


## அபிவிருத்தியில் இந்தியா காட்டும் ஆர்வம் அரசியல் தீர்விலும் காட்டப்படுமா?

தமது சொந்த நலன்களுக்காக அந்த நாடுகள் செயற்பட்டாலும், வடக்கு - கிழக்கு மீள் எழுச்சி பெற்றால் போதும் என்று பொது ஜனங் கள் முணுமுணுப்பதை அவதானிக்க முடிகிறது.

அபிவிருத்திச் செயற்பாடுகளில் போட்டிபோடும் இந்த இருநாடுகளும் தமிழ்மக்களின் அபிலாஷை களுக்கு ஏற்ற தீர்வு ஒன்றைக் காண இலங்கைக்கு அழுத்தம் கொடுத்தாலென்ன என்று நோக்கர்கள் கேட்கிறார்கள்.

அபிவிருத்தியுடன் அரசியல் தீர்வும் கிட்டுமானால் தமிழ்மக்கள் நிம்மதியான - சுதந்திரமான வாழ்வை அமைக்க வாய்ப்புக் கிட்டும். இதை அந்த நாடுகள் செய்யுமா? காலம்தான் அதற்குப் பதில் கூறவேண்டும்.

* * * * *



# நாடாளுமன்றத்தில் தமிழ் எம்.பிமார் என்ன செய்யப் போகிறார்கள்?

புதிய நாடாளுமன்றம் ஆரம்பமாகி விட்டது. மகிழ்ச்சி. ஆரம்ப வைபவத்தில் நாடாளுமன்ற வளாகமே களைகட்டி இருந்தது. அனுபவம் வாய்ந்த உறுப்பினர்கள் முதல் அறிமுக உறுப்பினர்கள் வரை ஒன்றுகூடிய நிகழ்வு பரஸ்பர அறிமுகங்கள். வாழ்த்துப் பரிமாற்றங்கள். தொடக்க நிகழ்வு பிரமாதமே. ஆனால் இந்தத் தொடக்கம் தமிழ் மக்களுக்கும் தமிழ் எம்.பிமாருக்கும் எப்படி அமையப் போகிறது? அது எப்படி அமையவேண்டும்? என்பதே இங்கே முக்கியமானது.



தமிழ் மக்களுக்கு ஏராளம் பிரச்சினைகள் உள்ளன. ஏராளம் தேவைகளும் உள்ளன. தமிழ் மக்களின் பிரச்சினைகளும் தேவைகளும்தான் தமிழ் எம்.பிமாரின் பிரச்சினையுமாகும். ஆனால், கடந்த காலத்து தமிழ் மக்களின் தேவைகளையும் அவர்களுடைய பிரச்சினைகளையும் வைத்தே பெரும்பாலான தமிழ் எம்.பிமார் பிழைப்பு நடத்தினர்.

**அருள் மனோகரன்**

கடந்த நாடாளுமன்றக் காலத்தை தமிழ்ப் பிரதிநிதித்துவம் முறையாகப் பயன்படுத்தவில்லை என்ற கடுமையான குற்றச்சாட்டு உண்டு. இந்தக் குற்றச்சாட்டு பகிரங்கமானது. யாராலும் மறுக்க முடியாதது.

நாடாளுமன்ற உறுப்பினர் பதவியையும் அதன் வளங்களையும் தமது மக்களுக்காகவும் தமது பிரதேசங்களுக்காகவும் பயன்படுத்துவதில் தமிழ் எம்.பிமாருக்கும் சிங்கள மற்றும் முஸ்லிம் எம்.பிமாருக்கும் இடையில் நிறைய வேறுபாடுகள் உண்டு. அவர்கள் நாடாளுமன்றத்தை தமது மக்களுக்கான அரங்காகவே உணர்ந்துள்ளனர். தமிழ் எம்.பிமார் அவர்களைப் போல செயற்பட முடியாது. சிங்கள, முஸ்லிம் எம்.பிமாருக்கும் தமிழ் எம்.பிமாருக்கும் இடையில் செயற்படுவதற்கான வழிகள் அங்கே வேறுபட்டுள்ளன என்று யாரும் சொல்லக் கூடும்.

இது ஒருவகையில் ஏற்கக்கூடியது போலத் தோன்றினாலும், இதைச் சரியென்று சொல்ல முடியாது. அப்படியாயின், நாம் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்க முடியாது. அங்கே நாம் செயற்பட முடியாத நிலைமை தொடர்ந்தும் இருக்குமானல் அதை நிராகரிப்பதைத் தவிர வேறு வழியில்லை. ஆனால் இலங்கையின் அரசியல் அமைப்பு, நாடாளுமன்ற முறைமை, அதன் யதார்த்தம் எல்லாற்றையும் புரிந்து கொண்டும் ஏற்றுக்கொண்டும்தான் தமிழ் எம்.பிமார் அதன் படிகளில் கால்வைத்துள்ளனர். எனவே அந்த நாடாளுமன்றத்தில் எப்படி விவேகமாக நடந்து கொள்வது? நாடாளுமன்றத்தை எப்படிக் கையாள்வது? எப்படிப் பயன்படுத்துவது என்பதையிட்ட தீர்மானம், திட்டம், விளக்கம் என்பவை தமிழ் எம்.பிமார்களுக்கு அவசியமாகியுள்ளது. இது தமிழ் எம்.பிமாருக்கு மட்டுமல்ல மலையகம், கொழும்பு உள்ளிட்ட எம்.பிமாருக்கும் பொருந்தும். ஆனால், ஏனைய பிரதேச எம்.பிமாரையும் விட பலவீனாமனவர்கள் வடக்கு கிழக்கின் எம்.பிமார்தான்.

சில காலத்தில் சில தமிழ் எம்.பிமார் மட்டுமே தமிழ் மக்களுக்கு விசுவாசமாகவும் நேர்மையாகவும் நடந்துள்ளனர். ஏனைய காலத்தில் பெரும்பாலான எம்.பிமார் தமிழ் மக்களின் சார்பில் தாம் மட்டுமே வயிற்றை வளர்த்தனர். வசதிகளை அனுபவித்தனர். வாய்ப்புகளைப் பயன்படுத்தினர். வாழ்க்கையை வளமாக்கிக் கொண்டனர்.

அதனால்தான் ''ஜப்பான் ஜீப் உங்களுக்கு, சுருக்குக் கயிறு எங்களுக்கா?'' என்று தமிழ் மக்கள் ஆத்திரத்துடன் கேட்க வேண்டிவந்தது. பொதுவாகவே தமிழ் மக்களிடம் தமது எம்.பிமாரைப் பற்றிய பொதுக்கோபமும் அவநம்பிக்கையும் உண்டு. இந்த முறைத் தேர்தலில் வடக்கு கிழக்கின் மக்கள் வாக்களிக்க விரும்பாமல் இருந்ததும் இந்தக் காரணத்தினால் தான். சிங்கள ஆட்சியாளர்களுக்கு நிகரான கோபம் தமிழ் எம்.பிமாரின் மீதும் உண்டு. தங்களை இவர்கள் ஏமாற்றியவர்கள், தங்களை வைத்துப் பிழைத்தவர்கள் என்ற கோபம் இது.

தாங்கள் இழந்த அளவுக்கும், தியாகம் செய்த அளவுக்கும், தமிழ் மக்களின் விடுதலைக்காக தாம் அர்ப்பணித்த அளவுக்கும் தமிழ் எம்.பி மாரின் அர்ப்பணிப்பும், தியாகமும், இழப்புகளும், உழைப்பும் இல்லை என்பதே மக்களின் உணர்வு. அதுவே மக்களின் மதிப்பீடு. அதுவே அவர்களுடைய கோபம்.

இதற்குப் பின்னரும் தமிழ் எம்.பிமாரை எதற்காகத் தெரிவு செய்துள்ளனர் என்றால், அது தமிழ் மக்களின் மிகப் உயரிய பண்பின் வெளிப்பாடாகும்.

சிங்கள அதிகாரத் தரப்புக்கு எதிராக தமிழ்ப் பிரதிநிதித்துவ அடையாளம் வேண்டும் என்பதற்காகவும், இந்தத் தடவையாவது இவர்கள் உருப்படியாக எதையாவது செய்யட்டும் என்ற அடிப்படையிலும் தமது தெரிவுகளை அவர்கள் மேற்கொண்டுள்ளனர். இதனை தமிழ் எம்.பிக்கள் புரிந்துகொள்ள வேண்டும். அத்துடன் அவர்கள் இன்னொன்றையும் தெரிந்து கொள்வது நல்லது. தமிழ் எம்.பிமாரின் மீதான நம்பிக்கையீனத்தின் வெளிப்பாடாகவே வடக்கு கிழக்கில் சிங்களக் கட்சிகளின் செல்வாக்கு அதிகரித்து வருகின்றது என்பதையும்.



எனவே, இத்தகைய நிலையில், தமிழ்க்கட்சிகள் இனி மேற்கொள்ள வேண்டிய பணிகள் முக்கியமடைகின்றன. கடந்த நாடாளுமன்றக் காலத்தில் தான் 23 தமிழ் நாடாளுமன்ற உறுப்பனர்கள் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்திக் கொண்டு நாடாளுமன்றத்தில் இருந்தனர். இவர்கள் சாட்சியாக இருக்கும் போதுதான் ஆயிரக்கணக்கில் மக்கள் கொல்லப்பட்டனர். லட்சக்கணக்கான மக்கள் அகதிகள் என்ற பெயரில் தடுப்பு முகாம்களில் அடைக்கப்பட்டனர். இந்த மக்கள் தடுப்பில் இருந்து கொண்டே வாக்களித்துத்தான் இப்போது புதிய உறுப்பினர்களையும் தெரிவு செய்துள்ளனர்.

ஆகவே, கடந்த காலத் துயரங்களை ஆதரிக்கும் விதத்தில் மௌனமாக நின்று தமிழ் மக்களுக்குச் செய்த துரோகத்தைப்போல இனியும் செய்யாமல் அநீதி உச்சமடையும் போது சப்புக்கொட்டும் நியாயங்களைச் செல்லிக் கொண்டு நாடாளுமன்ற உறுப்பினர் பதவியையே இறுக்கப்பிடித்துக் கொண்டிருக்காமல் உருப்படியாக மக்களுக்கு நல்லகாரியங்களைச் செய்ய வேண்டும்.

இப்போதுள்ள நாடாளுமன்ற நிலைவரத்தின் படி தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு பற்றி உடனடியாகப் பேச முடியாது. அதில் பயனும் இல்லை. ஆனால் அதைப் பேசாமல் இருக்கவும் முடியாது. அதைச் சற்றுகால அவகாசமெடுத்து, திட்டமிட்டு, விவேகமாகவே பேசவேண்டும். அதற்கு முன்னர் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான சூழ்நிலையை உருவாக்க சர்வதேச சமூகத்தினதும் சிங்களக்கட்சிகளினதும் ஆதரவுத்தளத்தை உருவாக்கவேண்டும்.

எனவே அதையும் செய்து கொண்டு, இப்போது தமிழ் மக்கள் எதிர்நோக்கிக் கொண்டிருக்கிற பிரதான பிரச்சினைகளுக்கும் வழிவகைகளைக் காண வேண்டும். அதற்கு அமைவாக மக்களின் பிரச்சினைகள் அவர்களுடைய நெருக்கடிகள், அவர்களுடைய தேவைகள் எவை என வகைப்படுத்தி, ஒரு தெரிவையும் திட்டமிடலையும் செய்வது அவசியம். பின்னர் இவற்றைத் தீர்ப்பதற்கான நடைமுறைகள் பற்றிச் சிந்தித்து அவற்றை நாடாளுமன்றத்தில் எவ்வாறு ஆயத்தப்படுத்த வேண்டும் எனச் சிந்திக்க வேண்டும்.

இதுவே இன்றைய காலத்தின் தேவை. இதுவே தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பிரதான பணியாக உள்ளது. இதில் சம்மந்தனும் உள்ளடங்குவார். டக்ளஸ் தேவானந்தாவும் சேர்ந்து கொள்வார். எல்லோருக்கும் இது அவசியம், எல்லோருக்கும் இது பொருந்தும்.

இல்லையெனில் வழமையைப் போல மக்கள் பாதிக்கப்படவும் அந்தப் பாதிப்புகளை வைத்தே அரசியல் நடத்தவும் போகிறார்களா? *



சுடர் ஒளி

ஏப். 25- மே. 01, 2010

85, ஜெயந்தமலல்கிமாறாச்சி மாவத்தை, கொழும்பு-14 டெலிபோன் 0115738005 பக்ஸ்: 0114734404 :
E-mail: editorial@sudaroli.com

## அரசாங்கம் தீர்வு காணுமா?

விடுதலைப்புலிகளுக்கும் அரச படைகளுக்கும் இடையிலான யுத்தம் முடிவடைந்து மே 18 ஆம் திகதியுடன் ஒரு வருடம் பூர்த்தியாகப் போகிறது.

இந்த காலத்துக்குள் அரசாங்கம் ஜனாதிபதித் தேர்தலையும் பொதுத் தேர்தலையும் நடத்தி எவருமே எதிர் பாராத விதமாக அமோக வெற்றி ஈட்டி உள்ளது.

புதிய நாடாளுமன்றம் கூட்டப்பட்டு அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், எம்.பிக்கள் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டு ஒளிர் மயமான ஓர் இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கான எண்ணங்களை வெளிக்காட்டி உள்ளனர். நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெறுவதற்கு அரசுக்கு இன்னும் ஆறு வாக்குகளே தேவைப் படுகின்றன. 1977ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஜே.ஆர் ஜெயவர்த்தனா தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் பெற்றது போன்ற பெரும் வெற்றியை மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் ஈட்டி உள்ளது.

அரசாங்கத்தின் முன் தற்போது உள்ள முக்கிய பிரச்சினை நாட்டில் புரையோடிப் போய் உள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதாகும். இதன் மூலமே ஒளிர்மயமான ஓர் எதிர் காலத்தைக் கட்டி எழுப்ப முடியும். ஏ-9 திறப்பு, மீள் குடியேற்றம் போன்ற யுத்தத்தினால் கடந்த காலங்களில் ஏற்பட்ட பாதிப்பு களை சீர்செய்வது தான் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு என்று கருத முடியுமா? தமிழ் மக்களின் உடனடிப் பிரச்சினைகள் தான் இவை. நிரந்தர பிரச்சினை இன்னும் கிடப்பில் போடப் பட்டே இருக்கிறது.

பொதுத் தேர்தல் முடிவடைந்தவுடன் வடக்கு,கிழக்கில் தெரிவாகும் புதிய எம்.பிக்களுடன் பேச்சு நடத்தி இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்று ஜனாதிபதி கூறி இருந்தார். பேச்சு வார்த்தைக்கு தாம் தயாராக இருப்பதற்கான சமிக்ஞையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும் வெளிக்காட்டி இருந்தார். ஒன்றுபட்ட இலங்கைக்குள் தீர்வு காண்போம் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

பிரிவினைவாதத்தை முன்னிறுத்தி கடந்த காலங்களில் நடைபெற்ற போர் முடிவுக்கு வந்த பின்பு ஒன்றுபட்ட இலங்கைக்குள் தீர்வு என்ற கருத்து தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகளாகக் கருதப் படும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் தெரிவிக்கப்பட்டிருப்பது இனப்பிரச்சினை தொடர்பான பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான உந்து சக்தி என்றே கூறவேண்டும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொருளாளரும் அமைச்சருமான டலஸ் அழகப் பெருமாவும் சம்பந்தனின் கருத்தை வரவேற்றுள்ளதுடன், தமிழர் தரப்பில் இருந்து கடந்த முப்பது, நாற்பது வருடங்களில் கிடைத்த நல்ல சமிக்ஞை என்று வரவேற்றுள்ளார்.

நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை பெறுவதற்கு அரசாங்கத்துக்கு தற்போது நல்ல வாய்ப்பு இருக்கிறது.

ஜனாதிபதித் தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் இனப்பிரச்சினைக்கான யோசனைகளை முன்வைத்து நாட்டு மக்களின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தவறி விட்ட போதிலும், தற்போது கிடைத்துள்ள மிகப் பெரும் நாடாளுமன்றப் பலம் மூலம் தீர்வுக்கான மற்றொரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. தீர்வுக்கு அரசமைப்பு தடையாக இருந்தால் அதனைக் கூட மாற்றமுடியும்.

அரசாங்கம் இதனை பயன்படுத்திக் கொள்ளத் தவறுமானால் நாட்டின் அடுத்த சந்ததி மீண்டும் யுத்தத்துக்குள் செல்லும் ஆபத்து உள்ளது. ✱

# குற்றப் புள்ளிகளின் மையமாகும் யாழ்ப்பாணம்



சம்பவம் - ஒன்று

இடம்: மானிப்பாய் பஸ் நிலையம்.

வவுனியா நலன்புரி நிலையத்தில் இருந்து மிகுந்த களைப்போடு பஸ் நிலையத்தில் வந்திறங்குகிறார் ஒரு யுவதி. அப்போதுதான் பருந்து போல் அந்த இடத்தில் இரு புதிய நபர்கள் உள்நுழைகின்றார்கள். கொச்சைத் தமிழில் தாம் இராணுவப் புலனாய்வாளர்கள் என்று அவர்கள் அறிமுகப்படுத்திக் கொண்டார்கள். குறித்த யுவதி விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர் எனத் தாங்கள் சந்தேகிப்பதாகவும் அவரை விசாரணைக்காகத் தங்களுடன் வரும்படியும் மிரட்டும் தொனியில் கூறினர். இடம் வலம் தெரியாமல் தன்னை அழைத்துச் செல்லும் உறவினர்களை எதிர்பார்த்துக் காத்திருந்த அந்த யுவதிக்கு நிலைமையின் விபரீதம் புரியவில்லை. அவர்களின் மிரட்டலுக்குப் பயந்து வேறு வழியின்றி குறித்த நபர்களின் மோட்டார் சைக்கிளில் சென்றார் அந்த யுவதி. ஆட்களற்ற வீட்டின் முன்னால் அந்த மோட்டார் சைக்கிள் தஞ்சமடைந்தது. யுவதியைப் பலவந்தமாக உள்ளே இழுத்துச் சென்ற இருவரும் அந்த யுவதி கதறக் கதற பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தினர். அதிகாலை நேரம் அங்கிருந்து வெளியேறிய யுவதி கட்டுடை என்னும் இடத்தை அடைந்து

**-பிரமன்**

தன்னுடைய உறவினர்களிடம் நடந்த விபரீதத்தைச் சொல்லி அழுதிருக்கிறார். பின்னர் குறித்த இடத்திற்குச் சென்ற மக்கள் அங்கிருந்த இரு சந்தேக நபர்களையும் கண்டுபிடித்து நையப் புடைத்தனர். அவர்களில் ஒருவர் அரளிவிதையை அரைத்து தற்கொலைக்கு முயன்றபோது அம்முயற்சி முறியடிக்கப்பட்டு அவர் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார். மற்றையவர் காயங்களுடன் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். பாதிக்கப் பட்ட யுவதியும் சிகிச்சையின் பொருட்டு வைத்திய சாலையிலேயே தொடர்ந்தும் தங்கியிருக்கிறார்.

சம்பவம் - இரண்டு

இடம்: நவாலி

வீட்டுக்கு முன்னால் விளையாடிக் கொண்டிருக்கிறான் அந்த 13 வயதுச் சிறுவன். வீதியின் புழுதியை இருமருங்கும் கிளப்பியபடி அச்சிறுவனின் வீட்டிற்கு முன்னால் ஒரு கறுப்பு நிற 'ஹயஸ்' வாகனம் வந்து நிற்கின்றது. முகவரி ஒன்றை விசாரிக்கும் தோரணையோடு அச்சிறுவனை வாகனத்துக்குள் இருந்தவர்கள் அழைக்கிறார்கள். சிறுவனும் வாகனத்தின் அருகே செல்கின்றான். சட்டென வாகனத்தின் பின்புறக் கதவு வாய் பிளந்துகொள்ள, அதற்குள் இருந்த இருவர் சிறுவனைக் கண்மூடித் திறக்கும் நேரத்திற்குள் உள்ளே இழுத்து வாகனத்தின் கதவையும் இறுகப் பூட்டி விடுகின்றார்கள். அதன் பின்னர் மளமளவென்று ஓர் ஊசியினை அவனுக்கு ஏற்றிவிட்டு ஒருவித திரவத்தையும் அவனுக்கு பருக்க முற்பட்டனர். சிறுவனும் இலேசானவன் இல்லை. இயன்ற மட்டும் தன் எதிர்ப்பைக் காட்டினான். உரத்த தொனியில் கத்தி உதவி கேட்டான். அவனது ஆர்ப்பாட்டம் தாங்க முடியாமல், எங்கே தாங்கள் மாட்டிக் கொண்டு விடுவோமோ என்ற பயத்தில் அருகில் தென்பட்ட ஆலய வீதியில் சிறுவனைத் தள்ளி விட்டு விரைந்து ஓடிப்போனது அந்தக் கறுப்பு நிற 'ஹயஸ்' வாகனம்.





சம்பவம் - மூன்று

இடம்: மானிப்பாய் - நவாலி

அவர்கள் இருவரும் தொழில் ரீதியான நண்பர்கள். ஒருவர் உழவு இயந்திரங்களைத் திருத்துவதில் கில்லாடி. மற்றையவர் வாகனங்களுக்கான 'வயரிங்' வேலைகளைச் செய்வதில் வல்லவர். இருவரும் தொழில் ரீதியாக பரஸ்பரம் ஒருவரோடு ஒருவர் இணைந்து பணிபுரிபவர்கள். இருவரும் அவ்வாறு தொழில் விடயமாக ஒன்றாக அன்று காலை புறப்பட்டுச் சென்றனர். காலையில் சென்றவர்கள் மாலையாகியும் வீடு திரும்பவில்லை. அதன் பின்பு தான் ஏதோவொரு விபரீதம் நிகழ்ந்திருக்க வேண்டும் என்று அவர்களின் குடும்பத்தவர்கள் உணர்ந்து கொண்டார்கள். எல்லா இடங்களுக்கும் அவர்களைத் தேடி அலைந்தார்கள். ஊஹூம்! பலனெதுவும் இல்லை. இந்நிலையில் திடீரென ஒரு மர்மத் தொலைபேசி அழைப்பு. காணாமல் போனஇருவரையும் தாம் கடத்தி வைத்திருப்பதாகவும் அவர்கள் இருவரும் பத்திரமாகத் திருப்பிக் கிடைக்க வேண்டுமானால் ஆளுக்கு 30 லட்சம் ரூபா வீதம் தர வேண்டும் எனவும் தொலைபேசியில் ஒலித்த குரல் கடுமையான தொனியில் பேரம் பேசியது. ஆனாலும் நாளாந்த வேலைசெய்யும் அவர்களுக்கு 30 லட்சம் ரூபா எங்கிருந்து கிடைக்கும்? இதனால் வேறு வழியின்றி பொலிஸாரின் உதவியை அவர்கள் நாடினர். பொலிஸார் துருவித் துருவி விசாரணைகளை மேற்கொண்டார்கள். கடத்தல்காரர்களின் பேரத்திற்குப் பணிவது போலவும் அவர்கள் கேட்கும் பணத்தைத் தரச் சம்மதிப்பது போலவும் வீட்டுக்காரர்களை நடிக்கச் சொன்னார் கள். அவ்விதமே குடும்பத்தவர்களும் நடந்து கொண்டார்கள். கடத்தல் காரர்கள் சொன்ன இடத்திற்கு காரில் பணப்பெட்டியுடன் குடும்பத்தவர்கள் சென்றார்கள். தாம் நினைத்தது நடந்துவிட்ட சந்தோஷத்தில் பணப் பெட்டியை வாங்க வந்த கடத்தல்காரர்களை மறைந்திருந்த பொலிஸார் அப்பிக் கொண்டார்கள். காணாமல் போனவர்களையும் பொலிஸார் கண்டுபிடித்து விட்டார்கள்.

தேர்தலின் போதும் அதற்கு முந்தைய பிரசாரக் காலத்தின் போதும் அமைதியான பூமியாக அடங்கிக் கிடந்த யாழ்ப்பாணம் மீளவும் ஒரு மர்ம தேசமாக மாறிக் கொண்டிருக்கின்றது. கடத்தல்கள், கப்பங்கேட்டல், கொலைகள், காணா மற்போதல் என்பன சடுதியாக முளைக் கத் தொடங்கியிருக்கின்றன. கடந்த வாரத்தில் மட்டும் இத்தகைய சம்பவங்கள் அடுத்தடுத்து நிகழ்ந்து குடாநாட்டு மக்களைப் பயத்தின் உச்சப்புள்ளிக்கு இட்டுச் சென்றிருக்கின்றது. போர் நிகழ்ந்த போது - ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த போது - எவ்வாறு வீடுகளைவிட்டு வெளியே வருவதற்கு மக்கள் அஞ்சினார்களோ, அத்தகையதோர் இருண்ட யுகத்திற்கு குடாநாடு தள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றதோ என்ற ஐயம் பரவலாக எழத் தொடங்கியிருக்கின்றது. ஒரே விதமான வகையில் இத்தகைய அச்சுறுத்தல்களை உண்டு பண்ணும் சம்பவங்கள் கடந்த வாரத்தில் குடாநாட்டில் உள்ள மானிப்பாய்ப் பகுதியை மையம் கொண்டு நிகழ்ந்திருப்பது ஓர் ஆச்சரியமான விடயம் தான். ஆகவே யாழ்ப்பாணத்தின் குற்றவியல் நகரமாக மானிப்பாய் பிரதேசம் மாறிக்கொண்டிருக்கின்றது என்பதையே மேற்குறித்த சம்பவங்கள் சுட்டி நிற்கின்றன.

இத்தனை நாளும் இல்லாத இத்தகைய குற்றவியல் நிகழ்வுகள் இப்போது திடீரென முளைத்தெழத் தொடங்கியிருப்பது குறித்து பலரும் பல்வேறு வகையில் அபிப்பிராயங்களைச் சொல்லத் தொடங்கியிருக்கிறார்கள். அதில் மிக முக்கியமானதொன்று, ஏ-9 வீதியும் அதனூடாக மேற்கொள்ளக்கூடிய சோதனைகளற்ற பயணமும் தான். இத்தகைய கட்டுப்பாடுகளற்ற பயணமுறையால் யாரும் எவ்விதக் குறுக்கீடும் இன்றி

(25ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ் மக்களும் பஸ் பயணமும்

தமிழ் மக்களின் அரசியல் தலைவிதியையும் விட மோசமானது அவர்களுடைய பயணங்களாகும். போர் நடந்த போது பாதைகள் பலவும் தடைப்பட்டிருந்தன. அதனால், பயணங்களும் கெடுபிடிகளுக்குள்ளாகின. இப்போது போர் முடிந்து இயல்பு நிலை ஓரளவுக்கு உருவாகியிருக்கின்றது. ஆனாலும், பயண நெருக்கடிகள் குறையவில்லை. முன்னர் பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு கெடுபிடிகள் இருந்தன. இப்போது பணத்தைச் சேகரிக்கும் போட்டியில் உருவாகிய கெடுபிடிகள் இருக்கின்றன.

நாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் எந்த நேரமும் போகலாம் என்ற நிலை இன்று உண்டு. வன்னியில் மீள்குடியேற்றம் நடைபெறாத பகுதிகளும் உயர்பாதுகாப்பு வலயப்பகுதிகளும் விதிவிலக்கு. மற்றும்படி தாராளமாகவே பயணங்கள் - போக்குவரத்துக்கள் நடைபெறுகின்றன.

ஆனால், தமிழ் மக்களின் பயண நெருக்கடிகள் தான் கவலைப்படுமளவுக்கும் அருவருக்கத்தக்க அளவுக்கும் உள்ளன.

குறிப்பாக யாழ் குடாநாட்டுக்குள்ளும் யாழ் குடாநாட்டிலிருந்து வெளியிடங்களுக்கும் நடைபெறுகின்ற பயணங்கள் தான் மிகவும் மோசமாகவுள்ளன. குடாநாட்டுக்குள் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பேருந்துகள் போதிய சேவைகளில் ஈடுபடுவதில்லை. அதிலும் காங்கேசன்துறை, காரைநகர், பருத்தித்துறை போன்ற இடங்களுக்கான பேருந்து சேவை போதாது. நடைபெறும் சேவையைக்கூட சரியான முறையில் அதிகாரிகள் ஒழுங்கமைக்க வில்லை. சிலவேளைகளில் இந்தப் பேருந்துக்கள் வெறுமையாகவே ஓடும். சில வேளைகளில் மிக நெரிசலாக இருக்கும். தவிர நேர இடைவெளியோ அலுப்பூட்டுகின்ற அளவுக்கு உள்ளது.

இதனால், தனியார் பேருந்துகளை மக்கள் நாடுகின்றனர். தனியார் பேருந்துகளின் ஒரே சிறப்பு அம்சம் அவற்றின் விரைவுச் சேவைதான். ஆனால்,

**-ஜோசப் தயாளன்**

இந்த விரைவுச் சேவைக்காக நாடுகின்ற மக்களை - பயணிகளை - வைத்துக் கொண்டு பிழிந்து எடுத்து விடுகின்றனர் பேருந்து உரிமையாளர்கள்.

ஒரு பேருந்தினுள் - அந்தப் பேருந்து அல்லது சிற்றூர்தி எதுவாயினும் அதற்கேற்றவாறு - எவ்வளவு எண்ணிக்கையானோரை ஏற்றமுடியும் என்ற வரையறை ஏதுமின்றி பயணிகள் ஏற்றப்படுகின்றனர். கால்வைக்க முடியாது, மூச்சுவிட முடியாது, திரும்பி நிற்க முடியாது என்ற வகையில் நெரிசலில் சனங்களை ஏற்றி அடைத்துக் கொண்டே இந்த பஸ்கள் செல்கின்றன.

போக்குவரத்துச் சேவை என்பது மிகவும் முக்கியமானது. பயணிகள் பலவகைப்பட்டவர்கள். இவர்களில் மருத்துவமனையிலிருந்து திரும்புவோர், மாணவர்கள், குழந்தைகள், சிறுவர்கள், முதியோர், கர்ப்பிணிகள், குழந்தையுடன் வரும் தாய்மார், மதகுருமார்கள், இளைஞர்கள், யுவதிகள், அரசாங்க ஊழியர்கள், வியாபாரிகள் எனப்பல வகையினர் பயணங்களை தினமும் மேற்கொள்கின்றனர். இந்தப் பயணிகளின் நலனைப் பாதிக்காத முறையில்தான் சேவையை நடத்த வேண்டும். இந்தச் சேவைக்கான அனுமதியின் போதே இந்த விசயங்கள் சேவையாளர்களுக்கு அறிவுறுத்தப்படுகின்றன.

ஆனால், சேவையை நடத்தும் பேருந்து உரிமையாளர்கள் பின்னர் இதைப் பின்பற்றுவதில்லை. அவர்களுடைய ஒரே குறிக்கோள் பணத்தை வசூலிப்பதுதான். அதற்காக ஒரு பஸ்ஸினுள் எவ்வளவு தொகையாக ஆட்களை அடைக்க முடியுமோ அவ்வளவையும் ஏற்றி அடைக்க வேண்டியதுதான். உள்ளே பயணிகள் படுகின்ற அவலங்கள், அவஸ்தைகள் எல்லாம் முள்ளிவாய்க்கால் அவலத்தையும் விட மிகவும் மோசமானது.

இதை எந்த பேருந்து ஓட்டுனரோ, நடத்துனரோ உரிமையாளரோ மறுக்க முடியாது. வேண்டுமானால் இந்தப் பேருந்துகளுக்கு அனுமதி வழங்குகின்ற சங்கப் பிரதிநிதிகள், அரச அதிபர்கள், போக்குவரத்தைக் கண்காணிக்கும் பொலிஸார் உட்பட எவரும் ஒருதடவை பரிசீலித்துப் பார்க்கட்டும்.



"பயணிகளுக்கான சேவை என்பது மனசாட்சிக்கு விரோதமாகவே நடைபெறுகின்றது. சனங்களை மந்தைகளைப் போல நடத்துகின்றனர்" என்று இந்தப் பேருந்துச் சேவையாளர்களைப் பற்றிக் கூறுகின்றார் முதியவர் ஒருவர்.

பேருந்துகளில் பயணிகள் எப்படிக் கஷ்டப்படுகிறார்கள்? எப்படியெல்லாம் அவர்கள் நடத்தப்படுகின்றனர் என்பதை மக்களுடன் மக்களாக சம்மந்தப்பட்ட அதிகாரிகள், பத்திரிகையாளர்கள், பொலிஸார், போக்குவரத்தைக் கண்காணிக்கும் பிரிவினர் பயணம் செய்து அவதானிக்க வேண்டும். இல்லையென்றால், இந்தக் கொடுமை தீராது" என்று சொல்கிறார் தினமும் பயணம் செய்யும் ஒரு பயணி.

"ஏதோ இலவசமாக ஏற்றிக்கொண்டு திருவிழாவுக்குப் போவதைப்போல போகிறார்கள். பஸ்ஸில் ஏறுவதே தண்டனை தான். ஆனால் வேறு விதி எங்களுக்கில்லை" என்கிறார் ஒரு பெண்.

இப்படி தமது கவலைகளையும், ஆதங்கங்களையும் சொல்கின்றனர் பயணிகள். மக்களின் குறைகள் ஒரு பக்கமிருக்கட்டும். போக்குவரத்தை சேவையாக ஏற்றுள்ள துறையினர் நீதி, நியாய வரன்முறைகளை மீறி தனியே பணத்தை மட்டுமே குறியாகக் கொண்டு நடப்பதை எப்படி அனுமதிக்க முடியும்? இதற்கான நடவடிக்கைகளை யார் எடுப்பது? இது தொடர்பாக பயணிகள் எங்கே, எவரிடம் முறைப்படுவது?

பாதைத் தடைகள் நீங்கி, பயண அனுமதி நீங்கியபோதும் துயரமும் துன்பமும் இன்னமும் நீங்கவில்லை என்பது வருத்தத்திற் குரியது. இன்றைய சூழலில் பொருட்களைப் பெறுவது, கல்வி வசதிகளைப் பெற்றுக்கொள்வது, தொடர்பாடலை மேற்கொள்வது, வங்கிச் சேவையைப் பெற்றுக் கொள்வது எனச் சகலருக்கும் ஏராளம் வசதி வாய்ப்புக்கள் உண்டு. தனியார் மயமாக்கலின் மூலம் மக்கள் இலகுவாகவே எல்லாத் தேவைகளையும் பெற்றுக் கொள்ள முடியும்.

அங்கெல்லாம் மக்களின் நலனும் பேணப் படுகிறது. சேவையாளர்களின் நலனும் பாதுகாக்கப்படுகிறது.

ஆனால், பயணிகள் சேவை மட்டும் மிகவும் மோசமாகவே இருக்கிறது. இதற்கான மாற்று நடவடிக்கைகள் தாமதிக்காமல் எடுக்கப்படவேண்டும்.

எங்களுடைய அரசியல்வாதிகளும் இந்த விசயத்தில் கூடுதல் கவனம் செலுத்தவேண்டும். அரசியல் உரிமைகளைப் பெறுவதற்கு முதல் சமூகத்திலுள்ள பலவகையான உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். அதுதான் ஒரு சமூகத்தை பாதுகாப்பாகவும் வளமாகவும் வைத்திருக்க உதவும். ★

---




வன்னிப் போரின் உக்கிரம் தலைவிரித்தாடத் தொடங்கி மக்கள் பெரும் அளவில் கொல்லப்பட்ட நாள் 2009 ஏப்ரல் 19 ஆம் திகதி ஆகும்.

வன்னியின் பல பகுதிகளில் இருந்தும் மக்கள் இடம்பெயர்ந்து முல்லைத்தீவின் கடற்கரைக் கிராமங்களான புதுமாத்தளன், பழைய மாத்தளன், இடைக்காடு, அம்பலவன் பொக்கணை, வலைஞர்மடம், இரட்டைவாய்க்கால், பனையடி, சாளம்பன், முள்ளிவாய்க்கால் மேற்கு, கிழக்கு ஆகிய இடங்களில் நெருக்கமாக குடியமர்ந்திருந்தனர்.

இந்த நிலையில் புதுக்குடியிருப்பு, இரணைப்பாலை ஊடாக நகர்ந்த படையினர் பச்சைப் புல்மோட்டைப் பகுதி ஊடாக அம்பலவன் பொக்கணையை ஊடறுக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

இதன் போது அம்பலவன் பொக்கணை, இடைக்காடு, மாத்தளன் பகுதிகளை நோக்கி படையினர் கடும் தாக்குதல்களை நடத்தினர். கொத்துக் குண்டுகள், பல்குழல் பீரங்கிகள், ஆட்டிலறி தொலை தூர எறிகணைகள் என பல்வேறு வகையான பீரங்கிகள் மூலம் தாக்குதல்கள் நடத்தப்பட்ட அதேவேளை கடலில் இருந்தும் இடைவிடாத தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

2009-04-18 ஆம் திகதி முதல் நடத்தப்பட்ட தாக்குதலின் தீவிரம் 2009-04-20 அன்று உக்கிரம் அடைந்தது. 20ஆம் திகதி படையினர் அம்பலவன் பொக்கணை ஊடாக கடற்கரைக் கிராமங்களைத் துண்டாடினர்.

இதன் போது ஒரு சில மணிநேரங்களில் பலர் கொல்லப்பட்டனர். பல்லாயிரக்கணக்கானோர் அனாதைகள் ஆக்கப்பட்டும் படுகாயங்களைச் சந்தித்தும் தெருக்களிலும், முற்றங்களிலும் குற்றுயிராய்க் கிடந்தனர்.

இந்தக் காலப் பகுதியில் புதுமாத்தளன் பாடசாலையில் அமைந்திருந்த மருத்துவமனையே பிரதான மருத்துவமனையாக செயற்பட்டது. இந்த ஊடறுப்பினால் மருத்துவமனையின் முழுமையான உபகரணங்களும், மருத்துவச் செயற்பாட்டாளர்களும் இடம்மாற முடியவில்லை.

இந்த நிலையில் முடிந்தவர்கள் மட்டும் கடற்கரையூடாக முள்ளிவாய்க்காலைச் சென்றடைந்தனர்.

மேற்கு முள்ளிவாய்க்கால் அ.த.க. பாடசாலையில் சில மருத்துவச் செயற்பாட்டாளர்களுடன் செயற்பட்டுவந்த முல்லைத்தீவு மருத்துவமனையே மக்களுக்கு தஞ்சம் வழங்கும் நிலைக்குத் தள்ளப்பட்டது.

இதன் போது காயமடைந்த நிலையில் நூற்றுக்கணக்கானோர் இங்கு கொண்டுசெல்லப்பட்டனர்.

அந்த வேளை வன்னியில் வழமையாகச் சந்தித்த நெருக்கடிகளை விடவும் மக்கள் பாரிய நெருக்கடிகளை சந்தித்தனர். மருத்துவச் செயற்பாட்டாளர்களும், மருந்துகளும் இன்மையால் பலநூறுபேர் மருத்துவமனை வளாகத்திலேயே செத்து வீழ்ந்தனர்.

வன்னியில் மீள் குடியேறியுள்ள மக்களில் ஆயிரக்கணக்கானோர் 29-04-2010 இன்று தமது உறவுகள் பிரிந்த நாளை நினைவு நாளாக கண்ணீருடன் நினைவுகூர்கின்றனர்.

இதேநாளில் மட்டும் ஒரு இலட்சம் வரையான மக்கள் படையினரால் வல்வளைப்புச் செய்யப்பட்டு இராணுவப் பகுதிகளுக்குக் கொண்டு செல்லப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.


நன்றி இணையம்

# பார்வதி அம்மாளுக்கு நடந்தது என்ன?

## குமுறும் வைகோ

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ சாதாரணமாகவே உணர்ச்சிப் பிழம்பு... அதுவும், பிரபாகரனின் தாயார் சென்னை விமான நிலையத்தில் இருந்து திருப்பி அனுப்பப்பட்டால், சும்மா இருப்பாரா?

''தமிழர்களின் உரிமைக்காகப் போராடிய ஒரு மாவீரனின் தாய்க்கு இந்த நிலையா? தமிழகத்தின் தலைநகரில் கால் வைக்கக்கூட விடாமல் அந்தத் தாயைத் தத்தளிக்க வைத்துவிட்டார்களே... 80 வயது தாயை விரட்டாத குறையாக வெளியேற்றுகிற அளவுக்கு ஆட்சியாளர்களின் இதயத் தசைகள் இற்றுப் போய்விட்டனவா? ஆறரைக் கோடி தமிழர்களுக்கு



இதைவிட வேறென்ன அவமானம் இருக்க முடியும்?'' என கொந்தளித்தவரிடம் செய்தியாளர்கள் கேள்விகளை அடுக்கினர்.

''விமான நிலையத்தில் என்னதான் நடந்தது?''

''பார்வதி அம்மாள் சென்னைக்கு வருவது தெரிந்து, நானும் நெடுமாறன் ஐயாவும் விமான நிலையம் சென்றோம். பெரிதான வரவேற்பு கொடுத்தால் 'புலி ஆதரவுக் கோஷம்' என்று அர்த்தம் கற்பித்து சட்ட சிக்கல்களை உண்டாக்க கலைஞர் அரசு தயங்காது என்பதால், நாங்கள் காருக்குள்ளேயே அமர்ந்திருந்தோம். இதற்கிடையில், தமிழக பொலீஸை விமான நிலையத்தில் திடீரென குவித்து வைத்திருந்தனர். நாங்கள் பார்வையாளருக்கான பாதைக்குப் போனபோதே பொலீஸ் மறித்தது. எங்களின் பாஸை காண்பித்து பொலீஸிடம் பேசினோமே தவிர, அந்த இடத்தைத் தாண்டி எங்களை போகவிடவில்லை. கூடவே, பொலீஸ் எங்கள் மீது திட்டமிட்டு பலாத்காரத்தைப் பாய்ச்சியது. எனது பிடரியைப் பிடித்தும் கைகளை இழுத்தும் அராஜகம் செய்தனர். உடனே, கலைஞரின் ஏவலுக்காகப் பாய்ச்சல் காட்டிய பொலீஸை கண்டித்து நானும் நெடுமாறன் ஐயாவும் அந்த இடத்திலேயே உட்கார்ந்துவிட்டோம். சூழ்ந்து நின்ற பொலீஸாரிடம், 'இது உங்களுக்கு நியாயமாகப்படுகிறதா?' எனக் கேட்டேன். அப்போது ஒரு பொலீஸ் அதிகாரி, 'நாங்க என்ன சார், பண்ண முடியும்?' என வருத்தத்தோடு சொன்னார். இந்த விஷயத்தில் பொலீஸ் மீது எனக்கு கோபமில்லை. அவர்கள் யாருடைய சொல்படி அராஜகத்தை அரங்கேற்றினார்கள் என்பது தெரிந்ததுதானே!''

''பார்வதி அம்மாள் சென்னைக்கு வருவது நள்ளிரவு வரை தெரியாது என முதல்வர் சட்டமன்றத்தில் சொல்லி இருக்கிறாரே?''

''அவர் சென்னை வருவது மத்திய உளவுத்துறை மூலமாக சொல்லப்பட்டு, அன்று மாலையே கலைஞருக்கு தெரியும் என்பதுதான் உண்மை. மூலை முடுக்கில் யாரும் தும்மினால்கூட உளவுத்துறை மூலமாகக் கண்டுபிடித்துவிடும் கலைஞருக்கு, பார்வதி அம்மாள் வரும் செய்தி தெரியாதென்றால், முதல்வர் பதவிக்கே லாயக்கற்றவர் என்றுதான் அர்த்தம். நள்ளிரவில்தான் பார்வதி அம்மாள் விவகாரம் தெரியுமென்றால், இரவு பத்து மணிக்கே விமான நிலையத்தில் தமிழக பொலீஸை குவித்தது ஏனாம்? அவருக்கே தெரியாமல் பொலீஸ் வந்துவிட்டதா? அவர் சொல்லாமல்தான் பொலீஸ் என்னை நெட்டித் தள்ளியதா? புதிய சட்டமன்றக் கட்டடத் திறப்பு விழாவில் 'கருணாநிதியை கலந்து ஆலோசிக்காமல் நான் ஏதும் செய்வதில்லை' என பிரதமர் மன்மோகன் சிங் சொன்னாரே... அப்படியிருக்க, கலைஞருக்குத் தெரியாமல் சென்னை விமான நிலைய அதிகாரிகள் இப்படி ஒரு முக்கியமான முடிவை எடுத்திருப்பார்களா? ஈழத்தில் படு கொலைகள் நிகழ்ந்த போது ஒரு பக்கம் போருக்கு எதிராகத் தீர்மானம் இயற்றியும், இன்னொரு பக்கம் மத்திய அரசுக்கு உறுதுணையாகவும் இருந்து எப்படி நாடகமாடினாரோ.. அதை எல்லாம் விஞ்சத்தக்க அளவுக்கு இதிலும் கலைஞர் நாடகம் ஆடுகிறார். பிரபாகரனின் தாயார் சென்னைக்கு வருவதை கலைஞர் விரும்பவில்லை என்பதுதான் உண்மை!''

''பார்வதி அம்மாள் திருப்பி அனுப்பப்பட்டதற்கு தமிழக அரசோ தமிழக பொலீஸோ காரணமாக இருக்க வாய்ப்பில்லை என டாக்டர் ராமதாஸ் சொல்லி இருக்கிறாரே...''

''அப்படியானால், மத்திய அரசுதான் திருப்பி அனுப்பச் சொன்னதா? பார்வதி அம்மாளுக்கு இந்திய அரசுதானே விசா கொடுத்தது? ஆபிரிக்க அரசு கொடுக்கவில்லையே... அப்படி விசா கொடுத்தவர்களே எப்படி விரட்டி அடிப்பார்கள்? அந்த அம்மாள் சென்னையில் தங்கி சிகிச்சை பெறுவதில் கலைஞருக்கு ஆட்சேபனை இல்லையென்றால், உடனடியாக உள்துறை அமைச்சர் ப.சிதம்பரத்திடமே பேசி அதற்கு வழி செய்திருக்கலாமே... இந்த விஷயத்தில் ராமதாஸ் என்ன... மத்திய அரசேகூட, 'பார்வதி அம்மாள் திருப்பி அனுப்பப்பட்டதற்கு நாங்கள்தான் காரணம்' என அறிவித்தாலும், ஆச்சரியமில்லை! இத்தகைய அறிவிப்பை வெளியிட வைக்கும் முயற்சியில் இந்நேரம் கலைஞர் ஈடுபட்டிருப்பார்.''

''பார்வதி அம்மாளுக்கு ஏன் மலேசியாவில் சிகிச்சை அளிக்க முடியவில்லை?''

''பக்கவாதம், மறதி, உடல் சோர்வு, உயர் ரத்த அழுத்தம் உள்ளிட்ட வியாதிகளால் பார்வதி அம்மாளுக்கு மலேசியாவிலேயே சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால், அங்கே சென்னையில் உள்ள மருத்துவ வசதிகளை சுட்டிக்காட்டி, செல்லும்படி வலியுறுத்தி உள்ளார்கள். அதனால்தான் மலேசியாவில் இருக்கும் ஈழத் தமிழர்கள் சிலர் சிவாஜிலிங்கத்தின் உறவினர்களோடு பேசி, அவரை சென்னைக்கு அனுப்ப முடிவு செய்தார்களாம். பார்வதி அம்மாளைத் தாங்கிய விமானம் சென்னைக்கு வந்திறங்கிய உடனேயே அவரை விமானத்தில் இருந்து கீழே இறக்க விடாதபடி அதிகாரிகள் கெடுபிடி செய்ய... அந்த அம்மாளின் உதவிக்காக உடன் வந்திருந்த விஜயலட்சுமி என்ற பெண், 'எதற்காக அனுமதி மறுக்கிறீர்கள்?' என கேட்டிருக்கிறார். 'பார்வதி அம்மாள் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்' என்றார்களாம் விமான நிலைய அதிகாரிகள். அதோடு, அதே விமானத்தில் பார்வதி அம்மாளை திருப்பி அனுப்பும் முடிவை அவர்கள் சொல்ல... பயணக் களைப்பில் இருந்த அந்த மூதாட்டி, 'சிறுது நேரம் ஓய்வு எடுக்கணுமே' என்றாராம். அதற்கும் அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது.

மலேசியாவில் பார்வதி அம்மாளுக்கு வழங்கப்பட்ட விசாவின் காலக்கெடுவும் முடிந்திருந்த நிலையில், அங்கே திரும்பிச் செல்வதும் சாத்தியமற்றதாக... விமான நிலைய அதிகாரிகளிடம், 'புலிகள் இயக்கத்தில் பார்வதி அம்மாள் உறுப்பினராக இல்லை என்பதை இலங்கையில் உள்ள இந்திய தூதரகம் ஏற்கெனவே விசாரித்து விட்டது. அதன் பிறகே அங்கிருந்து வெளியே செல்ல ஆறு மாத விசா கிடைத்தது. இதற்கிடையில், மலேசிய விசாவும் முடிந்துவிட்டது. அதனால், பார்வதி அம்மாள் வேறு எந்த நாட்டுக்குமே போக முடியாது' எனச் சொல்லி மறுபடியும் அனுமதிக்காகப் போராடியிருக்கிறார் விஜய லட்சுமி. அதற்கும் அசைந்து கொடுக்காமல், பார்வதி அம்மாளை நள்ளிரவில் மலேசியாவுக்குத் திருப்பி அனுப்பியிருக்கின்றனர் விமான நிலைய அதிகாரிகள்.

அவசர கதியில் அவருக்கு ஒரு மாத கால விசாவை வழங்கியுள்ளது மலேசிய அரசு. அங்கு போய் இறங்கியதுமே அவருக்கு மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டது. 'ஐயா... ஐயா...' என தன் கணவர் வேலுப்பிள்ளை நினைவாகவே புலம்பிக்கொண்டிருந்தாராம் பார்வதி அம்மாள். 'சென்னைக்கு போகலையா? என்னை எப்போ சென்னைக்கு அழைச்சுட்டு போகப் போறீங்க?' என கேட்டிருக்கிறார். சென்னை போய் திரும்ப வந்ததே அவருக்கு முழுமையாக நினைவில் இல்லையாம். அதை மெது வாக எடுத்துச் சொன்னபோது, 'எதுக்கு அனுப்பினாங்க? அப்படி நாங்க என்ன பாவம் செஞ்சோம்? அவருக்கு என்ன பண்ணிட்டோம்?' என கலங்கியிருக்கிறார்.



''பிரபாகரன் தாயாரை சென்னையில் இறங்க வைப்பதற்கான அதிகாரம் தமிழக அரசுக்கு இல்லை என்றும் சொல்லப்படுகிறதே?''

''ஒரே ஒரு சம்பவத்தை இதற்கான பதிலாக சொல்கிறேன். ஈழ ஆர்வலரான தணிசேரன் எனது குடும்ப விழாவில் கலந்து கொள்வதற்காக, அமெரிக்காவிலிருந்து சென்னை வந்தார். அப்போது அவரை 'புலிகளின் ஆதரவாளர்' எனச் சொல்லி விமான நிலையத்திலேயே உட்கார வைத்தனர். அப்போது, எம்.பி யாக இருந்த நான், அப்போதைய உள்துறை அமைச்சரான அத்வானியிடம் உடனடியாகப் பேசி, அந்த ஈழ ஆர்வலர் தமிழகம் வர அனுமதி வாங்கிக் கொடுத்தேன். ஒரு சாதாரண எம்.பியால் முடிந்தது ஒரு முதல்வரால் முடியாது என்றால் யார் நம்புவார்கள்?''

''சென்னை வரவிடாமல் பார்வதி அம்மாளை தடுக்க வேண்டிய அவசியம் என்ன இருக்கிறது?''

''செம்மொழி மாநாடு நடக்கவிருக்கும் வேளையில் பிரபாகரனின் தாய் சென்னையில் இருந்தால், இலங்கைக் கொடூரங்கள் எல்லாம் மறுபடி கொந்தளிப்போடு நினைவு கூரப்படும்... இதனால் பல சிக்கல்கள் தனக்கு வரும் என நினைத்திருக்கிறார் கலைஞர். மாநாட்டுக்காக பன்னாடுகளிலும் இருந்து தமிழகத்துக்கு வரும் தமிழறிஞர்களும் பெருமக்களும் அவசியம் அந்த அம்மாளை சென்று பார்ப்பார்கள். அதெல்லாம் ஊடகங்களில் வெளியாகும். அத்தனை பேரும் வந்து தன்னைப் பற்றி மட்டுமே பேசி, வாழ்த்த வேண்டும் என்று காத்திருக்கும் கலைஞரால் இதைத் தாங்கிக் கொள்ள முடியாது.

இதையெல்லாம் எண்ணித்தான் பிரபாகரனின் தாயாரை சென்னைக்கு வரவிடாமல் தடுத்திருக்கிறார். பார்வதி அம்மாளை நெடுமாறன் ஐயா வீட்டில் தங்கவைத்து உரிய சிகிச்சைகள் மூலமாக அவரை குணப்படுத்த விரும்பியும், ஈவு இரக்கமற்று அதனை தடுத்திருக்கிறார் கலைஞர்.

தமிழகத்தின் தலையிலேயே மிதிப்பதுபோல் திருப்பதிக்கு வந்து வழிபாடு நடத்திவிட்டுப் போகிறார் ராஜபக்ஷ. அவருடைய மகன்கள் பெங்களூருக்கு வந்து கிரிக்கெட் பார்க்கிறார்கள். பாகிஸ்தான் விளையாட்டு வீரரான வாசிம் அக்ரமின் மனைவிக்கு உடல்நிலை மோசமடைந்த போது, விசா இல்லாமலே அவர் சென்னையில் இறங்கி தங்கவைக்கப்பட்டார். ஆனால், தமிழினத்தை சேர்ந்த 80 வயது மூதாட்டிக்கு இங்கே விசா இருந்தும் அனுமதி மறுக்கப்படுகிறது.



இத்தகைய இழிநிலைக்கு தமிழினம் ஒருபோதும் ஆளானது கிடையாது. கலைஞர் நிகழ்த்தும் இத்தகைய கொடுமைகளைப் பார்க்கையில் ஷேக்ஸ்பியரின் 'மக்பத்' நாடகம்தான் நினைவுக்கு வருகிறது. அதில் அரசன் டங்கன் படுகொலைக்குப் பிறகுசீமாட்டி மக்பத், 'அரேபியாவின் ஆயிரமாயிரம் வாசனைத் திரவியங்களை ஊற்றிக் கழுவினாலும் என் கையில் உள்ள கறைகள் நீங்காது. என் களங்கம் தீராது' என்பாள்... கலைஞரே, உங்களின் நிலையும் இப்படித்தான்... ஆயிரக்கணக்கான மாநாடுகள் நடத்தினாலும், போதும் போதும் என்கிற அளவுக்கு விருதுகள் வாங்கினாலும் தமிழினத்துக்கு எதிரான உங்கள் பாவங்களை உங்களால்

(26 ஆம் பக்கம் பார்க்க)



# உயிர் வலிக்கும் கணங்கள்....!!

வெய்யிலும் இனப்போரும் போட்டி போட்டுக் கொண்டு ஈழத்தமிழரை வாட்டி வறுத்தெடுத்த மே மாதத்தின் நெருப்பு நாட்களவை. 2009.

நான் ஒற்றைப் பனைமரத்தின் அருகோடு சிறைப்பட்டிருந்த பதுங்கு குழியின் வாசலிலே இருந்தேன். எந்நேரமும் அவ்விடம்தான் என் இருப்பிடம். எறிகணை ஏவும் ஒலி கேட்டதுமே குதித்து பதுங்கு குழியின் மூலையோடு குந்திக் கொள்வேன். நீண்ட நாள் அனுபவம் என்பதால் எறிகணை ஏவும் ஒலியை வைத்தே, அது எந்தப் பக்கம் வந்து வெடிக்கும் என்பதை புரிந்துகொள் வேன்.

என் உறவுகள் பலர் காப்பரணுக்குள்ளேயே இருந்தார்கள். மூச்சுமுட்ட முட்ட அரணுக்குள் ளேயே கிடப்பது என்னால் முடியாது. அதனால் தான் நான் வாசலிலேயே குந்திக்கொண்டிருப்பேன்.

அந்தக் கடுமையான நாட்களை எதிர்கொள் வதை விட சாவதையே அதிகம் விரும்பியவர்கள் பலர் இருந்தார்கள். என்னைப் போலவே அவர்களுக்கும் அநியாயமாகச் சாவது பிடிக்க வில்லை. அதனால் தான் உதிர்ந்துவிடும் கடற்கரை மணலையும் கிண்டி காப்பரண்கள் அமைத்துக் கொண்டிருந்தார்கள். எந்தநேரமும் அதிர்ந்து கொண்டிருக் கும் எறிகணை களில் எந்த எறிகணையில் எவரின் பெயர் எழுதப்பட்டுள்ளது என்பது எவருக்குத் தெரியும்.?

# கரைய மறுக்கும் கணங்கள்



எங்களது பதுங்கு குழிக்கு அருகே இன்னொரு கம்பிக்கொட்டில் இருந்தது. கம்பியில் விரித்து விடப்பட்ட தறப்பாளின் கீழ் ஓர் இளங்குடும்பம் வாழ்ந்தது. அக்குடும்பத்தலைவி பேரழகியாக இருந்தாள். அத்தனை இடப்பெயர்வுகளாலும், அவலங்களாலும், பசிபட்டினியாலும், வசதியீனங் களாலும் வாட்டிவிடமுடியாத அழகு அவளுடை யது. நான் ஒரு பெண்ணாக இருந்தும் கூட மஞ்சள் கலந்த அவளது அழகை ரசித்திருக்கிறேன். அத்தனை இடர்நிறைந்த நாட்களிலும் அந்த பெண் நெற்றியில் நிலாபோல வட்டமாக குங்குமம் வைத்திருப்பாள். அதற்குமேலாக திருநீற்றுக் குறி. எங்கள் பதுங்குகுழியைக் கடந்து தண்ணீருக் குப் போகும் போது என்னைப்பார்த்து நட்புடன் புன்னகைத்துவிட்டுப் போவாள்.

திடீரென்று ஒருநாள் அந்த பெண்ணின் அலறலை கேட்டு ஆடிப்போய்விட்டேன். அப்பெண்ணின் கணவர் போனவழியில் எறிகணை வீச்சில் சிதறிவிட்டாராம். வந்து சொன்னவர்கள் நின்று அழக்கூட நேரமின்றி அல்லது அப்பெண் ணின் கதறலைத் தாங்கும் வலுவின்றி உடனே சென்றுவிட்டார்கள். அப்பெண் கதறி அழ அவளது இளம் குடும்பத்தின் கொட்டில் பிய்ந்து தொங்கியது.

சத்தமிட்டபடி நான் ஓடியபோது அயலவர்களும் ஓடிவந்தார்கள். குருதிவழியக் காப்பகழிக்குள் கிடந்த அப்பெண்ணையும் தூக்கினார்கள். அழகே வடிவான அவள் மரணத்தின் எல்லையைத் தொட்டுவிட்டி ருந்தாள். முன்பின் அறியாத இரண்டு இளைஞர்கள் குற்றுயிராகக்கிடந்த குழந்தைகளை தூக்கிக்கொண்டு ஓடினார்கள். வயதுமுதிர்ந்த தாயார் மட்டும் இல்லாத கொட்டிலுக்கு முன்னே குந்தி இருந்து அழுது கொண் டிருந்தார். அவரின் முன்னே கிடத்தப்பட்டிருந்த அப்பெண்ணின் அழகை மணலும் குருதியும் மறைத்துவிட்டன.

இரவுப்பொழுது வந்தபின்னும் அந்தக் குடிலைத் தேடி எவரும் வரவில்லை. விடிந்த போதும் வயது முதிர்ந்த தாயார் மட்டுமே இருந்தார். அச்சமும் அழுகையுமாய் இருந்த வயதானஅவரை எவரும் பொருட்படுத்தவில்லை.

என்ர பிள்ளையை யாராவது புதைச்சு விடுங்கோவன் என்ற அந்த தாயாரின் கெஞ்சல் எனக்கும் வேதனையை ஏற்படுத்தியது. என் இயலாத காலைப் பார்த்து பெருமூச்சு விட மட்டுமே என்னால் முடிந்தது.

அன்றைய வெயிலில் அந்த பெண்ணின் உடல் கருகிக் கொண்டு கிடந்தது. கந்தலாகிய துணிகளால் மழலைகளும், வயோதிபத் தாயாரும் கூடவே ஓவென்று கதறினார்கள். சொந்தபந்தம் ஊர் உறவென்று எவருமே தேடிவந்து துக்கம் பகிரமுடியாத நேரமது. அவளே அழுது அவளே தன்னைத் தேற்றிக்கொள்ள வேண்டிய நிலைமை.

அந்தக் கதறலைக் கேட்க யாருமே இல்லையா? நான் அவளிடம் சென்றேன். அந்த தேவதை அழுவதை என்னால் பொறுத்துக்கொண்டிருக்க முடியவில்லை. என்றாலும் என்னிடம் அவள் சொல்லிச் சொல்லி அழும்போது அவளின் துயரம் பாதியாகக் குறைந்துவிடும் என்ற எண்ணம் எனக்கு.

பகலும் இரவும் ஒன்றேபோலான அடுத்த நாள் விடிந்தது. கையில்போட்டு நக்கிக் கொண்டு குடிக்கக் கூட தேநீர் இல்லை. என் பதுங்குகுழி வாசலில் குந்திக்கொண்டு அக்காவின் கொட்டிலையே பார்த்துக் கொண்டு இருந்தேன். திடீரெனக் கேட்ட எறிகணை ஏவு ஒலி என்னைப்பிடித்துத் தள்ளியது. குதித்து வீழ்ந்தேன் அகழிக்குள். அந்த ஒலி காதுச் சவ்வுகளை மோசமாய் தாக்கியது. காதுகளைப் பொத்திக்கொண்டு அகழிக்குள் கிடந்தேன். என் காப்பரணைச்சுற்றிலும் பொலபொலவெனக் கொட்டின சிதறுதுண்டுகள். என் தலை முழுவதும் மணல் கொட்டியது. வெடிமருந்தின் நாற்றம் நாசியில் உறைத்தது. கிண்ண்ண்.... என்று தலைக்குள் அதிர்ந்த ஓசை குறைய தலையை ஆட்டிக்கொண்டு எழுந்து சுற்றிலும் பார்த்தேன். அந்த தன் மகளை மூடிவிட்டு அருகிலேயே இருந்தார் அந்த தாயார். மகளின் பிணத்தை நாய்களோ காகங்களோ குதறிவிடாமல் காவலிருந்த அந்த தாயாரிடம் மாலையில் சென்றேன்.

'அம்மாச்சி, என்ர மருமகன் செத்து இராண்டு நாள் ஆகலயேம்மா அதற்குள் என்ர மகளையும் இழந்துவிட்டேன். என்ர பிள்ளையை நான் எங்க கொண்டுபோய் புதைக்க அம்மா?'

நான் பக்குவமாகச் சொன்னேன். 'அம்மா, இப்ப சுடுகாடெல்லாம் இல்லை. சடலங்களை எடுத்துக்கொண்டுபோக ஒருதரும் வரமாட்டங்க. இந்த பங்கருக்குள்ளேயே புதைச்சுட்டு நீங்க போங்கம்மா. இனி இவ்விடத்தில் இருக்கேலாது'

இதை நான் முதல்நாளே சொல்லியிருக்கலாம் அப்போது அந்த தாயாரல் அதை ஏற்றுக்கொள்ள முடிந்திராது. நான் மீண்டும் வந்து பகுங்குகுழிக் குள் இறங்க பல எறிகணைகள் கூவிக் கொண்டு வந்தன. அவற்றின் அதிர்வுகள் ஓய எட்டிப் பார்த் தேன். நிலத்தில் கிடந்த அந்த தாயாரும் எழுந்து போய்க்கொண்டிருந்தார்.

சற்று நேரத்தில வந்த இரண்டு ஆண்கள் அந்த அழகுத் தேவதையின் உடலை, பாயோடு தூக்கி பதுங்கு குழிக்குள் போட்டு மணலைத் தள்ளி மூடினார்கள். கும்பியாகக் குவித்துவிட்டு, தாயாரையும் கூட்டிக்கொண்டு சென்றார்கள்.

எறிகணை வீச்சு அவ்விடத்தைத் தவிடு பொடியாக்கியது. அயலவர்கள் இடம் பெயரத் தொடங்கினார்கள். மணலில் கால் புதையப் புதைய நடந்த மக்களின் கண்களில் எதுவுமில்லை. என் கையாலாகாத் தனத்தை நொந்தபடி குந்திக் கொண்டிருந்தேன். பொழுது மங்கிக்கொண்டு போனது.

திடீரென்று அருகில் உழவுயந்திரத்தின் ஒலி கேட்டு எட்டிப்பார்த்தேன். பாதை என்று எதுவுமற்ற இடத்தில் போகும் இடமெல்லாம் பாதைதானே! உழவுயந்திரம் சிறிய முட்பற்றை களை விலக்கி வந்துகொண்டிருந்தது. மூட்டை முடிச்சுகளும் பெண்களும் குழந்தைகளுமாக இருந்த பெட்டியை இழுத்துக்கொண்டுவர உழவுயந்திரச் சாரதி பெரும் பிரயத்தனம் பட்டுப் கொண்டிருந்தார். மணல், டயர்களை நகரவிடாமல் இறுக்கிப் பிடித்தது. சரசரவென மண்ணை உதறி எறிந்தபடி போய்விட்ட பின்பு அந்த பெண்ணைப் புதைத்த இடத்தைப் பார்த்தேன். எந்த அடையா ளத்தையும் காணமுடியவில்லை. சமதரையாகி விட்டது அந்த மணல். அந்த அழகியைப் பற்றிச் சொல்ல எனக்குப் பெயர் கூடத் தெரிய வில்லையே! அந்த அடையாளத்தை வைத்துக் கொண்டு இன்னுமொரு உழவியந்திரம் வந்து கொண்டிருந்தது.

கண்ணீரைத் துடைத்தபடி நான் பகுங்கு குழிக்குள் குதித்தேன். என்னை தாண்டிக் கொண்டுபோன ஒலி பெரிய சத்தமாய் வெடித்து, என்மீது மணலைக் கொட்டியது.

அந்தச் சுடுகாட்டைவிட்டு நான் என் தோழிகளோடு புறப்பட்டபோது சிலரது உடல்கள் எரிந்துகொண்டிருந்தன.

# உடல் புதைக்க கிடங்கு வெட்டினால் மலம் மலம் புதைப்பதற்கு குழி வெட்டினால் பிணம்

**அந்த இறுதி நாட்களில் வன்னியில் நேர்ந்த அவலங்கள்**

*2008 டிசம்பர் 14 ஆம் திகதி வழமைக்கு மாறாக அதிகாலையிலிருந்து கடும் எறிகணை வீச்சாக இருந்தது. அதனால் நாங்களும் இன்னும் இரு குடும்பங்களும் இரவோடு இரவாக வட்டுவாகல் நோக்கிப் போக வேண்டியிருந்தது.*

*அங்கு வீதியில் இருந்து 50 மீற்றர் தள்ளி இரண்டு தறப்பாள் கொட்டகைகள் போட்டு இருந்தோம். முல்லைத்தீவு ஊடாக இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் செல்வதற்காக வந்தவர்கள், எமது இடத்தில் கிட்டத்தட்ட 75 க்கும் மேட்பட்ட இருப்பிடங்களை அமைத்திருந் தனர். இதில் என்ன புதுமை என்றால் இவ்வளவு ஆட்களும் ஒரு சிறிய பனை வடலிப் பற்றைக் குள் தான் மலம் கழிப்பதற் காகச் செல்ல வேண்டும். சிலர் மண்வெட்டியால் வெட்டி யிருப்பார்கள். சிலர் வெட்டாமல் பாதையில் இருப்பார்கள்.*

*அன்று எறிகணைத் தாக்குதலால் பலர் இறந்தனர். அவர்களின் உடல்களை புதைப்பதற்கு கிடங்குவெட்டினார்கள். வெட்டும் இடம் எங்கும் மலம். கால் வைக்கும் இடம் எங்கும் மலம். அந்த இடத்தில் புதைப்பதற்கு மக்கள் விடவில்லை. ஏன் என்றால் அந்த இடத்தில் ஆக கூடுதலாக 15 உடல்களைத்தான் புதைக்கலாம். சடலங்களைக் கொண்டு வந்தவர்கள். சண்டை பிடித்துவிட்டு கிட்டத்தட்ட 20 சடலங்களைப் புதைத்து விட்டார்கள்.*

*அடுத்தநாள் அதிகாலை நான் மலம் கழிப்பதற்காகச் சென்றேன். அங்கு ஓர் இடத்தில் சிறிய கிடங்கு வெட்ட ஒரு சிறிய குழந்தையின் கால் தெரிந்தது. என்ன செய்வது? அதை மூடிவிட்டு அருகில் மலம் கழித்தேன். அடுத்தநாள் அதிகாலை எனது மகளை மலம் கழிப்பதற்குக் கூட்டிக்கொண்டு போனபோது புதைக்காமல் இரு சடலங்கள் அந்த இடத்தில் கிடந்தன.*

*15 ஆம் திகதி மக்கள் மலம் கழிப்பதற்குக் கூட இடமில்லாமல் 'சொப்பிங்' பையில் இருந்துவிட்டு அந்த இடத்தில் எறிந்தார்கள். ஒரு மனிதன் எப்படி வாழக் கூடாதோ அப்படி வாழ்ந்த வாழ்க்கை அது.*

கி. அமலன்.

# இந்திய வெளியுறவு இணை அமைச்சர் ராஜினாமா!




# ஐ.பி.எல்லின் அசிங்கங்கள் அம்பலமாகும்!

கோலாகலமாக நடந்துவரும் ஐ.பி.எல் போட்டிகளில் ஒரு கரும் புள்ளியாக கொச்சி அணியின் கொள்வனவு விவகாரம் மாறியுள்ளது. இதன் எதிரொலியாக இந்திய வெளியுறவு இணை அமைச்சர் சஷி தரூர் ராஜினாமா செய்துள்ளார். தற்போது நடைபெறும் ஐ.பி.எல் போட்டி மூன்றாவது ஆண்டாக நடைபெறுவதாகும். அடுத்த பருவ காலத்தில் மேலும் இரண்டு அணிகளைச் சேர்க்க அதன் நிர்வாகம் முடிவு செய்தது. டெல்லி, கொல்கத்தா, பஞ்சாப், மும்பை, சென்னை, ஹைதராபாத், பெங்களூர், ராஜஸ்தான் ஆகிய எட்டு அணிகளுடன் இன்னும் இரண்டு அணிகளைச் சேர்க்க நடந்த புதிய ஏலத்தில் கொச்சி, புனே ஆகிய அணிகள் கோடிக் கணக்கில் விற்பனையாகின. தென்னிந்தியாவின் 4 மாநிலங்களில் தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா ஆகியவற்றையும் போலன்றி கேரளமாநிலம் கிரிக்கெட்டில் சற்றே பின்தங்கிய மாநிலமாகும். எனவே ஐ.பி.எல்லில் கேரளா சார்பாக அணி ஒன்று களமிறக்கப்பட்டிருக்கவில்லை. இந்தக்குறையை தீர்க்கும் வகையில் கொச்சி அணி உருவாக்கப்பட்டது. இந்தியாவில் கிரிக்கெட் நிர்வாகத்தில் அரசின் ஆதிக்கம் கொடிகட்டிப் பறப்பது சாதாரணவிடயமாகும். அதன்படி கேரள மாநிலத்தவரும், மத்திய வெளியுறவு இணை அமைச்சருமான சஷி தரூர் கொச்சி அணி உண்டாவதில் ஆர்வம் காட்டினார். அந்த அணியை ஏலத்தில் வாங்கிய RENDEZVOUS நிறுவனத்தின் பங்குகளை தனது தோழி சுனந்தாவுக்கு தரூர் குறைந்த விலையில் வாங்கிக் கொடுத்தார் என்பதே அவர் மீதான குற்றச்சாட்டு. மத்திய அமைச்சர் என்ற கோதாவில் கொச்சி அணி உருவாக்கப்பட அழுத்தம் கொடுத்த அவரது நடவடிக்கை தன் மாநிலமான கேரளா மீதான அன்பின் வெளிப்பாடு என கருதப்பட்டது. ஆனால், அணிவிற்கப்பட்டதும் தனது செல்வாக்கைக் கொண்டு அதன் பங்குகளை தனது "பினாமி" பேர்வழியான சுனந்தாவுக்கு குறைந்த விலையில் எடுத்துக் கொடுத்தமை என்பது ஊழல் நடவடிக்கை என எதிர்க்கட்சிகள் காட்டம் காட்டியுள்ளன.

கொச்சி அணிக்கு பதிலாக குஜராத்தின் பெயரில் ஓர் அணியை உருவாக்க ஐ.பி.எல் நிர்வாகி லலித் மோடி முயன்றார் என சஷி தரூர் குற்றம் சாட்டியிருந்தார். குஜராத் முதல்வர் நரேந்திரமோடியும் ஐ.பி.எல் நிர்வாகி லலித் மோடியும் நண்பர்கள். நரேந்திர மோடியும் ஒரு கிரிக்கெட் பிரியரே. எனவே சஷி தருரை உச்சிவிட்டு குஜராத் அணியை உண்டாக்க இரண்டு மோடிகளும் முயன்றனர் என சஷி தரூர் குற்றம் சாட்டி இருந்தார். இதற்கு பதிலடியாகவே தருரை மாட்டிவிட்டுள்ளார் லலித் மோடி. ஐ.பி.எல் அணிகளை உருவாக்குவதிலும் விற்பது வாங்குவது உள்ளிட்ட கொடுக்கல் வாங்கல்களிலும் பெரும் ஊழல் நடப்பதான சந்தேகம் ஏற்கனவே நிலவி வந்தது. இப்போது அதை உறுதிப்படுத்தும் விதமாக லலித் மோடி சஷி தரூர் மோதல் விவகாரம் உருவெடுத்துள்ளது. அதன் முதல் பலி சஷி தரூர். அடுத்த பலி லலித் மோடியா வேறு யாருமா என்பது விரைவில் தெரியவரும்.

**-எஸ். சுரேந்திரஜித்**

இதற்கிடையில் ஐ.பி.எல் அலுவலகங்கள் மோடியின் அலுவலகம் போன்ற பல ஸ்தலங்களில் வருமானவரித்துறை அதிரடியாக சோதனை நடத்தியுள்ளது. தற்போதைய குழப்பத்தின் தொடர்ச்சியே இதுவாகும். ஐ.பி.எல்லின் புதிய 2 அணிகளையும் சேர்த்தால் மொத்தம் 10 அணிகள் வந்துவிடும் இதற்கு மேலும் அணிகளின் எண்ணிக்கையை அதிகரித்தால் போட்டித்தொடரை மாதக்கணக்கில் நீடித்து நடத்த நேரிடும். எனவே இதற்கு மேலும் அணிகளின் தொகையை அதிகரிக்க முடியாது. அப்படிப் பார்த்தால் குஜராத்துக்கு என்று ஓர் அணி இனிமேல் உருவாகவே முடியாது. இது முதலமைச்சர் நரேந்திர மோடிக்கு கவலை தரும் விடயமே. மேலும் குஜராத் சார்பாக ஓர் அணி வந்தால் அதில் விளையாட அம்மாநிலத்தை சேர்ந்த முக்கிய வீரர்கள் தயாரில்லை. இர்பான் பத்தான் மற்றும் யூசுப் பத்தான் ஆகிய இரு சகோதரர்கள் தான் குஜராத் சார்பாக சமீபகாலமாக இந்திய அணியிலும், ஐ.பி.எல்லிலும் விளையாடி வருகின்றனர். இவ்விரு முஸ்லிம்களும் குஜராத்தில் 2002 இல் நடந்த முஸ்லிம் இனப் படுகொலை குறித்து நரேந்திரமோடி மீதும் பி.ஜே.பி மீதும் அதிருப்தியுடன் உள்ளனர். கலவரம் கடுமையாக பாதித்த பரோடா நகரைச் சேர்ந்தவர்களே இவ்விரு முஸ்லிம் சகோதரர்களும். எனவே குஜராத் அணி உருவானால் அதில் இவர்களை இடம்பெறவைக்க மோடி பிரம்மப்பிரயத்தனம் செய்ய வேண்டியிருக்கும். மறுபுறம் கேரளா பி.ஜே.பியின் அரசியல் பிரசன்னம் இல்லாத மாநிலமாகும். எனவே அங்கு கொச்சி அணி உருவாவதில் பி.ஜே.பிக்கு அக்கறையில்லை. ஆனால் காங்கிரஸுக்கோ கேரளா செல்வாக்கு உள்ள மாநிலம். இந்த அடிப்படையில் கேரளா - குஜராத் போட்டாபோட்டி விளக்கிக் கொள்ளப்படலாம். இதுதவிர லலித் மோடி பி.ஜே.பிக்கு நெருக்கமான ஒருவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. ராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்த இவர் முன்பு பி.ஜே.பி. சார்பில் அம்மாநில முதல்வராக இருந்த வசுந்தரா ராஜே சிந்தியாவின் நெருங்கிய நண்பராவார். ராஜஸ்தானும் குஜராத்தும் அண்டை மாநிலங்கள் என்பதும் கவனிக்கப்படவேண்டும்.

ஐ.பி.எல். சர்ச்சையில் மாட்டிய சஷ்தரூர் முன்பும் பல தடவை காங்கிரஸ் கட்சியை சங்கடத்தில் ஆழ்த்தியவர். சமீபத்தில் பிரதமர் மன்மோகன் சவூதி சென்றிருந்த போது இந்தியா - பாக் பிரச்சினையில் சவூதி மத்தியஸ்தம் வகிக்கலாம் என்று சஷி தரூர் சொன்னது பெரும் பிரச்சினையில் முடிந்தது. காரணம் காஷ்மீர் விடயத்தில் கூடப் பாகிஸ்தானே தலையிட முடியாது என்பதே இந்திய நிலைப்பாடு. அப்படி இருக்க இன்னொரு மூன்றாம் தரப்பை இந்தியா ஏற்பது என்று நினைத்துக் கூட பார்க்க முடியாத விடயமாகும். பி.ஜே.பி. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் அப்போதே சஷிதருரை நீக்க வேண்டுமென கோரி இருந்தன. தான் அவ்வாறு சொல்லவில்லை எனக்கூறி சஷி தரூர் அப்போது தப்பிக் கொண்டார். இந்த முறை அவரால் தப்பமுடியவில்லை. ஐ.நாவில் துணைச் செயலாளராக இருந்த தரூர் கலாநிதிப் பட்டம் பெற்ற சர்வதேச சட்டநிபுணரும் எழுத்தாளரும் ஆவார்.

அப்படிப்பட்டவர் தான் அங்கம் வகிக்கும் அமைச்சரவைக்கு சங்கடமாக நடந்துகொண்டது அவரது புத்திஜீவித்தனத்தின் வெளிப்பாடா அல்லது உள்நாட்டு அரசியலின் சூட்சுமங்களை புரிந்து கொள்ளாத தன்மையா என்பது தெரியவில்லை. பான் கி-மூனுடன் ஐ.நா. செயலாளர் பதவிக்குப் போட்டி போட்ட சஷி தருரை காங்கிரஸ் கட்சி முதல் முறையாக கடந்த தேர்தலில் தான் தலைநகர் திருவனந்தபுரம் தொகுதியில் களமிறக்கியது. இதற்கு முன்பு மற்றுமொரு தடவையும் சோனியா காந்திக்கு அதிருப்தி ஏற்படும் வகையில் சஷிதரூர் நடந்து கொண்டார். அரசின் செலவை குறைக்கும் வகையில் அமைச்சர்கள் விமானத்தில் சிக்கன வகுப்பில் பயணிக்கவேண்டுமென சோனியா சென்ற வருடம் பணித்திருந்தார். இது குறித்து வேண்டப்படாத கருத்து சொன்ன தரூர் ''ஆமாம் 'மாடுகளின் வகுப்பில்' பயணம் செய்ய எனக்கும் விருப்பமே'' என்றார். அவ்வாறாயின் மற்ற விமான பயணிகள் மாடுகளா என எதிர்க் கட்சிகள் சர்ச்சை உண்டாக்கின. இவ்வாறு சஷி தருரின் புத்திஜீவித்தனம் சோனியாவுக்கு உதவியாக அல்லாது உபத்திரவமாகவே இருந்துள்ளது. அவரைக் கழற்றிவிட சோனியா தருணம் பார்த்திருந்தார் எனவும் கூறப்படுகிறது. இந்தியாவில் சஷி தரூர் போலவே சுப்பிரமணியசுவாமி, ராம் ஜேத் மலானி (பிரபல குற்றவியல் வழக்கறிஞர்) போன்ற புத்திஜீவிகள் நடை முறை அரசியலின் தாற்பரியங்களை உணராது ஊறுகாய்களாக இருப்பது ஒரு நெருடலான விஷயமாகும். ஆனால், விதிவிலக்காகலாம், மன்மோகன் போன்ற புத்திஜீவிகளும் இருப்பதும் மறுக்கப்பட முடியாது.

இதேவேளை கோடிபணம் கொட்டிய ஐ.பி.எல்லுக்கு விழுந்த அடியாக இந்த சர்ச்சை அமைந்துள்ளது. மற்றொரு அடியாக பெங்களூரில் போட்டி ஒன்று நடக்கமுன் குண்டு ஒன்று வெடித்தமையும் சென்ற வாரம் நடந்துள்ளது. பாகிஸ்தன் உள்ளிட்ட பலரின் பொறாமையை தூண்டும் வகையில் இந்திய ஐ.பி.எல் உலகப்புகழுடன் நடந்துவந்தது. இப்போது அதன் மீதும் கறை படியத்தொடங்கி உள்ளது எனலாம். இந்தியாவுக்கு பெருமளவு அந்நிய செலாவணி இதன் மூலம் கிட்டியது. அதுவும் பாதிக்கப்படலாம். லலித்மோடி மீது பலரும் பொறாமை கொண்டிருந்தனர். நடந்த சம்பவங்களின் விளைவாக அவர் பதவி நீக்கப்படலாம் என்ற ஊகமும் வெளிக்கிளம்பியுள்ளது. ஆனால் காங்கிரஸ் அவரை பழிதீர்க்க முயல்வதாக பி.ஜே.பி குற்றம் சாட்டியும் உள்ளது. இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் அவசர கூட்டமும் இது குறித்து சென்ற வாரம் விவாதித்திருப்பது குறிப்பிடத்தக்கது. ★


லலித் மோடி

# கழிப்பறைகளை மிஞ்சிய செல்போன்கள்



மக்கள் தொகையில் உலகின் இரண்டாவது மிகப் பெரிய தேசமும், பொருளாதாரத்தில் மிக விரைவாக வளர்ந்த நாடுமான இந்தியாவில் கழிப்பறைகளை விட செல்போன்களின் எண்ணிக்கையே மிக அதிகம் என்ற கவலைக்குரிய புள்ளி விவரங்கள், ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளன.

''மக்கள் தொகையில் பாதிப் பேர் செல்போன்கள் வைத்திருக்கும் வகையிலான பொருளாதார நிலையைக் கொண்டிருப்பதும், பாதிப் பேருக்கு மேற்பட்டோர் அடிப்படைத் தேவையான 'கழிப்பறை'யை பயன்படுத்த முடியாதிருப்பதுமே இந்தியாவின் கவலைக்குரிய முரண்பாட்டு நிலை'' என்கிறார் நீர், சுற்றுச்சூழல் மற்றும் சுகாதாரத்துக்கான ஐக்கிய நாடுகள் பல்கலைக்கழகத்தின் இயக்குனர் ஜாபர் அதீல்.

கனடாவில் உள்ள ஐக்கிய நாடுகள் பல்கலைக் கழக ஆய்வு முடிவின்படி, 2008 ஆம் ஆண்டில் இந்திய மக்கள் தொகையில் 54 கோடியே 50 லட்சம் பேர் (45 சதவீதத்தினர்) சொந்தமாக செல்போன் வைத்திருக்கின்றனர். 36 கோடியே 60 லட்சம் பேர் (31 சதவீதத்தினர்) மட்டுமே கழிப்பறையை உபயோகிக்கின்றனர் என்பது தெரியவருகிறது.

பத்து ஆண்டுகளுக்கு முன்பு 100 பேருக்கு 0.35 ஆக இருந்த செல்போன் பயன்பாட்டு விகிதம், தற்போது 100 பேருக்கு 45 செல்போன் என்ற நிலையை எட்டியிருக்கிறது.

உலக அளவில் மொத்தமுள்ள 6.7 பில்லியன் மக்கள் தொகையில் 1.1 பில்லியன் மக்கள் கழிப்பறை வசதியை பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளனர்.

இந்தச் சூழலுக்கிடையே, '2025 இல் அனைவருக்கும் கழிப்பறை வசதி' என்ற இலக்கை அடைவதற்கான செயல்பாடுகளுக்கு உலக நாடுகளுக்கு ஐக்கிய நாடுகள் அமைப்பு அழைப்பு விடுக்கிறது.

வளரும் நாடுகளில் மக்களின் சுகாதாரத்துக்கு கொடுக்கப்படும் முக்கியத்துவத்தை வெளிக்கொண்டு வரும் வகையிலேயே, மக்களின் செல்போன் பயன்பாடு மற்றும் கழிப்பறை வசதி ஆகியவற்றுக்கு இடையிலான ஒப்பீட்டு ஆய்வை மேற்கொண்டிருக்கிறது, ஐக்கிய நாடுகள் பல்கலைக்கழகம்.

2015க்குள் உலக மக்கள் தொகையில் பாதிப் பேருக்கு கழிப்பறை வசதி அமைக்கப்படுவதற்கு 358 பில்லியன் டாலர்கள் தேவைப்படுவதாக ஐக்கிய நாடுகள் பல்கலைக்கழகம் மதிப்பட்டுள்ளது.

சொந்தமாக வசிக்க வீடு இல்லாத ஏழை மக்கள்தான் கழிப்பறை இல்லாமல் குப்பை மேடுகளையும் புதர் மறைவுகளையும் பயன்படுத்துகின்றனர். பிறகு கை, கால் கழுவ அசுத்தமான குட்டை நீரையே பயன்படுத்துகின்றனர். இதனால், நோய்த் தொற்றுகளுக்கு ஆளாகின்றனர்.




உலகம் முழுக்க அன்றாடம் சுமார் 4,000 குழந்தைகள் இத்தகைய நோய்த் தொற்றால் மட்டுமே இறக்கின்றர் என்கிறது புள்ளிவிவரம்.

இந்தியாவைப் பொறுத்தவரையில், கிராமப்புறங்களிலும் நகரப் பகுதிகளிலுமுள்ள குடிசைப் பகுதிகளில் தான் மக்கள் தங்களுக்கென்று தனி கழிப்பறை வசதி இல்லாமல் அவதியுறுகின்றனர்.




## கௌரி கானுடன்



ஷாரூக் தன் மனைவி கௌரிகானுடன் ஒரு படம் நடிக்க இருக்கிறார். இருவரின் தனிப்பட்ட அனுபவங்களை வைத்தே கதையை உருவாக்கியிருக்கிறாராம் கரண் ஜோஹர்.

## ஐ.பி.எல்லில் வாய்ப்பு?



ஐ.பி.எல். டி.வி. ஷோவில் இருந்து இந்த வருடம் அதிரடியாகத் தூக்கி விட்டதால், மீண்டும் சான்ஸ் பிடிப்பதில் தீவிரமாக இருக்கிறார் மந்த்ரா பேடி. ஐ.பி.எல். பார்ட்டிகளில் கலந்து கொள்ளும் மந்த்ரா, கிரிக்கெட் வீரர்களுடன் நெருங்கிப் பழகி அவர்களிடம் 'மனேஜர்' வாய்ப்பைக் கேட்கிறாராம்.

## ஐஸ்வரியா புத்தகம்



ஐஸ்வர்யாராயின் வாழ்க்கை வரலாற்றை எழுத இருக்கிறார் பிரபல எழுத்தாளர் ஷோபா டே. ''பெண்கள், ஐஸ்வரியா ராய் போல் இருக்க வேண்டும் என்று விரும்புகின்றனர். ஆண்கள் ஐஸ்வரியா ராய் போலத் துணை வேண்டும் என நினைக்கின்றனர், எனக்குப் பெரிய சவால் காத்திருக்கிறது'' என்கிறார் ஷோபா.

# நிலாவிலே வீடு வாங்கலாம்




நிலாவையும் துண்டு போட்டு விற்கிறது பிரிட்டனில் உள்ள இன்டர்நேஷனல் லூனார் எம்பஸி என்ற அமைப்பு. நிலாவில் நிலம் வாங்க வேண்டுமானால், 1,650 ரூபாயை (24பவுண்டுகள்) இணையம் மூலமாகச் செலுத்த வேண்டும். யார் பெயருக்கு உறுதிப் பத்திரம் வேண்டும் என்கிற தகவல் அவசியம். அவ்வளவுதான். கலை வேலைப்பாடு நிறைந்த பெட்டியில் பத்திரம் வந்து சேரும். கூடவே ஐ.நா. பொதுச் சபை, அமெரிக்கா, ரஷ்யா ஆகிய நாடுகளின் அதிகாரபூர்வ அனுமதிக் கடிதங்களின் நகல்களும் இருக்கும். நிலாவில் திலத்துண்டு தெரியாமல் நீங்கள் அல்லாடக் கூடாதே? அதனால், நிலாவில் உங்கள் நிலம் இருக்கும் இடத்தின் வரைபடத்தையும் அனுப்புவார்கள். நிலாவின் சட்ட விதிகள், விதிமுறைகள், உரிமைகள் அடங்கிய தொகுப்புப் புத்தகமும் உண்டு. நிலாவில் வாய்க்கால் வரப்பு தகராறு ஏற்பட்டால், இந்தத் தொகுப்புப் புத்தகத்தின் தீர்ப்பே இறுதியானது. நிலத்தை மட்டும்தான் விற்பார்கள். போக்குவரத்து வசதிகளை நீங்கள் தான் செய்துகொள்ள வேண்டும்.

செவ்வாய், வெள்ளி, புதன் கிரகங்களிலும் நிலத்துண்டுகள் வாங்கி காதலிகளுக்குப் பரிசளிக்கலாம். முதலில் வருபவருக்கே முன்னுரிமையாம்.













# மறக்க முடியாத பரிசு

அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷை நோக்கி தன் சப்பாத்துகளை வீசி எறிந்து உலகைப் பரபரப்பாக்கியவர் முன்டாதர் அல்ஜெய்தி.

ஜோர்ஜ் புஷ்ஷின் வாழ்க்கையில் மறக்கவே முடியாத பரிசு வழங்கிய முன்டாதர் ஒரு பத்திரிகையாளர். இந்தச் சம்பவத்துக்குப் பின் இஸ்லாமிய நாடுகளின் ஹீரோ ஆகிவிட்டார் அவர். ஈராக் மக்கள் அவரது தைரியத்தையும் கோபத்தையும் பாராட்டி விதவிதமான பரிசுகள் கொடுக்க ஆரம்பித்தார்கள். அவரின் முன்னாள் அதிபர் ஒருவர் பிரமாண்ட வீடு ஒன்றைப் பரிசாக அறிவித்தார்.



பாலஸ்தீனத்தைச் சேர்ந்த பல பெண்கள் முன்டாதரைத் திருமணம் செய்துகொள்ள விருப்பம் தெரிவித்தார்கள். மொராக்கோவில் வசிக்கும் ஓர் ஈராக்கியர் தனது மகளையே அவருக்கு பரிசாகக் கொடுக்க முன் வந்தார். அத்துடன் முன்டாதரின் சப்பாத்துகளுக்கு 10 மில்லியன் டாலர் பரிசு தருவதாகவும் அறிவித்தார். இன்னொரு மொராக்கோ கோடீஸ்வரர் தங்கச் சேணை பூட்டிய குதிரையைப் பரிசாக அறிவித்தார். சவூதி அரேபியாவைச் சேர்ந்த கோடீஸ்வரர் ஒருவர் புஷ் மீது வீசப்பட்ட அந்த சப்பாத்துகளை 47 கோடி ரூபாய் கொடுத்து வாங்கிக்கொள்வதாக அறிவித்தார்.

வெளியே வந்ததும் இந்தப் பரிசு அறிவிப்புகளுக்கு அவர் செவி சாய்க்கவில்லை. இனிமேல் பத்திரிகையாளராகப் பணிபுரிய விருப்பம் இல்லை. ஈராக் குழந்தைகளுக்காக அநாதை இல்லம் ஒன்றை தொடங்கப் போகிறேன் என்கிறார் முன்டாதர்!

# முகம் மாறும் முகங்கள்

சிறுகதை

அலேக்ஸ் பரந்தாமன்



குழாய்க் கிணற்றில் தண்ணீர் எடுத்துக் கொண்டு, கிரவல் றோட்டில் ஏறி நடந்து நாற்சந்தி கழிந்து திரும்புகையில், ஐயாவை யாரோ கூப்பிடுவது தெரிந்தது. அவர் திரும்பிப் பார்த்தார்.

எதிரே அவள் தனது இரண்டு வயதுக் குழந்தையை இடுப்பிலே சுமந்தபடி வந்து கொண்டிருந்தாள்.

''எங்கை ஐயா தண்ணீ எடுத்துக் கொண்டு வாறியள்?'' அவள் கேட்டுக் கொண்டே அவர் அருகில் வந்து சேர்ந்தாள்.

''என்னை மறந்து போனியளா...? நான்தான் விஜயமலர்'' அவள் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டாள்.

''ஓ...! நீயா?''

அவரது பதிலில் வியப்பும் ஒருவித அருவருப்பும் தொக்கி நிற்பதை அவதானித்துக் கொண்டாள்.

''என்ன இந்தப் பக்கம்...?'' அவளோடு கதைக்க விருப்பமற்று இருந்தாலும், அவள் முன் எடுத்தெறிஞ்ச மாதிரி முகத்தைத் திருப்பிக் கொண்டு போவது தன் வயதுக்கு மதிப்பில்லை என்ற காரணத்தினால், சும்மா ஒரு ஒப்புதலுக்கு அவளோடு கதைக்க முற்பட்டார்.

''ஆஸ்பத்திரியால வாறேன் ஐயா. பிள்ளைக்குச் சுகமில்ல...'' என்று கூறியவள் அழத் தொடங்கினாள்.

ஐயா ஒன்றும் கூறாது அவளையே பார்த்துக் கொண்டிருந்தார்.

வன்னிப் போர்க்கள நிலவரத்துள் குடும்பத்தில் யாரையாவது கொடுத்தாளோ அல்லது சாப்பாட்டுக்குக் காசேதும் இல்லாமல் கஷ்டப்படுகிறாளோ தெரியவில்லையென அவர் தனக்குள் சிந்தித்தபடி நிற்க, அவளே மீண்டும் கூறத் தொடங்கினாள்.

''என்ர மனிசன சி.ஐ.டி. புடிச்சுக் கொண்டு போய் ஆமியிட்ட குடுத்திட்டுது. அவங்கள் தடுப்பிலே வைச்சிருக்கிறாங்கள். அவர் வன்னியில இருக்கேக்க இயக்கத்துக்கு விசுவாசமாக வேலை செய்தவர். ஏதோ குடும்பக் கஷ்டத்தின் நிமிர்த்தம் அவங்களோட போய்ச் சேர்ந்தது தானே. அதுவும் காவல்துறை வேலை எண்டது. அவங்கட இயக்கத்தில கொஞ்சம்கூட மரியாதை இல்லாத தொழில். தெருத் தெருவாகக் காவல் நிற்க வேணும். லீவு போட்டிட்டு வீட்டில வந்து நிற்கக் கூட விடமாட்டாங்கள். 'வோக்கி'யில் அறிவிச்சு வரச்சொல்லி நிற்பாங்கள். சம்பளமும் ஏதோ அற்பசொற்பம் தான். அவருடைய சம்பளத்தில குடும்பம் நடத்தமுடியாமல் நான் எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பேன். இப்ப அவரை காவல்துறை என்று பிடிச்சிட்டாங்கள். அவர் சம்பளத்துக்குத்தானே வேலை செய்தவர்.?'' அவள் கூறிக் கொண்டே கைக் குட்டையால் கண்களையும், மூக்கையும் துடைத்துக் கொண்டாள்.

ஐயா ஒன்றும் கூறவில்லை. புயலடித்து ஓய்ந்தது போல் இருந்தது அவருக்கு. அவர் அமைதியாகவே நின்றார்.

''ஐயா எந்த வலயத்தில் இருக்கிறியள்?''

அவளது அழும் படலம் அகன்று இப்போது நிதானமாய் வருவதை உணர்ந்து கொண்ட ஐயா, தான் 'எம்' வலயத்தில் இருப்பதாக அவளுக்குக் கூறினார்.

''நான் 'ஓ' வலயத்தில் இருக்கிறேன் ஐயா..'' அவர் கேட்காமலேயே அவள் கூறினாள்.

''நான் யாழ்ப்பாணம் போகப் பதிஞ்சிருக்கிறேன் ஐயா. இரண்டு மாசத்துக்கு முன் இராமநாதன் முகாமில் இருந்தனான். உதவிக்கு ஆட்களில்லை. இஞ்ச ஆனந்தகுமாரசாமி முகாமில சித்தியின்ர மகன் இருக்கிறதாகக் கேள்விப்பட்டு முகாம் மாறி வந்திருக்கிறேன். நீங்கள் எங்க போகப் பதிஞ்சிருக்கிறியள்?''

''புதுக்குடியிருப்புக்கு...''

''சரி ஐயா நேரம் போகுது. நான் போட்டு வாறேன்'' அவள் கூறி விட்டு நடக்கத் தொடங்கினாள், ஐயாவும் நிலத்தில் வைத்த தண்ணீர்க் கான்களை எடுத்துக் கொண்டு தகர வீட்டை நோக்கிச் செல்கையில்... வன்னியில் உள்ள அந்த அச்சுப் பதிப்பகம், ஒப்பு நோக்குநர் பகுதி, அங்குள்ள பணியாளர்கள் எல்லாமே பழைய நினைவுகளாய் அவர் நெஞ்சினுள் அலை மோதத் தொடங்கின.

***

புதுக்குடியிருப்பு கிராமத்தின் மேற்குப் புறத்தை அண்டியிருந்தது ஓர் அச்சுப் பதிப்பகம். வறுமைக்குட்பட்ட குடும்பங்களில் இருந்து வந்துவர்களே அங்கு பெரும்பாலானோர் அதுவும் பெண்பணியாளர்களே அதிகம். தேநீர் ஊற்றிக் கொடுக்கும் ஐயாவில் இருந்து அலுவலகத்தில் பணி புரியும் பணியாளர்கள் வரை அதிகம் படிக்காதவர்களாகவே இருந்தார்கள். சாதாரண தரப் படிப்போடு அங்கு வந்து தங்கள் ஆளுமைகளாலும் அனுபவங்களாலும் தொழிலில் உயர்ந்திருந்தனர் பலர்.

பதிப்பகத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கும் பலபகுதிகளில் ஒப்பு நோக்குநர் பகுதியும் ஒன்றாகும். அதில்தான் ஐயாவும், அவளும், வேறு சிலரும் பணிபுரிந்தனர்.

அதிலும் அவள்....? ஒப்புநோக்குப் பகுதியினரால் 'நோனார்', 'நாச்சியார்' என்றும் மற்றைய பணியாளர்களால் 'அடங்காப்பிடாரி' என்றும் கேலிப் பெயர்கள் கொண்டு அழைக்கப்பட்டாள். அவளது நிமிர்த்தமான செயற்பாடுகளால் பதிப்பகத்தை நிருவகித்த பொறுப்பாளரும் கூட சில வேளைகளில் அவளைச் சீர்படுத்த முடியாமல் திக்குமுக்காடிப் போவதுமுண்டு. இத்தனைக்கும் காரணம் தனது கணவன் ஒரு காவல் துறை அதிகாரியென்ற எண்ணமே யாகும். ஒப்புநோக்குப் பகுதியில் அவளால் ஒரு நாளைக்கேனும் ஒரு பிரச்சினை தலைதூக்காமல் போகாது. தூக்கிய பிரச்சினைகளும் இலகுவில் தீர்வு காணப்படுவதாகவும் இருக்காது.

''என்னோட முட்டி மோதினா நடக்கிறதே வேற...'' அவள் வெளிப்படையாகவே அடிக்கடி கூறும் வார்த்தைகள் இவை. இந்த வார்த்தைகளைக் குறித்து ஐயா அவள் இல்லாத சமயங்களில் தன் பகுதியில் இருக்கும் மற்றைய பணியாளர்களோடு கருத்துக்கள் பரிமாறுவதுண்டு.

''அவளுக்குத் தன்ர புருஷன் காவல் துறையாக இருப்பது குறித்து, ஒரு தலைக்கனம். தன்னோட யாராவது பிரச்சினைப்பட்டால் மனுசனைக் கொண்டு 'உள்ளுக்க போட' எத்தனிப்பாள்'' ஐயா தனக்குப் பக்கத்தில் இருந்த பணியாளர் ஒருவருக்குக் கூறிக் கொள்கிறார்.

''எங்கட ஒப்புநோக்குப் பகுதி மேலாளர் சரியில்லை. அவர் ஒரு பெட்டைப் பயல். அதுவும் 'நாச்சியார்' என்றால் நாய் மாதிரி வழியிறான்; வாலாட்டிக் கொண்டு திரியுறான்'' - ஐயாவுக்குப் பக்கத்தில் இருந்தவர் தனது கருத்தைக் கூறினார்.

''அன்னை பூபதி தினத்தன்று சகபணியாளர் ஒருவருக்கு 'றின்ஸ் தண்ணி' ஊற்றினதோட நாச்சியாரை வேலையால நிற்பாட்டியிருக்க வேணும். பொறுப்பாளரும் தவறிவிட்டார்'' - இது இன்னொரு பெண் பணியாளரின் கருத்து.

ஐயா அந்தச் சம்பவம் குறித்து அறிந்திருந்தாலும், அன்றைய தினம் அவர் வேலைக்குச் சமுகமளிக்காததால், யதார்த்தம் என்னவென்று சரியாகப் புரியப்படவில்லை. ஒவ்வொரு பணியாளர்களும் ஒவ்வொரு விதமாய்க் கூறுவதையும், பொறுப்பாளர் சம்பவத்தை நேரில் பார்த்த பணியாளர்களைக் கொண்டு அறிக்கை எழுதி வாங்கிய பின்பு, நாச்சியாரை பதினைந்து நாட்கள் கட்டாய லீவில் வீட்டுக்கு அனுப்பி வைத்ததோடும் விடயம் முடிவுற்றுப் போனது.

ஒப்பு நோக்குப் பகுதியில் அவள் ஐயாவோடுதான் பெரும்பாலும் முட்டி மோதுவதுண்டு. வீரவணக்கப் பிரசுரங்களுக்கு ஓய்வான நேரத்தில் ஐயா கவிதைகள் எழுதி வைப்பது அவளுக்கு ஏனோ பிடிப்பதில்லை. 'வேலை நேரத்தில பேப்பர்களுக்கு கவிதை எழுதுகிறார்....' என்ற கருத்தை அவள் பணியாளர்கள் மத்தியில் திணிக்க முற்பட்ட போது ஐயா நரசிங்க அவதாரமே எடுத்து விட்டார்.

''இந்தா.... இஞ்ச பார் பிள்ளை, நீ ஒப்புநோக்கு வேலைக்கு வந்தால் ஒப்புநோக்கு வேலையை மட்டும் பார்த்திட்டு சம்பளத்தை வாங்கிக் கொண்டு போ. நான் கதை, கவிதை எழுதுறதைப் பற்றி நீ கதைக்கத் தேவையில்லை. அது உனக்கான வேலையும் இல்லை'' என்றார் ஐயா.

''என்ர சம்பளம் வாங்க எனக்குத் தெரியும். என்னோட முட்டி மோதினா என்ன நடக்கும் தெரியுமே...?'' என்றாள் அவள்.

''என்னடி நடக்கும்?'' இருந்த கதிரையை விட்டு ஐயா ஆவேசமாக எழுந்த போது அருகில் இருந்த இன்னொரு பணியாளர் ஐயாவை இழுத்துப் பிடித்தார்.

''என்ன அடிக்கப் போறீரோ...? எங்க அடியும் பார்ப்பம்... இப்பவே போய் நான் என்ர அவருக்குச் சொன்னேன் என்றால், என்ன நடக்கும் தெரியுமே ...?''

''போய்ச் சொல்லடி... உன்ர புரிஷன் காவல்துறையாக இருந்தால் என்ன கொம்பே...? கூட்டிக் கொண்டு வா அவனை இஞ்ச....'' என்றார் ஐயா.

''என்ன அவரை மரியாதையில்லாமல் அவன் - இவன் எண்டு கதைக்கிறாய்...?''

''பொத்தடி வாயை... அடங்காப்பிடாரி'' ஐயாவைக் கதிரையில் அமரச் செய்த சகபணியாளர் இப்போதுதான் வாயைத் திறந்தார்.

''ஐயான்ர வயசென்ன உன்ர வயசென்ன? கொஞ்சம் கூட வயதுக்கு மூத்தவர் என்ற மரியாதையில்லாமல் கதைக்கிறாய். காவல்துறை எண்டது மக்களுக்கு காவலாய், இருந்து சேவை செய்கிறதே ஒழிய பெருமையடிக்கிற விடயம் அல்ல. வெளியில என்னவென்றால் பெண்ணடிமை, பெண் விடுதலை என்றெல்லாம் கோஷம் போடுதுகள். நீ என்ன பெண்ணா? இல்ல பேயா?''

''ஒப்புநோக்குப் பகுதியில் நிகழும் பிரச்சினையானது அலுவலகம், கணினி மற்றும் வைண்டிங் பகுதியென எங்கும் பரவ, எல்லோரும் தத்தம் தலைகளை வெளியே நீட்டிப் பார்த்து விட்டு விமர்சிக்கத் தொடங்கினார்.

கடைசியில் பதிப்பக மேலாளர் வந்து நிலைமையைச் சீர்செய்து பொறுப்பாளரிடம் ஒப்புவிக்கப் போவதாகக் கூறிவிட்டுச் சென்றார். ஆயினும், பொறுப்பாளர் அந்தப் பிரச்சினை குறித்து விசாரிக்கவுமில்லை. அவளை வேலையில் இருந்து விலக்கவுமில்லை.

நாட்கள் மெல்லமெல்ல நகர்ந்து கொண்டிருந்தன. வன்னிப் பெரு நிலப்பரப்பின் மீது போர் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டபோது, அவரவர்கள் தம்பாட்டில் இடம்பெயர்ந்து போய்க் கொண்டிருந்தனர். ஆரம்பத்தில் அவள் குடும்பமும் உடையார்கட்டு - சுதந்திரபுரம் பகுதியில் இருப்பதாக ஐயா கேள்விப்பட்ட போதும், அவர் அது பற்றி அலட்டிக் கொள்ளவில்லை. அவரும் இரணைப்பாலைக்குச் சென்று, பின்பு அங்கிருந்து ஒவ்வொரு இடமாக அலைந்து தற்போது செட்டிக்குளம் - ஆனந்தகுமாரசுவாமி முகாமில் வந்து சேர்ந்திருக்கிறார்.

***

இன்று தற்செயலாக அவளைச் சந்தித்ததில் அந்தப் பழைய சம்பவங்கள் அவர் மனதில் வந்து, சிந்தனை பலதைக் கிளறிவிட்டுச் சென்றிருக்கின்றன.

தனது கணவன் ஒரு காவல்துறை அதிகாரி என்ற மமதையில், அவள் போட்ட ஆட்டங்கள் எல்லாம் ஒடுங்கிப் போன நிலையில்... இன்று தன் புருஷன் 'சம்பளத்துக்கு வேலை செய்கிற ஊழியன்' என சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு கதைப்பதில் இருந்து, முகம் மாறும் அவளது முகத்தையும் குணத்தையும் இனி எங்கு கண்டாலும் காணாதது போல போய் விட வேண்டுமென நினைத்துக் கொண்டே தனது வீட்டைப் போய்ச் சேர்ந்தார் ஐயா. *

# ஓராண்டை நெருங்கும் ஈழத்துக் கொடூரங்கள்!



மே மாதம் தொடங்க இன்னும் சில நாட்களே இருக்கின்றன! நெஞ்சில் கொஞ்சம் இரக்கத்தையும் ஈரத்தையும் வைத்திருப்பவர்கள் அத்தனை பேரையும் ரத்தக் கண்ணீர் வடிக்கவைத்த ஈழத்துக் கொடூரங்கள் அரங்கேறி ஓராண்டு முடியப்போகிறது. இறந்து மண்ணுக்குப் போனவர் எண்ணிக்கை கூட முழுமையாக இன்னமும் எடுக்கப் படவில்லை. மனரீதியாக இறந்துபோய் நாட்களை நகர்த்திக்கொண்டு இருப்போர் நிலை குறித்தும் முழுமையாக அறிய முடியவில்லை. ஆனால், அவர்கள் இரண்டு தேர்தல்களை நடத்தி முடித்து விட்டார்கள். இன்றைய ஈழத்து நிலவரங்கள் குறித்து தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார்.



சரத் பொன்சேகா

**"ஈழத்துக் கொடூரங்கள் நடந்து முடிந்து ஓராண்டு ஆகப்போகிறது. என்ன மாதிரியான மாற்றங்கள் ஏற்பட்டுஉள்ளன?"**

"கொடூரங்கள் நடந்து முடியவில்லை. இன்னமும் தொடர்ந்துகொண்டுதான் இருக்கின்றன. ஈழத் தமிழர் வாழ்க்கையில் எந்த மாற்றமும் இல்லை. ஏமாற்றமே இன்னமும் தொடர்கிறது. மேலும் மேலும் துன்பங்கள் அதிகமாகி வருகின்றன. முள்வேலி முகாமில் இருந்த மக்களை உலக நிர்ப்பந்தத்துக்குப் பயந்து விடுவிப்பதாக ராஜபக்ஷ கூறினார். முழுமையாக அவர்களை விடுவிக்கவில்லை. ஒரு பகுதி மக்களையே விடுவித்துள்ளார். விடுவிக்கப்பட்டவர்களும் தங்களது ஊருக்குப் போனால் அவர்கள் வீடுகள் எல்லாம் தகர்த்து தரைமட்டமாக்கப்பட்டு உள்ளன. எனவே, இருப்பதற்கு இடம் இல்லாமல் பாடசாலைகள், கோயில்களில் அடைக்கலம் புகுந்தார்கள். ஐக்கிய நாடுகள் அமைப்பைச் சேர்ந்த அதிகாரிகள், வன்னிப் பகுதியில் ஏராளமான இராணுவ முகாம்கள் இருப்பதால் தமிழ்ப் பெண்கள் வெளியே நடமாட அஞ்சுகின்றனர் என்று சொல்லி இருக்கிறார்கள். முகாம்களில் இருப்பவர்களுக்கும் அளிக்கப்பட்டு வந்த உதவிகள் அரை குறையாகவே கிடைக்கின்றன. சுதந்திரமாக நடமாடலாம் என்று இவர்களுக்குச் சொல்லப்பட்டு இருந்தாலும், எங்கு போவது என்று தெரியாமல் திகைத்துப் போயிருக்கிறான் தமிழன். முகாம்களில் இல்லாத தமிழர்களும், துன்பங்களை அனுபவிக்கிறார்கள். இதைவிடக் கொடுமையான செய்தி என்னவென்றால், தமிழர் பகுதிகளில் சிங்கள மக்கள் குடியேற்றப்படுகிறார்கள். அவர்களுக்காக புத்தக் கோயில்கள் அமைக்கப்படுகின்றன. சிங்களப் பள்ளிக்கூடங்கள் திறக்கப்படுகின்றன. தமிழ்ப் பள்ளிகள் மூடப்பட்டு வருகின்றன. இதனால் தமிழ்க் குழந்தைகள் சிங்களம் படித்தாக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுவிட்டது. தமிழ்ப் பெயர் தாங்கிய ஊரின் பெயர்கள் சிங்களமாக மாற்றப் படுகின்றன. அதாவது, தமிழ்ப் பகுதிகள் என்று இலங்கையில் எதையும் சுட்டிக் காட்டிவிடக் கூடாது என்பதற்கான வேலைகள்தான் இந்த ஓராண்டு காலத்தில் நடந்து முடிந்திருக்கின்றன!"

**"ஜனாதிபதி தேர்தலில் வென்றது மாதிரியே நாடாளுமன்றத் தேர்தலிலும் ராஜபக்ஷ வென்றிருக்கிறார். இந்தத் தொடர் வெற்றியை எப்படிப் பார்க்கிறீர்கள்?"**

"தமிழர்கள் வாழும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 70 சதவிகிதத் தமிழர்கள் இந்தத் தேர்தலைப் புறக்கணித்திருக்கிறார்கள். அதாவது, சிங்கள தேசத்தின் இனவாத அரசியலுக்குள் எமது நலன்களைத் தேட நாங்கள் விரும்பவில்லை என்பதைத்தான் இந்தப் புறக்கணிப்பின் மூலம் தமிழர்கள் உலகத்துக்கு அறிவித்திருக்கிறார்கள். பொதுவாகவே, இலங்கையில் இதுவரை நடந்த அனைத்துத் தேர்தல்களிலும் 75 சதவிகித வாக்குகள் பதிவாகும். ஆனால், வரலாற்றில் முதன்முறையாக 55 சதவிகித வாக்குகள்தான் பதிவாகி உள்ளன. தமிழ் மக்கள் மட்டுமல்ல; சிங்கள மக்களும் இந்தக் கேலிக்கூத்தான நடைமுறைகள் மீது நம்பிக்கை இழந்துவிட்டார்கள் என்பதையே இந்த முடிவுகள் காட்டுகின்றன!"

**"பொன்சேகா, தனது தொகுதியில் வெற்றிபெற்றுள்ளாரே?"**

"ராஜபக்ஷ, பொன்சேகா மோதலின் விளைவாக சிங்கள மக்கள் பிளவுபட்டு உள்ளார்களே தவிர, தமிழர்களுக்கு இதனால் எந்த ஆதாயமும் கிடைக்கப் போவது இல்லை. கடந்த ஆண்டின் இதே ஏப்ரல் மாதங்களில் நடந்த கொடுமைகளுக்கு அவர்கள் இருவரும்தானே காரணம். இவர்களின் மோதல் என்பது தேர்தல் மோதலாக மட்டும் நின்றுவிடாது. ராணுவத்துக்குள்ளும் மோதல் வெடிக்கும் அபாயம் இருக்கிறது. பொன்சேகாவுக்கு ஆதரவான ராணுவ அதிகாரிகள் பதவியில் இருந்து விலக்கப்பட்டு உள்ளனர். இது ராணுவத்தினர் மத்தியில் பெரும் கொதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

நாடாளுமன்றத் தேர்தலில் பொன்சேகா ஓர் உறுப்பினராக வென்றிருந்தாலும் அவரை நாடாளுமன்றத்துக்குள் வர அனுமதிக்க மாட்டார்கள். 1980-களின் முதற் பகுதியில் மரண தண்டனை விதிக்கப்பட்டு இருந்த டெலோ தலைவர் குட்டிமணி, சிறையில் இருந்தபோதே வட்டுக்கோட்டை தொகுதி உறுப்பினராக நியமனம் செய்யப்பட்டார். ஆனால், அவரை நாடாளுமன்றம் செல்வதற்கு அனுமதிக்காமல் கொலை செய்துவிட்டார்கள். இந்தக் கதி பொன்சேகாவுக்கும் ஏற்படலாம்!"

**"இதையெல்லாம் உலக நாடுகள் அமைதியாகப் பார்த்துக் கொண்டு இருக்கக் காரணம்?"**

"வரலாற்றில் இதுவரை இல்லாத அளவுக்கு இலங்கை, சர்வதேச அழுத்தங்களுக்கு முகம் கொடுத்தாக வேண்டிய நெருக்கடியில் இருக்கிறது என்பதுதான் உண்மை. போர்க் குற்றவாளியாக ராஜபக்ஷவை மேற்கு நாடுகளும் ஐ.நா-வும் குற்றம் சாட்டி வருகின்றன. அதில் இருந்து தப்புவதற்கு அவர் பெருமுயற்சி செய்து வருகிறார். கடந்த ஜனவரி மாதம் அயர்லாந்து தலைநகர் டப்ளினில் கூடிய நிரந்தர மக்கள் நீதிமன்றம் என்ற அமைப்பு நடத்திய விசாரணையின் இறுதியில் வழங்கப்பட்ட தீர்ப்பில் 'ராஜபக்ஷ போர்க் குற்றவாளியாக விசாரிக்கப்பட வேண்டியவர்' என்று தெளிவாகத் தீர்ப்பளித்து உள்ளது. இந்தத் தீர்ப்புக்குப் பிறகு, பிரிட்டிஷ் அரசாங்கம், 'நாங்கள் இலங்கைக்கு இதுவரை ஆயுதம் வழங்கியதற்காக வருத்தம் தெரிவிக்கிறோம். இனி வழங்க மாட்டோம்' என்று மன்னிப்பு கேட்டுள்ளது.

இலங்கையில் இருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதியாகும் ஆடைகளுக்கு இதுவரை கிடைத்து வந்த வரிச் சலுகையை ஐரோப்பிய ஒன்றியம் ரத்து செய்துள்ளது. உலக நாடுகள் இந்தக் கொடூரத்தை உணர்ந்துள்ளன. ஆனால், இந்தியாதான் இலங்கைக்கு பொருளாதார ரீதியாகவும் ராணுவரீதியாகவும் உதவி செய்துவருகிறது. இந்தியக் கடற்படைக் கப்பல்கள் திருகோணமலைக்குச் சென்று சிங்களக் கடற்படைக்குப் பயிற்சி அளித்து வருகின்றன. தமிழ் மீனவர்களைக் காப்பாற்ற வக்கற்ற இந்தியக் கடற்படைக்கு ஏன் இந்த வீண் வேலை? இந்திய அரசும் கருணாநிதி அனுப்பிய தூதுக் குழுவும் தவிர, உணர வேண்டியவர்கள் அனைவரும் ஈழத்துக் கொடுமையை உணர ஆரம்பித்து இருக்கிறார்கள்!"

**"சீனாவின் ஆதிக்கம் இலங்கையில் இந்த ஓராண்டு காலத்தில் அதிகமாகி இருப்பதாகச் சொல்லப்படுகிறதே?"**

"இலங்கையில் சீனா அதிகமாகக் காலூன்றுவது இந்துமாக் கடல் மார்க்கம் அவர்களது கட்டுப்பாட்டில் போவதற்குத்தான் வழிவகுக்கும். இதை மேற்கு நாடுகள் விரும்பவில்லை. அவர்களைவிட இது இந்தியாவுக்குத்தான் பெரும் ஆபத்தாக முடியும். ஏற்கனவே, இந்தியாவைச் சுற்றி உள்ள நேபாளம், மியான்மர், வங்காளதேசம் ஆகிய நாடுகளில் சீனா பலமாக வேரூன்றிவிட்டது. பாகிஸ்தானும் நெருங்கிய கூட்டாளி ஆகி விட்டது. எஞ்சியிருந்த இலங்கையும் சீனாவின் பக்கம் சாய்ந்து விட்டது. இந்தியாவைச் சுற்றி சீனா உருவாக்கி வரும் பேராபத்தை டெல்லியில் உள்ளவர்கள் உணரவில்லை. 'சீனாவைவிட நான் அதிகமாக உதவிகள் செய்கிறேன்' என்று இந்தியா கையாளும் தந்திரம் தற்கொலைக்குச் சமம். இந்தியாவைத் தனது நேச நாடாக ராஜபக்ஷ எப்போதும் நினைக்க மாட்டார். அதை டெல்லி எவ்வளவு விரைவாக உணர்கிறதோ அது நம்முடைய நாட்டுக்கு நல்லது!"

**"விடுதலைப் புலிகள் அமைப்பு இன்று இயங்குகிறதா?"**

"ஈழத் தமிழர் பிரச்சினை இன்று உலகளாவிய பிரச்சினையாக இருப்பதற்கு பிரபாகரனும் விடுதலைப் புலிகள் இயக்கமும் செய்துள்ள தியாகம்தான் காரணம். 30 ஆண்டுகாலம் புலிகள் நடத்திய போராட்டத்தால் தான் தமிழர்கள் பாதுகாக்கப்பட்டனர். 2 லட்சம் தமிழர்கள் உயிர் இழந்தும், 45 ஆயிரம் புலிகள் வீர மரணத்தைத் தழுவியும், 10 லட்சம் தமிழர்கள் சொந்த மண்ணில் வாழ முடியாமல் அகதிகளாக வெளியேறியும், 5 லட்சம் தமிழர்கள் சொந்த நாட்டிலேயே எல்லாவற்றையும் இழந்து தவித்த ஈழத்து சோகம் சொல்லி மாளாது. ஆனாலும், தங்கள் துன்பத்துக்குத் தமிழீழமே தீர்வு என்பதைத் தமிழர்கள் உறுதியாக நம்புகிறார்கள். இப்போது நடந்திருப்பது தற்காலிகப் பின்னடைவு என்றுதான் கருதுகிறார்களே தவிர, எல்லாம் முடிந்துவிட்டது என்று எவரும் நினைக்கவில்லை. புலிகளை அழித்துவிட்டோம்



மஹிந்த ராஜபக்ஷ

என்று கொக்கரிக்கிற ராஜபக்ஷ, கூடுதலாக ஒரு லட்சம் பேரை ராணுவத்தில் சேர்க்கிறார். ஆயுதங்களை வாங்கிக் குவிக்கிறார். புலிகள் அமைப்பு இயங்குகிறது.

**"ஏற்கனவே கேட்கப்பட்டதுதான்... பிரபாகரன் இருக்கிறார் என்று இன்னமும் எப்படி உறுதியாகச் சொல்கிறீர்கள்?"**

"பிரபாகரனின் நெருங்கிய வட்டாரத்தைச் சேர்ந்தவர்களிடம் இருந்து கிடைத்து வந்த தகவலை வைத்துதான் நான் உறுதியாகக் கூறுகிறேன்.

பிரபாகரன் உள்பட முக்கியத் தளபதிகளை ஒழித்துவிட்டதாக ராஜபக்ஷ சொல்வதை சிங்கள மக்களே நம்பவில்லை. இன்னமும் அவர்களுக்கு அச்சம் இருக்கிறது. பிரபாகரன் தலைமையில் அந்தப் போராட்டம் எந்த நேரத்திலும் வெடிக்கலாம். எப்போது எந்தக் காலகட்டத்தில் என்பதை பிரபாகரன் மட்டுமே முடிவு செய்ய முடியும். உற்ற தருணம் நோக்கி அவர் காத்திருக்கிறார். அந்தக் காத்திருப்பு வீண் போகாது!"

சலனமின்றிச் சொல்லி முடிக்கிறார் பழ.நெடுமாறன்!

*(நன்றி: இணையம்)*



# வெறுப்பு எந்த நேரத்திலும் தலைகாட்டாத குடும்ப வாழ்க்கை வெற்றியைத் தரும்

சென்ற வாரம் குடும்ப வாழ்வில் கணவனின் மீது மனைவிக்குள்ள பொறுப்புக்களை விலாவாரியாகப் பார்த்தோம். இவ்வாரம் மனைவி மீது கணவனுக்குள்ள பொறுப்புக்களைப் பார்ப்போம்.

**கணவனின் கடமைகள்**

சம்பளமில்லாத சமையல்காரி, ஊதியம் இல்லாத வேலைக்காரி, பிள்ளை பெற்றுத் தரும் இயந்திரம், அடங்கிக் கிடக்க வேண்டிய அடிமை இப்படியான மனப்பாங்குகள் இன்னமும் சிலரிடம் கலந்திருக்கின்றன. ஆனால் குடும்ப வாழ்வில் இன்னோரு அங்கமான பெண்கள் மீது கணவன்மாருக்குள்ள கடமைகள் உள்ளன.

கணவன் மனைவியைப் பெண்ணிற்கே உரிய தனித்தன்மையோடும், தனிக்கவனத்தோடும் நடத்திட வேண்டும். மனைவினது கண்ணியம் காக்கப்பட வேண்டும். கருணையோடு அவளை நடத்திட வேண்டும். அவளுடைய உரிமைகளும் மதிக்கப்பட வேண்டும். வெறுப்பு எந்த நிலைமையிலும் தலைகாட்டிவிடக் கூடாது.

தனது உரிமைகள் மதிக்கப்பட




வில்லை என்ற பதற்றமோ, பயமோ அவளுக்கு ஏற்பட்டுவிடக்கூடாது. இதிலிருந்து பெறப்படும் இன்னொரு உண்மை என்னவெனில், எந்த நிலையிலும் மனைவியின் உரிமைகளைப் பறித்திடவோ, தடுத்திடவோ கூடாது என்பதாகும்.

மனைவி மீது சற்றும் அன்பு செலுத்தாமல், அவளது உரிமைகளும் மதிக்கப்படாமல் போய் விடுமானால் அந்த மண ஒப்பந்தத்திலிருந்து பிரிந்து பிறிதொரு புதுவாழ்வைத் தேடிக் கொள்ளும் உரிமையில் எவரும் ஒரு பெண்ணுக்குக் குறுக்கே நின்றிட முடியாது.

மனைவியாகத் தனக்குக் கிடைப்பவள் பெரும் தியாகம் செய்துதான் வருகிறாள் என்பதைக் கணவன் உற்றுக் கவனித்துக் கொள்ள வேண்டும். பிறந்த இடத்திலும் வேலைக்காரி, வாழ்ந்த இடத்திலும் வேலைக்காரி என்ற அந்தஸ்தில் ஒரு பெண் வாழ்வதாக இருந்தால் அவளது துயரத்தை ஆண்கள் அக்கறையோடு சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்.

மனைவி கணவனிடம் ஆலோசனை செய்யும் போது, தன்னிடம் கூறப்படும் ஒரு கருத்தை குடும்ப தலைவன் புறக்கணிப்பது கூடாது.

கணவன் தலைமை தாங்கும் குடும்பங்களில் குடும்பத் தலைவராக உள்ள கணவர் தனக்குக் கீழ் உள்ளவர்களை அழைத்து ஆலோசனை செய்ய வேண்டும். குடும்பத்திலுள்ள மனைவியும் மற்றுமுள்ளோரும் குடும்பத் தலைவனான கணவருக்குரிய ஆதரவையும் ஒத்தழைப்பையும் முழுமையாக வழங்க வேண்டும்.

**குழந்தைகளின் உரிமைகளும் பெற்றோரின் கடமைகளும்**

சில நேரங்களில், பெற்றோர் குழந்தைகளின் பாதுகாப்பில் அளவுக்கதிகமாகக் கவனம் செலத்துபவர்களாக இருப்பார்கள். சிலவற்றின் போது அவர்கள் குழந்தைகள் விடயத்தில் அலட்சியமாகவும் இருந்து விடுவதுண்டு.

குழந்தைகள் என்போர் வாழ்வின் அவைக் கூட்டுச் சொத்துக்களாவர். பெற்றோருக்கும் அவர்கள் பெருமை சேர்ப்பவர்கள்.

இத்தகைய பொக்கிஷங்களாக கருதப்படும் குழந்தைகள் சில நேரங்களில் துன்பங்களின் ஊற்றாகவும் மாறிவிடுவதுண்டு. இன்னும் சில கட்டங்களில் அவர்கள் வீண் பெருமை, தற்பெருமை, ஆணவம், இழி செயல்கள் ஆகியவற்றைக் கொண்ட

**-ஏ.எச்.ஏ.ஹுஸைன்-**

வர்களாகவும் வலம்வரக் கூடும்.

இவை குறித்துப் பெற்றோர் கவனமாக இருந்திட வேண்டும். குழந்தைகளை சமுதாயத்தில் சிறந்த பிரஜைகளாக உருவாக்குவதில் பெற்றோருக்குத் தீர்க்கமான பொறுப்புண்டு. குழந்தைகள் வழி கேடில்லாத புனித நிலையிலேதான் பிறக்கின்றன. அவர்களை அந்தப் புனித இயற்கை நிலையிலிருந்து வழிகேடர்களாக, நெறி பிறழ்ந்தவர்களாக மாற்றுவது அக்குழந்தைகளின் பெற்றோர்தான்.

குழந்தைகள் சுதந்திரமாக வாழ்வதற்குரிய எல்லா உரிமைகளையும், வாய்ப்புக்களையும் அனுபவிக்கும் அருகதை பெற்றவர்கள்.

குழந்தைகளின் உயிர்களைப் பாதுகாத்திட வேண்டியது பெற்றோரின் கடமையாகும்.

குழந்தைக்கு இருக்கும் இன்னொரு மறுக்க முடியாத உரிமை ''கண்ணியமான பிறப்பு'' என்பதாகும். இந்தக் கண்ணியமான பிறப்பு என்பது முறைப்படியாக கணவன்-மனைவி உடன்பட்டுக் கொண்ட வாழ்க்கை ஒப்பந்தத்தின் கீழ் வருகிறது.

குழந்தைகளுக்கு சிறந்த கல்வியைத் தேடித் தருவதும், அவர்க்ள் வாழ்வில் வளம்பெற வழிகாட்டுவதும் நற்செயல்களில் தலையானவையாகும்.

தொடர்ந்து வரும் தொடர்களில் குழந்தைகள் சார்பான மற்றுமுள்ள விவரங்களை நோக்குவோம்.

உங்களது
அந்தரங்க பிரச்சினைகள் மற்றும் குடும்பப் பிரச்சினைகள், சந்தேகங்கள் தொடர்பான கேள்விகளுக்குப் பதிலளிக்கிறார் உளநல ஆலோசகர் ஏ.எச்.ஏ.ஹுஸைன்.
கேள்விகள் வந்துசேரவேண்டிய முகவரி:
'உளநல ஆலோசனை'
சுடர் ஒளி வாரமலர்,
85, ஜெயந்தமல்லி மாராச்சி மாவத்தை, கொழும்பு - 14.
ஈமெயில் :
abdulhussein525@gmail.com

# நாம் இழந்த சொத்துக்களும் நிம்மதியும் மீண்டும் எப்பொழுது திரும்பக் கிடைக்கும்?

**கேள்வி:**

நாங்கள் வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து இப்பொழுது அகதி என்ற பட்டத்தோடு அலைக்கழி கிறோம். எமது குடும்பத்திற்கு உயிரழப்புகள் ஏதுமில்லை. ஆனால், மற்ற அனைத்தையும் இழந்து விட்டோம்; நிம்மதி உட்பட. நாம் இழந்த சொத்துக்களையும் வாழ்ந்த வாழ்க்கை முறையையும் நினைத்து நினைத்து நாளாந்தம் கவலைப் படுகிறோம். நாம் இழந்த சொத்துக் களும் நிம்மதியும் மீண்டும் எப்பொழுது நமக்கு திரும்பக் கிடைக்கும்?

**பதில்:**

நீங்கள் மட்டுமல்ல முழு நாடுமே ஆயுத வன்முறைகளினால் இந்த நாட்டுக்கே உரித்தான சொத்துக்களையும் வளங்களையும் மற்றும் இந்த அழகிய திருநாட்டுக்கு நலன் சேர்க்கக் கூடிய அனேக இன்னுயிர்களையும் பறிகொடுத்துத்தான் இருந்தது.

பலியாக்கப்பட்ட உயிர்கள் அவர்கள் போராளிகளாக இருந்தால் என்ன, படையினராக இருந்தாலென்ன அவர்கள் எல்லோரும் நம்நாட்டின் ஈடுசெய்ய முடியாத மனித வளங்கள், தேசத்தின் நேசமிகு புதல்வர்கள். தவறான அணுகுமுறைகள் இந்த ஈடுசெய்ய முடியாத இழப்புக்களை நமக்கு தந்துவிட்டன.

உங்களைப் பொறுத்த வரையில் உயிரிழப்புக்கள் உங்கள் குடும்பத்துக்கு ஏற்படவில்லை என்பது சற்று ஆறுதல ளிக்கும் விடயம்தான். உழைத்துமுன்னேறக் கூடிய நெஞ்சுரமும் திட நம்பிக்கையும் அயரா முயற்சியும் இருந்தால் இழந்த சொத்துக்களை திரும்பப் பெறுவது ஒன்றும் முடியாத காரியமல்ல.

பாழடைந்து போய் கிடக்கும் பழைய இடத்துக்கு திரும்பி விட்டதாகக் கூறும் நீங்கள் பழைய சோகங்களை மூட்டை கட்டி வைத்துவிட்டு புதிய எதிகாலத் திற்காக முழுமூச்சாக முயன்று முன்னேறுங்கள். கடின உழைப்பு உங்கள் கவலையைப் போக்கி உங்களை யும் மற்றவர்களையும் வாழவைக்கும்.

**கேள்வி:**

நான் ஒரு பெண். வயது 28. படிப்பில் நல்ல திறமை காட்டினேன். எனினும் எனக்கு ஏற்படும் தொய்வு நோய் காரணமாக எனது இலக்கை அடைய முடியாமல் போய் விட்டது. எனது நண்பர்கள் கல்வியில் என்னைவிட மிகவும் முன்னேறி விட்டார்கள். நான் தடைப்பட்டு இடை வழியில் நிற்கிறேன். எனது நோய் காரணமாக எனது நண்பர்களும் தூர ஒதுங்கிவிட்டார்கள். நான் வீட்டுக்கு ஒரு பாரமாக இருப்பதாக உணர்கிறேன். கல்வி, எனது நண்பர்கள், ஆரோக்கியம் எல்லா வற்றையும் இழந்து தவியாய்த் தவிக்கிறேன். சில வேளைகளில் நான் ஏன் பிறந்தேன் என விரக்தி யடைகிறேன். நான் என்னை எப்படித் தேற்றிக் கொள்வது?

**பதில்:**

இத்தனைக்கும் மத்தியில் நீங்கள் உங்கள் பொதுக் கலைத் தேர்வுப் படிப்பைத் தெடங்கியிருப்பதும் அதில் திறமை காட்டுவதும் நீங்களே பெருமைப் பட்டுக் கொள்ளவேண்டிய விடயம். ''நமக்கு கீழே உள்ளவர் கோடி நினைத்துப் பார்த்து நிம்மதி நாடு'' என்பது போல உங்களையும் விட அதிக பாதிப்புக்களையும் எதிர்கொண்டு அவஸ்தைப்படும் பலர் எல்லாவற்றிலும் எதிர்நீச்சல் அடித்து முன்னேறிய சம்பவங்களும் உண்டு.

இப்பொழுது உள்ள இயந்திர வாழ்க்கை யில் ஆத்மார்த்தமான நட்பு என்பது அருகி வருகிறது. அவரவர் நலன்களில் அக்கறை செலுத்துவதற்கே கால அவகாசம் இருக்கிறது. ஆனால் நோய்க்காகவோ, பொருளாதார பின்னடைவுகளினாலோ ஒதுங்கிக் கொள்ளும் நட்பு புனிதமானதல்ல. அத்தகையவர்களின் நட்பு அறுந்து போனதைப் பற்றி நீங்கள் அலட்டிக் கொள்ள வேண்டாம்.

தொய்வு நோயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரக்கூடிய, அல்லது குணப்படுத்தக் கூடிய மருத்துவ ஆலோசனைகளும், வழிமுறைகளும் இப்போது உண்டு. தகுந்த வைத்திய ஆலோசனைகளைப் பின்பற்றுங்கள். மனம் சோர்ந்து விட வேண்டாம். வாழ்க்கை வாழ்வற்கே! வாழ்ந்து காட்டுங்கள்.

பலரின் வேண்டுகோளுக் கிணங்கி இப்பகுதியில் பிரசுரிக்கப்படும் வாசகர்களால் அனுப்பப்படும் உளவியல் சார்ந்த கேள்விகளுக்கு அவர்களின் பெயர், இடம் என்பவை குறிப்பிடப்படவில்லை.

# வேலைக்குப் போகும் பெண்கள் முகப் விடயத்தில் கவனம் தேவை



காலையில் அழகாக உடுத்தி, அசத்தலாக மேக் -அப் செய்து கொண்டு முழு சுறுசுறுப்போடு அலுவலகம் செல்கிறீர்கள். ஆனால், மதியத்துக்குள்ளேயே அத்தனை புத்துணர்வும் காணாமல் போய், சோர்வாகி விடுகிறீர்கள். மாலையில், எண்ணெய் வழியும் முகமும் சோர்வு அப்பிய கண்களுமாக வருவீர்கள்.

இதைத் தவிர்த்து, நாள் முழுக்க உங்களை 'ப்ரெஷ்' ஆக வைத்துக் கொள்ள இதோ சில சிப்ஸ்...

வேலைக்குப் போகும் போது தலைக்கு எண்ணெய் வைப்பது முகத்தை சோர்வாகக் காட்டும். கூடவே, சிலர் எண்ணெய் பசையுடன் இருக்கும் தலையைத் தொட்டு விட்டு, அதே கையால் முகத்தையும் துடைப்பார்கள். அதனால் முகத்தில் அதிக எண்ணெய் வழிவது போலத் தோன்றும். இதைத் தவிர்க்க, ஒட்டுகிற தன்மை இல்லாத 'நான் ஸ்டிக்' எண்ணெயை தலைக்குத் தேய்க்கலாம்.

உடை விஷயத்தில் அதிக கவனம் தேவை. கொட்டன், சில்க் என்று எந்த உடை அணிந்தாலும், பிறரின் கிண்டலுக்கு ஆளாகும் வகையில் மிகவும் தொள தொளப்பாக இல்லாமல், மற்றவர்கள் கண்களை உறுத்தும் வகையில் மிகவும் இறுக்கமாகவும் இல்லாமல், உங்களுக்கான சரியான அளவுடன் நேர்த்தியாக உடுத்துங்கள். காலையில் மீட்டிங் இருந்தால் கொட்டன் புடைவை உடுத்தலாம். அதே மீட்டிங் மாலையில் இருக்கும் பட்சத்தில், கொட்டன் சீக்கிரமே கசங்கி விட வாய்ப்புண்டு என்பதால் அதைத் தவிர்க்கலாம்.

அலுவலகத்துக்கு கிளம்புவதற்கு முன் சில ஐஸ் கட்டிகளை கொட்டன் துணியில் எடுத் துக் கொள்ளுங்கள். அதை முகத்தில் சிறிது நேரம் ஒற்றி எடுங்கள். இதனால் உங்கள் சருமம் புத்துணர்வு பெறும். பின் உங்கள் விருப்பப்படி பவுடர் அல்லது மேக்-அப் போட்டுக் கொண்டால் அடுத்த ஐந்து மணி நேரம் வரை முகம் அப்படியே இருக்கும்.

பொதுவாக நம் பெண்கள் காலையில் போடும் மேக் -அப் உடனேயே மாலை வரை இருந்து விடலாம் என்று நினைக்கின்றனர். சிலர், மேக் -அப் லேசாகக் கலைந்தால் கூட அதன் மேலேயே மீண்டும் போட்டுக் கொள்கின்றனர். இது தவறு. ஏனெனில், ஏற்கெனவே போட்டிருக்கும் மேக் - அப் சரும துவாரங்களை அடைத்திருக்கும். அதன் மீதே மறுபடியும் பவுடர் அல்லது மேக் - அப் போடுவது உங்கள் முகத்தில் படிந்திருக்கும் வியர்வையையும் அழுக்கையும் மேலும்

**பெண்**

தொகுப்பு:சாந்தி

அதிகமாக்கும். அதனால் சிரமம் பார்க்காமல் நடுவில் ஒருமுறையாவது முகத்தைக் கழுவி விட்டோ, சிறிய ஈர டவல் அல்லது ரிஷ்யூ கொண்டு நன்றாகத் துடைத்து விட்டோ மீண்டும் மேக் - அப் போட்டுக் கொள்வதே சிறந்தது. முகம் கழுவ சோப்பைக் விட பேஸ் வோஷ் உபயோகிப்பது நல்லது.

பவுண்டேஷனை தேர்ந்தெடுக்கும் போது, முகத்தின் நிறத்துக்கேற்ற ஷேட்களையே தேர்ந்தெடுக்க வேண்டும்.

ஏ.சி அறையில் வேலை செய்பவர்கள் லோஷன் பவுண்டேஷனையும், ஏ.சி இல்லாத அலுவலகத்தில் வேலை பார்ப்பவர்கள் கிரீம் அல்லது கேக் பவுண்டேஷனையும் உபயோகிக்கலாம்.

லைட் கலர் லிப்ஸ்டிக் உபயோகிப்பது தான் தற்போது பேஷன். புதிதாக லிப்ஸ்டிக் உபயோகிப்பவர்களும் லைட் கலர் லிப்ஸ்டிக் போடலாம். லிப்ஸ்டிக் வேண்டாம் என்று நினைக்கிறவர்கள் கலர்லெஸ் லிப்ஸ்டிக், லிப் பாம் அல்லது வஷ்லீன் போட்டுக் கொள்ளலாம். கண்ணுக்கு 'ஐ' லைனர் மற்றும் லைட் ஷேட்டில் 'ஐ ஷேடோ' போடுவது முகத் துக்குக் கூடுதல் கவர்ச்சியைத் தரும். மஸ்காராவில் இப்போது 'ஐ' காஷா பென்சில்'கள் வந்துள்ளன. அவற்றை உபயோகிப்பது கண்ணுக்கு புதுப் பொலிவைத் தரும்.

சிலர் தாங்கள் 'ப்ரெஷ்' ஆக இருப்பதாக நினைத்துக் கொள்வார்கள். ஆனால், நிஜத்தில் அவர்கள் முகம் சோர்ந்திருக்கும். அதனால் அடிக்கடி கண்ணாடி பாருங்கள். உடையை சரிசெய்து கொள்வது, கலைந்திருக்கும் தலையை வாரிக் கொள்வது, வழிந்திருக்கும் ஐ லைனரை சரி செய்து கொள்வது என உங்களை எப்போதும் சரியாக வைத்துக் கொள்ள இந்தப் பழக்கம் உதவியாக இருக்கும்'

வீட்டில் இருக்கும் நேரத்தில்....

'குளிர்ந்த நீரில் 'யூடிகோலன்' என்ற லோஷனை கலந்து முகத்தில் தெளித்துக் கொண்டால், முகம் பளிச் என்றிருக்கும். பொதுவாக முகத்தில் சதை தளர்வாகத் தெரியும் போதுதான் வயதான தோற்றம் ஏற்படும். இந்த லோஷனை உபயோகிக்கும் போது, தளர்ந்த சதை இறுகி முகத்தில் பொலிவு கூடும்.

பத்து ரோஜாப் பூக்களின் இதழ்களை 1 லீட்டர் தண்ணீரில் போட்டு காற்று புகாமல் மூடி விட வேண்டும். மூன்று மணி நேரத்தில் ரோஜா சாறு அந்த தண்ணீரில் இறங்கியிருக்கும். இதழ்களை வடிகட்டிவிட்டு சாறு இறங்கிய அந்த தண்ணீரை ஒரு போத்தலில் சேகரித்து வைத்துக் கொண்டால், ஒரு வாரம் வரை கெட்டுப் போகாமல் இருக்கும். இதற்கு 'ஸ்கின் டோனிக்' என்று பெயர். அடிக்கடி இந்தத் தண்ணீரால் முகத்தைக் கழுவினால், முகம் பளபளப்பாக இருக்கும். கண்ணுக்குக் கீழே உள்ள கருவளையமும் மறைந்து விடும்'

'இவை எல்லாவற்றையும் விட எப்போதும் உங்களிடமே ஒரு பொலிவு ஒட்டிக் கிடக்கிறது. அது... உங்களின் இன்முகம்! எப்போதும் சிரித்த முகத்துடன், கனிவான வார்த்தைகளையே பகிர்ந்து கொள்ளுங்கள். அது கூடுதல் அழகையும் புத்துணர்ச்சியையும் தரும்'

## பீட்ஷா சான்வீச்

**தேவையானவை:**

பீட்ஷா நான் (பீட்ஷா பேஸ்) - 4
வெங்காயம், குடமிளகாய், காளான், (எல்லாம் பொடியாக நறுக்கியது)
பீன்ஸ் - தலா கால் கப்
பீட்ஷா சோஸ் அல்லது தக்காளி சோஸ் - தேவைக்கேற்ப
உப்பு - தேவைக்கேற்ப
மிளகாய் தூள் - சிறிது
மோசரில்லாஸ் - 50 கிராம் (இவை Food city களில் கிடைக்கும்).
வெண்ணெய் - 1 டேபள்ஸ்பூன்
எண்ணெய் - வதக்கத் தேவையான அளவு

**செய்முறை:**

தாச்சியில் சிறிது எண்ணெய் விட்டு வெங்காயம், குடமிளகாய், காளான், பீன்ஸ் சேர்த்து வதக்கவும். கடைசியில் மிளகாய் தூள், சேர்த்து இறக்கவும். பீட்ஷா நானை மத்தியில் இரண்டாக வெட்டவும். உள்ளேயும், வெளியேயும் வெண்ணெய் தடவவும். பீட்சா சோஸ் அல்லது தக்காளி சோஸை உள்ளே தடவி, தேவையான காய்கறி வதக்கலை அதன்மீது பரவலாகத் தூவவும். துருவிய சீஸ்ஸை அதன் மேல் வைத்து, மேல்பாகத்தை சான்ட்விச் போல மூடவும். முன்பே சூடாக்கப்பட்ட சான்ட்விச் டோஸ்டரின் மத்தியில் வைத்து நன்றாக டோஸ்ட் செய்யவும்.

டோஸ்டர் இல்லாதவர்கள், தோசைக் கல் உபயோகித்தும் இதைச் செய்யலாம். தோசைக்கல்லில் பீட்சாவின் அடிப்பாகத்தை வைத்து, அதன் மேல் ஒரு தட்டு போட்டு மூடி, கனமான பொருளை வைக்கவும். வெந்ததும் திருப்ப போட்டு மூடவும். இரண்டு பக்கமும் நன்கு வெந்ததும், சூடாகப் பரிமாறவும்.

## கணவன் - மனைவி உறவு மேம்பட...



எந்த ஒரு உறவிற்கும் அடிப்படைத் தேவை நேர்மை தான். அதற்கு உங்கள் துணையிடம், 'எப்போதும் நான் எதையும் மறைக்காமல் நேர்மையுடன் தைரியமாக செயலாற்றுபவர்' என்ற நம்பிக்கையை ஏற்படுத்துங்கள். அப்போது தான் மனைவி, மக்களிடம் இருந்தும் நீங்கள், நம்பிக்கையைப் பெற முடியும்.

உங்கள் துணை உங்களிடம் உள்ள சிறுசிறு குறைகளை வெளிப்படுத்தும் போது, அதை மறுக்காமல் பணிவுடன் ஏற்றுக் கொள்ளுங்கள். அதற்கு மாறாக கோபத்தை வெளிப்படுத்தாதீர்கள். பதிலுக்கு அவர்களிடம் குறை கண்டுபிடிக்காதீர்கள். உதாரணமாக, காலதாமதம், நேர்த்தியாக உடை அணியாதது போன்ற சிறு சிறு குறைபாடுகளைக் கூட, அவர் உங்கள் நடத்தைகளில் கண்டிருக்கலாம்.

சர்ச்சைக்குரிய பிரச்சினைகள் ஏற்படும்போது இருதரப்பினருக்கும் பொதுவான வகையில் இருந்து நேர்மையுடன் பிரச்சினையை அணுகுங்கள். தேவையில்லாமல் யாருடைய மனதையும் புண்படும் படியான வார்த்தைகளை பேச வேண்டாம்.

உங்கள் துணையிடம் எந்த பிரச்சினையையும் மனம் விட்டுப் பேசி, பகிர்ந்து கொள்ளுங்கள். அப்போது தான், 'உங்கள் ஆழமான நம்பிக்கையை தன் மீது வைத்திருக்கிறீர்கள்' என்று அவர் சந்தோஷப்படுவார். இதன் மூலம் உங்கள் துணையுடன் நீண்ட நாட்களுக்கு புரிதலுடன் கூடிய நல்லுறவை ஏற்படுத்தலாம்.

எப்போதும் சுதந்திரமாக இருந்து ஒருவருக்கொருவர் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளுங்கள். எந்த வேலையையும் செய்ய கட்டளையிடாதீர்கள். சுதந்திரமாகவும், அன்பாகவும் அந்த வேலையை எப்படி செய்யலாம் என்று வழிகாட்டுங்கள். இது உங்கள் நம்பிக்கையை எப்போதும் அவர் பெற உதவியாக இருக்கும்.


நீங்கள் பேசும் ஒவ்வொரு வார்த்தையும் உங்கள் துணைக்கு மிகவும் முக்கியமானவை. அதனால் பிரச்சினைகள் குறித்துப் பேசும்போது மிக கவனமுடன் வார்த்தைகளைக் கையாளுங்கள். அவை அறிவுப்பூர்வமாக இருக்கட்டும். அப்போது தான் உங்கள் துணைக்கும் உங்கள் மீது நல்ல ஒரு அபிப்ராயம் ஏற்படும்.



**சகோதரிகளே!**

பெண் பகுதியில் பிரசுரமாகும்
**சகோதரிகளின் பார்வைக்கு**
நீங்களும் உங்கள் கருத்துக்களை எழுதி அனுப்பலாம்.
இச்சமூகத்தில் சகோதரிகள் மட்டத்தில் நீங்கள் காணும் குறைநிறைகளை எம்மோடு பகிர்ந்து கொள்ளுங்கள்.
நீங்கள் பகிர்ந்துகொள்ளும் விடயங்கள் ஒவ்வொன்றும் ஆக்கபூர்வமானவையாகவும் இருக்க வேண்டும்.

**வந்து சேர வேண்டிய எமது முகவரி:**
சகோதரிகளின் பார்வைக்கு
சுடர் ஒளி வாரமலர்,
85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு 14.



## ஓஷோ வேடத்தில் கமல்?

செக்ஸ் குற்றச்சாட்டுகளில் இன்று சாமியார்கள் நிலைகுலைந்து போகும்போது, செக்ஸின் மூலம் கடவுளை அடைய முடியும் என்று பல வருடங்களுக்கு முன்பே கூறியிருந்தவர் ஓஷோ.
அவரது புத்தகங்கள் இன்றும் பலரால் வாசிக்கப்படுகின்றன. உலகம் முழுவதும் அவருக்குப் பக்தர்கள் இருக்கிறார்கள். பக்தர்கள் என்பதைவிட அவரைப் பின்பற்றுகிறவர்கள் என்பதுதான் சரியாக இருக்கும்.
ஓஷோவின் வாழ்க்கையைத் திரைப்படமாக்க பலரும் முயன்றனர். ஆனால், பல காரணங்களால் முயற்சி திருவினையாகவில்லை. இந்நிலையில் இத்தாலியின் பிரபல இயக்குனர் ஓஷோவின் வாழ்க்கையைத்திரைப்படமாக்கும் முயற்சியில் தீவிரமாக இறங்கியுள்ளார்.
தற்போது இந்தியா வந்திருக்கும் அவர், ஓஷோ வேடத்தில் நடிக்க சஞ்சய்தத், கமல்ஹாசன் இருவரும் பொருத்தமானவர்கள் என்று தெரிவித்துள்ளார். இவர்கள் இருவரையும் சந்தித்துப் பேசும் திட்டமும் அவருக்கு இருக்கிறது. ஓஷோ கதாபாத்திரத்துக்கும், தோற்றத்துக்கும் சஞ்சய் தத்தைவிட கமல்ஹாசனே நூறு சதவிதம் பொருத்த மானவர். இது சர்வதேச விடயம், மனம் இளகுவாரா கமல்?



படம் - குட்டிப்பிசாசு

## அடக்கி வாசிக்கும் விவேக்!

இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் மீது தீராத பாசமும் பற்றும் வைத்திருப்பவர் நடிகர் விவேக். கலாமைப் பற்றி அடிக்கடி கவிதைகளை எழுதியும் வருகிறார். சில மாதங்களுக்கு முன் மேடை ஒன்றில் பத்திரிக்கையாளர்களைத் தரக்குறைவாகப் பேசி வம்பில் மாட்டிக்கொண்ட பிறகு, மேடை ஏறிப் பேசுவதையே தவிர்த்து வந்தவர், தற்போது மேடை ஏற ஆரம்பித்துவிட்டார். பத்திரிகையாளர்களிடம் மன்னிப்புக் கேட்டதோடு, இனி அப்படிப்பட்ட தவறுகள் ஏதும் நடக்காது என்றும் தெரிவித்தார். மேலும் அப்துல் கலாமின் பிறந்த தினமான ஒக்டோபர் 15ஆம் திகதியை மாணவர் தினமாகக் கொண்டாட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். அதுவும் நல்ல விடயமாகத்தான் தெரிகிறது.

## விஜய்க்குப் பதிலாக அஜித்!

விஜய்யின் தொடர் தோல்விகளும் அஜித்தின் சுமாரான வெற்றிகளும் தமிழ்த் திரையுலகில் தொடர்ந்துகொண்டிருக்க, இப்போது புதுசாக இன்னொரு பூதம் கிளம்பியிருக்கிறது. அதாவது சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்கு பிராண்ட் அம்பாசிடராக இருந்த விஜயைத் தூக்கிவிட்டு அஜித்தைப் போடப் போகிறார்களாம்.
'கில்லி' படத்தில் கபடி விளையாட்டு வீரராக நடித்ததாலோ என்னவோ சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்கு பிராண்ட் அம்பாசிடராக இந்தியா சிமின்ட்ஸ் நிறுவனம் விஜயைப் புக் செய்தது. ஆனால், விஜய் கொடுத்த ஒத்துழைப்போ கொஞ்சம் கூட இல்லையாம். இதனால், நொந்து போன இந்தியா சிமின்ட்ஸ் இப்போது விஜய்க்குப் பதிலாக அஜித்தை ஒப்பந்தம் செய்ய எண்ணியுள்ளாதாம். ஏற்கனவே கார் ரேஸ் போன்றவற்றில் ஆர்வமாக அஜித் கலந்துகொள்வது இவர்களைப் பெரிதும் கவர்ந்துவிட்டதாம்.

தான் நடிக்கும் படத்தின் எல்லாப் பாடல்களையும் பாடும் வாய்ப்புத் தனக்கே தரப்பட வேண்டும் என்று கண்டிஷன் போடுகிறாராம் ஸ்ருதி ஹாஸன். கமல்ஹாஸனின் மூத்த மகளான ஸ்ருதி, பாடகியாகவும், இசையமைப்பாளராகவும், நடிகையாகவும் திகழ்கிறார். ஹிந்தியில் 'லக்' என்ற படத்தில் நடித்தார். ஆனால், அந்தப் படம் ஓடவில்லை. அடுத்து தந்தை தயாரித்து நடித்த 'உன்னைப் போல் ஒருவன்' படத்தின் இசையமைப்பாளரானார்.
இப்போது ஒரு தெலுங்குப் படத்தில் நடித்துவரும் ஸ்ருதி, அதற்கடுத்து தமிழில் சூர்யாவுக்கு ஜோடியாக நடிக்கிறார். உதயநிதி ஸ்டாலின் தயாரிப்பில், ஏ.ஆர். முருகதாஸ் இயக்கும் இந்தப் படத்திற்கு இசை அமைக்கிறார் ஹாரிஸ் ஜெயராஜ். சமீபத்தில் இந்தப் படம் குறித்த டிஸ்கஷனுக்கு வந்த ஸ்ருதி, 'இந்தப் படத்தில் நடிப்பதில் எனக்கு 50 சதவிகிதம்தான் ஓகே. எல்லாப் பாட்டும் எனக்கே கொடுப்பதாக இருந்தால் 100 சத விகிதம் ஓகே என்றாராம்.
சற்றே யோசித்த முருகதாஸ், ஹாரிஸ் ஜெயராஜைப் பார்க்க அவரும் ஓகே சொல்லிவிட்டாராம்.
இப்போதான் எனக்கு 100 சதவிகிதம் திருப்தி என்று மகிழ்ச்சியுடன் சென்றாராம் ஸ்ருதி!



## எல்லாப் பாடல்களையும் நானே பாட வேண்டும்!

# அப்பா வேடங்களில் நடிக்கும் இமயம் ...!



'ரெட்டச்சுழி' படத்துக்குப் பிறகு நிறையப் படங்களில் அப்பா வேடம் கட்ட பாரதிராஜாவுக்கு அழைப்பு வருகிறதாம். எனவே தமிழ் சினிமாவுக்கு கரகரப்பான ஒரு அப்பா கிடைத்துவிட்டார்.
அதேவேளை, மென்மையான காதல் படங்களை இயக்கியும், நடித்தும் வந்த சேரன், மிஷ்கின் இயக்கத்தில் 'யுத்தம் செய்' என்னும் படத்தில் ஆக்ஷன் ஹீரோவாக நடிக்கிறார். அத்துடன், 'அப்பன்-ஆத்தா' எனும் படத்தில் இயக்குனர் இமயம் பாரதிராஜாவின் மகன்களாக அமீர், சீமானுடன் இன்னொரு மகனாகவும் நடிக்கிறார். குடும்பப் பாசத்தை மையமாகக்கொண்டு கிராமத்தில் நடக்கும் கதையான 'அப்பன்-ஆத்தா' படத்தில் நான்கு இயக்குனர்களுக்கும் சரிசமமான கதாபாத்திரமாம். எனவே இவர்களில் நடிப்பில் முந்துவது யார் என்பதில் ஆரோக்கியமான போட்டி நிலவும் என்கிறார்கள்.

# இயக்குனர் ஆசையில் டானியல் பாலாஜி!



'வேட்டையாடு விளையாடு', 'பொல்லாதவன்' ஆகிய படங்களில் வில்லனாக நடித்த டானியல் பாலாஜி, ஆரம்பத்தில் சிறந்த இயக்குனராக வேண்டும் என திரைத்துறைக்கு வந்தவர் எதிர்பாராத விதமாக நடிகராகிவிட்டார். ஆனாலும், இயக்குனராகும் இலட்சியம் அவரை விட்டபாடில்லை. அதனால் முறைப்படி தொழில் கற்றுக்கொண்டு இயக்குனராக வேண்டும் என்பதற்காக ஒன்றிரண்டு பெரிய இயக்குனர்களிடம் வாய்ப்புக் கேட்க, தற்போது கௌதம் வாசுதேவ மேனன் வாய்ப்புக் கொடுக்க முன்வந்துள்ளார்.
தொடர்ந்து மூன்று படங்களிலாவது வேலை பார்க்க வேண்டும் எனும் கண்டிஷனுடன் சேர்த்துக் கொண்டாராம் இயக்குனர்.
தமிழ் சினிமாவுக்கு இன்னொரு இயக்குனர் கிடைக்கப் போகிறார்போல.

# பாடல் ஒன்று பாடகர்கள் 20!

பல படங்களுக்கு விளம்பர அலங்காரங்களை வடிவமைத்துக் கொடுத்து வந்த டிசைனர் சித்தார்த், இப்போது இயக்குனராகிவிட்டார். இவர் இயக்கி வரும் படம் 'பலே பாண்டியா'. இதில் 'வெண்ணிலா கபடிக் குழு' விஷ்ணு மற்றும் பியா ஆகியோர் நடிக்கிறார்கள். இந்தப் படத்தில் வரும் ஒரு பாடலுக்குச் சுமார் 20 பின்னணிப் பாடகர்களைப் பாடவைத்து சாதனை படைத்திருக்கிறார் சித்தார்த்.
இதற்கு முன்பு 'கோவா' படத்தில் ஐந்து பாடகர்கள் சேர்ந்து பாடினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இப்போது அந்தச் சாதனையை முறியடித்துள்ளார் சித்தார்த்.
இந்தப் பாடலைப் பாடிய குழுவில் விஜய் ஜேசுதாஸ், காத்திக், சுசித்ரா, வேல்முருகன், அனுராதா ஸ்ரீராம் போன்றோரும் இடம்பெற்றுள்ளனர்.
'எந்திரன்' படத்தில் வரும் பாடல் ஒன்றை மும்பையைச் சேர்ந்த எட்டுப் பாடகர்கள் பாடுகிறார்களாம்.



படம்-போஸ் எங்கிற பாஸ்கரன்



படம்-நெல்லைப் பட்டாளம்



படம்-சிங்கம்

# விஜய் படத்துக்கு இசையமைக்கிறார் வித்யாசாகர்?

ஹிந்தியில் வெளியாகி சக்கைபோடுபோட்ட பொடிகார்ட் படத்தை வாங்கி தமிழில், அதுவும் விஜய்க்கு ஏற்ற மாதிரி உருவாக்குகிறார்கள். இந்தப் படத்திற்கு இசையமைப்பதற்கு இரண்டு பெயர்கள் சிபாரிசு செய்யப்பட்டன. ஒருவர் விஜய் அன்டனி. மற்றொருவர் மணிசர்மா. ஆனால், இந்த இருவரையும் விட்டுவிட்டு வித்யாசாகருக்கு டிக் அடித்திருக்கிறார் விஜய். ஹீரோவே சொல்லிட்டார்... அப்புறம் மறுபேச்சுப் பேசுறதுக்கு என்ன இருக்கு...?
இயக்குனர் யோசித்துக் கொண்டிருக்கிறார்.
விரைவில் வித்யாசாகர் இசையமைப்பார் எனும் செய்தி தயாரிப்பு நிறுவனத்தாராலேயே வெளியிடப்படும்.




தொகுப்பு- எஸ்.ஜெய்

# கவிதைப்புனல்

## புத்தாண்டே புது வாழ்வு தருவாயா?

புத்தாண்டே எங்களுக்குப் புது வாழ்வு தருவாயா?
எக்காலும் எம்மக்களுக்கு விடிவே கிடையாதா?
அறுபதாண்டுகள் பட்ட அவலம் மறையாதா?
அநியாய யுத்தத்தின் வடுக்கள் தொலையாதா?
''மனிதாபி மானப் போர்'' என்ற போர்வையில்
''மஹிந்த சிந்தனை'' செய்த அழிவு மறக்குமா?
முள்ளி வாய்க்காலில் பட்ட அவலம் மறக்குமா?
முட்கம்பி வேலிக்கோர் முடிவுதான் வந்ததா?
ஏங்கித் தவிக்கின்றோம் இன்னல்கள் நீங்கிடவே
புத்தாண்டே தமிழருக்குப் புது வாழ்வு தருவாயா?



தாயில்லை தந்தையில்லை தன்சுற்ற மெல்லாம் சாவு
வான் குண்டு வீச்சுகளால் வகை தொகையின்றி மாண்டோர்
அநியாயக் குண்டு வீச்சால் அங்கங்கள் இழந்த வாழ்வு எறிகணை
வீச்சுகளால் எரிந்து சாம்பலானவர்கள் குண்டு தொடர் குண்டு
வீச்சுகளால்தொலைந்து போனவர்கள்
மார்பில் குடித்த பால் மரணப் பாலாகவே
மாதவுடன் சேர்ந்து மரணித்த குழந்தைகள்
பட்ட தெல்லாம் போதும் படமுடியாதினித்துயரம்
இந்த நிலை மாறி இன்னல்கள் நீங்காதா?
புத்தாண்டே தமிழருக்குப் புது வாழ்வு தருவாயா?



மீள் குடியேற்றம் என்று மீண்டுமோர் அகதி வாழ்வு
அதியுயர் பாதுகாப்பு, அவசரகாலச் சட்டம்
பாதுகாப்பு வலயம், பயங்கர வாதச் சட்டம்
தொடர் சங்கிலியாய் அரண்கள், தொல்லை தரும் தடைகள்
வீடில்லை, வாசலில்லை, விழிமூடக் கூரையில்லை
துஞ்ச ஓர் இடமில்லை தூங்கி வெகு நாளாச்சு
கஞ்சிக்கும் வழியில்லை கசக்கிக் கட்டக் கந்தலில்லை.
நிவாரணப் பிச்சைக்காக நின்றுகை யேந்துகின்றோம்
ஏங்கித்தவிக்கின்றோம் இன்னல்கள் நீங்கிடவே
புத்தாண்டே தமிழருக்குப் புது வாழ்வு தருவாயா?



பயன் மிகுந்த எங்கள் பண்பாட்டுப் பூமி யெல்லாம்
பாதுகாப்பு வலயத்துள் பாழ்பட்டுக் கிடக்கிறது.
அகதியாகி மக்கள் அல்லற் பட்டுழல்கிறார்
போர் செய்த கொடுமையால் புலம் பெயர்ந்த லைகிறார்
மனித நேயம் ''லங்காவில்'' மரணித்துப் போகிறது
சனநாயகம் இங்கே தற்கொலையாய்ப் போகிறது
சர்வ அதிகாரம் இங்கே தலைவிரித்தாடுகிறது
'ஏனென்றால்' 'புலிகள்' 'இம்மென்றால்' துரோகிகள்
இந்த நிலை மாறாதா? இன்னல்கள் நீங்காதா?
புத்தாண்டே தமிழருக்குப் புது வாழ்வு தருவாயா?

தந்த பேரின்பம் ''தீவன்''

## சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம்

### ஓட்டம்

முடைகள் வெளியில்! வந்து
முற்றத்தில் நின்றார்; வாழ்ந்த
வீட்டைப்பின் பார்த்தார்; முன்னர்
வாழ்ந்ததம் முன்னோர் நெஞ்சில்
காட்டைநா டாக்கித் தத்தம்
கட்டையை உரமாய் இட்டோர்!
நாட்டைநம் வீட்டை விட்டு
நகர்கின்றோ மென்றார் வாடி!

மலையக மண்ணே! நாங்கள்
மாடாக உழைப்பு; இல்லை
நிலையோங்கத் தழைப்பு; இங்கு
நிர்ந்தோமா? குறுகிப் போனோம்!
அலைகடல் தாண்டி நாங்கள்
அக்கரை விரைவு; நீயோ
சிலைபோல ஆனாய்; கண்ணீர்
சிந்துதல் கண்டோ என்றார்!

புகைவண்டி மேடை; வாட்டம்!
போகுவோர், அனுப்ப வந்தோர்
பகைவர்கள் பகைமை விட்டு
பரிவோடு சொரிவு பாசம்!
திகைப்புக்குள் ஆழ்த்தி வண்டி
திசைநோக்கி வருகை; கண்டு
வகையிலார் போல ஆங்கு
வாட்டத்தால் புலம்பல்; கண்ணீர்!

பெட்டிக்குள் விம்மல்; தேம்பல்
பிரிவினால் தளர்வு; சோர்வு
கொட்டிநீர் வெளியில் நின்றோர்
கும்பிட்டு அனுப்பி வைப்பு
வெட்டித்தான் உறவைக் காலன்
வெறிகொண்டு செல்லல் போல
கட்டியங் கூறி வண்டி
காற்றினைக் கிழித்து வோட்டம்!
(தொடரும்)

கவிஞர் ஸி. எஸ்.காந்தி

## எல்லாம் நீநீ...

மலர் என்றால் அதன்
வாசனை நீ...
புல் என்றால் அதன்
பனி துளி நீ...
படகு என்றால் அதன்
துடுப்பு நீ...
பறவை என்றால் அதன்
சிறகுகள் நீ...
உடல் என்றால் அதன்
உயிர் நீ...
வாழ்க்கை என்றால் அதன்
அர்த்தம் நீ...
இதயம் என்றால் அதன்
துடிப்பு நீ...
வார்த்தை என்றால் அதன்
ஓசை நீ...
மயில் என்றால் அதன்
தோகை நீ...
புளி என்றால் அதன்
சுப்பு நீ...
இருள் என்றால் அதன்
நட்சத்திரம் நீ...
விழி என்றால் அதன்
விம்பம் நீ...
கடல் என்றால் அதன்
அலைகள் நீ...
நெஞ்சம் என்றால் அதன்
நினைவுகள் நீ...
ஓவியம் என்றால் அதன்
உருவம் நீ...
வரிகள் என்றால் அதன்
கவிதை நீ...
அதிசயம் என்றால் அதன்
அம்சம் நீ நீ...



தமிழ்ச்செல்வன்
நுவரெலியா

## நாட்டு நடப்புகள்

சண்டை முடிந்ததில் சந்தோஷம்
சங்கட மில்லையே யெந்நாளும்
'வண்டு' வராதினி வானத்தில்
வந்து வெடிக்காது ஷெல்குண்டு!

ஏ-நைன் பாதை தாராளம்
எல்லாமே அதனால் வியாபாரம்
ஏ-வண் நிலையில் தாய்நாடாம்
எடுத்துரைப்பது 'பார்லிமென்ட்'டாம்

'பயங்கரவாதம்' படுத்து விட்டதில்
பல பேரானது பனைமர நாடு!
தயக்கமின்றி தன் இச்சையாக
தாவிப் பறந்தன சனங்களெங்கும்

குக்க ரோடு குடும்பங்கள் வந்தன
குறுகிய நிலத்தில் குடித்தனம் நடத்தின
'கக்கா' கழித்தன அச்சுவேலி வயலில்
கழுவித் துடைத்தன எல்லைவெளிநீரில்

வடக்கிற்கு வருகுது யாழ்தேவி
வந்து வீசுது 'வசந்தம் ரி.வி'
துடக் கானது முள்ளி வாய்க்கால்
தொடராவது அகதி வாழ்க்கை

வங்கிகள் நிறைந்தன வடக்கினிலே
வளங்க ளழிந்தன வன்னியிலே
அங்க மிழந்தவர் முகாம் களிலே
அவலம் தொடருது வாழ்க்கையிலே

கதிரை பிடிக்கக் கரணமடிப்பு
காசு களஞ்சுக்காய் பதவிதுறப்பு
எதிர் தலைகள் இருப் பெடுப்பு
இலங்கை நாடொரு காபக் கேடு

திகிலி வெட்டையில் திகில்களாம்
திரும்பவும் ஏறுது வேதாளமாம்
'பகிடி-சேஷ்டைகள்' தொடங்குதாம்
பாதாளத்துக்கே நாடு போகுதாம்.



ஏ.லெசிக்கல் பார்த்தாஸன், புதுக்குடியிருப்பு-முல்லை.

## கண்ணீர்ப்பூ



மறக்கத் தெரிய வில்லை
மன்னிக்க முடிய வில்லை
திறக்கும் படலை நோக்கி
திரும்பவும் விழிகள் பார்க்கும்.
சிறப்பொடு வாழ் வெனக்கு
சேரு மென்ற நம்பிக்கையை
அறவொடு அறுத்தே யெறிந்து
அகலுவர் முற்றம் விட்டு.

நிறத்தைப் பார்த்தே விரும்பும்
நீண்ட மீசை யுள்ளோர்
பிறப்பின் அந்தம் வரை
பிடுங்கியே ஆராய்ந் தறிவார்.
சிறப் பேதும் இல்லை யென்றே
செப்பிடும் வாய்களைப் பார்த்து
முறத்தால் முன்னே நின்று
மூசியே பறையத் தோன்றும்.

கறக்கும் பணத்தைக் குறித்தே
கல்யாணம் செய்ய வரும்
பிறப்பிலே ஆணாயுள்ள
பேடிகள்தான் உலகி லதிகம்.
இறக்கும் நாள் வரைக்கும்
இதுதான் பாடெனக் கோ
திறக்கும் நல் வழிகளுமற்று
திசைதெரியா வாழ்கிறேன் யான்.

புறப்படு! பொங்கி யெழுவென
புதுமை மிகு புரட்சி வார்த்தை
சிறப்பொடு செப்பிய போதும்
செல்ல வில்லை ஆழ் மனத்துள்.
திறக்குருடாய் நிறைந்து விட்ட
நீள் மீசையர்நாம் இப்புவியில்
பிறப் பெடுக்க வேண்டு மினி
புதிய தொரு அவதாரம்!

அன்பரசி, மயிலிட்டி.




நீண்ட நாட்களுக்குப் பிறகு திருகோணமலையிலுள்ள நண்பரின் வீட்டுக்குச் சென்றிருந்தேன். சொந்த விடயமாகச் சென்ற நான் நான்கு நாட்கள் அங்கு தங்கவேண்டி இருந்தது. கொழும்பில் இருக்கும் போது பல புதிய நூல்கள், சஞ்சிகைகள் என்றும் படித்துக்கொண்டும், எழுதிக்கொண்டும் இருக்கும் எனக்கு, திருகோணமலையில் இருக்கும் போது சும்மாயிருப்பது பெரும் கஷ்டமாக இருந்தது.

''உங்களிடம் ஏதாவது புத்தகங்கள் இருக்குமா? படிப்பதற்கு'' என்று கேட்டேன். வீட்டின் ஒரு பக்கத்து மூலையில் இருந்த ஒரு பழைய தூசிபடிந்த கடதாசிப் பெட்டியைக் காட்டி ''இதற்குள் சில புத்தகங்கள் இருக்கின்றன அவை இங்கு ஒருவருக்கும் தேவைப்படாது உங்களுக்குத் தேவை என்றால் கொண்டுபோங்கோ'' என்று சொன்னார்கள்.

தூசைத் தட்டிவிட்டு அந்தப்பெட்டியைத் திறந்து பார்க்கின்றேன். என்ன ஆச்சரியம் அந்தப் பெட்டிகுள் என் வாழ்க்கையில் எங்கும் பார்த்திராத ஒரு நூல் என்னைப் பரவசத்தில் ஆழ்த்தியது. 1941 ஆம் ஆண்டு பாரதி பிரசுராலயத்தினால் 5வது பதிப்பாக வெளியிடப்பட்ட 'பாரதி நூல்கள்' என்ற பெயரில் சுப்பிரமணிய பாரதியாரால் எழுதப்பட்ட வசன நூல்களின் தொகுப்பு.

அவசர அவசரமாக அந்த நூலைத் தூசிதட்டி துடைத்து எடுத்துக் கொண்டேன். சிறுவயது தொடக்கம் பாரதியாரின் கவிதைகள் பல படித்துள்ளேன்; அவரைப் பற்றிப் பல கட்டுரைகள் எனது தேடலில் கிடைத்த விடயங்களைத் தொகுத்து எழுதியுள்ளேன். ஆனால் அவரது வசன நடையிள்ள முழுமையான நூலை இப் பொழுது தான் முதல் முறையாகத் தரிசித்துள்ளேன்.

வீட்டாரிடம் கேட்டேன் ''இந்தப் புத்தகத்தை நான் கொண்டுபோகவா''என்று தயக்கத்துடன் அவர்களும் ''தாராளமாக நீங்கள் எடுத்துப் போகலாம்'' என்றார்கள்.

எனக்கு மிகுந்த மகிழ்ச்சியாக இருந்தது.

817 பக்கங்களைக் கொண்ட இந்த நூலில் பாரதியாரின் வசனநடை ஆக்கங்கள் யாவும் இடம் பெற்றுள்ளன. அந்தவகை யில் இந்த நூல் சிறப்புப்பெற்று நிற்கின்றது.

இந்தநூலில் ஞானரதம், பதஞ்சலி யோஸூத்ரம், வேதரிஷிகளின் கவிதை, கீதை முன்னுரை,சந்திரிகையின் கதை, நவதந்திரக் கதைகள், காதைக் கொத்து, தராசு, சித்தக்கடல், STRAY THOVGHTS ஆகிய அத்தியாயங்களில் பலவிடயங்கள் தரப்பட்டுள்ளன.

அதிலுள்ள நவதந்திரக் கதைகள் மிகச் சுவாரஸ்சியமாக உள்ளன. அதில் ஒன்று....

''வேதாரண்யம் என்ற ஊரில் விவேக சாஸ்திரி என்றொரு பிராமணன் இருந்தார். அவருக்கு மூன்று பிள்ளைகள். அந்த மூன்று பிள்ளைகளையும், மனைவியையும் வைத்துக் காப்பாற்றுவதற்குப் போதுமான நன் செய் நிலம் அவருக்கிருந்தது. ஆனால் பிள்ளைகள் மூவருக்கும் விவாகமாகித் தலைக்கு ஓரிரண்டு குழந்தைகளும் பிறக்கவே, குடும்பம் மிகப் பெரிதாகிவிட்டது. ஆதலால், அவருடைய முதுமைப் பிராயத்தில் ஜீவனத்தக்கு சிரமமுண்டாகி விட்டது. பிள்ளைகளுக்கு சமஸ்க்ருதப் படிப்புச் சொல்லிவைத்து ஒருவனை வேதாந்த சாஸ்திரத்திலும் மற்றொருவனை வியாகரணத்திலும், மூன்றாமவனைத் தர்க்க சாஸ்திரத்திலும் தேர்ச்சியோங்கும்படி செய்து வைத்திருந்தார்.

கால நிலைமையால், அந்த வித்தைகள் வயிற்றுப் பிழைப்புக்கு பயன் படவில்லை. பிறரிடம் பிச்சை கேட்க ஸம்மதமில்லாத மானமுள்ள குடும்பத்தாராதலால், அரை வயிற்றுக்கு ஆஹாரம் செய்து கொண்டு கஷ்டத்திலிருந்தார்கள்.

இப்படியிருக்கையில், ஒரு நாள் விவேக சாஸ்திரி தமது கையில் உள்ள தாதுவைப் பார்த்து இன்னும் ஒரு வருஷத்துக்கு மேலே தம்மால் ஜீவிக்க முடியாதென்று தெரிந்தவராகித் தம்முடைய மக்களை அழைத்துப் பின்வருமாறு சொல்லலானார்:

''வாரீர், மக்களே, நான் சொல்லப் போவதை ஸாவதானதாகக் கேளுங்கள். என்னுடைய ஜீவன் இவ்வுலகத்திலே இன்னும் ஒரு வருஷத்திற்கு மேலே நில்லாது. நான் உங்களுக்கு அதிகச் செல்வம் வைத்துவிட்டுப் போக வழியில்லாமற் போய்விட்டது. விதிவசமாக ஏற்பட்ட மதிமயக்கத்தால், உங்களுக்கு லௌகிகலாகங்கள் உண்டாக்கக்கூடிய வித்தைகள் கற்றுக் கொடுக்கத் தவறிவிட்டேன். உங்களுக்கோ குடும்ப பாரம் ஏற்கெனவே மிகுதியாய் விட்டது;

இன்னும் காலம் போகப் போக இதனிலும் அதிகப்படக்கூடும். நீங்கள் எப்படி இந்தச் சுமையைச் பொறுக்கப் போகிறீர்களென்பதை நினைக்கும் போது எனக்குக் கவலையுண்டாகிறது. ஆயினும், லௌகிக தந்திரங்களை நீங்கள் தெரிந்து கொள்ளும் பொருட்டுச் சில கதைகள் சொல்லிவிட்டுப் போகிறேன். தினந்தோறும், விளக்கு வைத்தவுடனே என்னிடம் சிறிதுநேரம் கதை கேட்க வாருங்கள். எனது காலத்துக்குப் பிறகு உங்களுக்கு இந்தக் கதைகள் பயன் படும்'' என்றார்.

அப்படியே, பிள்ளைகள் சரியென்று அங்கீகாரம் செய்து கொண்டனர். பிள்ளைகளிலே மூத்தவன் பெயர் வாஸுதேவன், இரண்டாமவன் பெயர் காளிதாஸன், மூன்றாவது பிள்ளைக்கு ஆஞ்சநேயன் என்று பெயர்.

அன்று மாலை மூன்று பிள்ளைகளும் ஸந்திஜபங்களை முடித்துக்கொண்டு, பிதாவிடம் வந்த நமஸ்காரம் செய்துவிட்டு 'கதை' கேட்க வந்திருக்கிறோம் என்றார்கள். விவேக சாஸ்திரி தம்பிள்ளைகளை அன்புடன் உட்காரச் சொல்லி ''குழந்தைகளே! நமது குல தேவதையாகிய காசி- விசாலாக்ஷியை ஸ்மரித்துக் கொள்ளுங்கள்'' என்றார். அப்படியே மூவரும் கண்ணை மூடிக்கொண்டு சிறிது நேரம் தியானம் செய்து முடித்தார்கள். பிறகு பிதாகதை சொல்லத் தொடங்கினார்:

''கேளீர், மக்களே! ஒரு காரியம் தொடங்கும் போது அதன் பயன் இன்னதென்று நிச்சயமாகத் தெரிந்துக்கொள்ள வேண்டும். அந்த பயன் நமக்கு வேண்டியது தானா என்பதையும் ஆராய்ந்து செய்ய வேண்டும்! பயன்படாத காரியத்திலே உழைப் பவன் ஸங்கீதம் படிக்கப் போன கழுதை போலே தொல்லைப் படுவான்'' என்றார்.

தொடரும்......

---







அழகியல் சமுதாயத்தின் எல்லா மட்டங்களிலும் ஏதோ ஒரு வகையில் தொடர்புபட்டிருப்பதான கருத்துக்களை ஆய்வாளர்கள் முன்வைத்துள்ளனர். மெய்யியல், தியனாய்வியல், கல்வியியல் ஆகிய துறைகளில் உள்ளடங்கிய ஆய்வுப் பொருளாக அழகியல் அமைந்துள்ளது. கலையின் மெய்யியலும், அழகியலும் ஒரே பொருள் குறித்து நிற்கின்றன. ஊகங்களின் அடிப்படையில் அழகியலை விளக்கும் மரபு அக்காலத்தில் மேலோங்கியிருந்தது. சமகாலத்தைய அழகியலின் வளர்ச்சியில் சுவை என்ற பொருள் முக்கியத்துவம் பெறத் தொடங்கியது.

அழகியல் பற்றி தனித்துவமான முறையில் அதிக அளவில் மார்க்ஸ் எழுதவில்லையாயினும் அவர் எழுதிய பொருண்மிய மெய்யியற் கையேடுகளில் உட்பொதிந்த சிந்தனைகளையும் அவர் எழுதிய ஏனைய நூல்களில் இடம்பெற்ற கருத்துக்களையும் அடியொற்றி மார்க்சிய அழகியல் கருத்துக்கள் மேலெழலாயின. கால்மார்க்சின் சிந்தனைகள் வழியாக முகிழ்ந்த உற்பத்திச் செயற்பாடு கலை இலக்கிய ஆக்கங்களில் ஏற்படுத்திய செல்வாக்குகள் விரிவான ஆய்வுகளுக்கு உட்பட்டன. மார்க்ஸ் எழுதிய மூலதனம் என்ற ஆய்வில் சுயபடைப்பு என்ற எண்ணக்கரு முன்வைக்கப்படுகின்றது. தன்னை உருவாக்கிக்கொள்ளும் காட்சியே கலை இலக்கிய உருவாக்கத்துக்குரிய காட்சியாகின்றது. அவ்வாறான சுயபடைப்பாக்கத்தின் தொடர்ச்சியே வரலாற்றின் எழுகோலமாகின்றது.

மார்க்சிய அழகியல் உளவியல் நிலையில் பாட்டாளிகளுக்குரிய அழகியலாகின்றது. அந்த அழகியற் கூறுகள் பூர்சுவாக்களுக்கு அழகற்றவையாகத் தோன்றுதல் தவிர்க்க முடியாதது. கலைவழியான அறிவூட்டல் அழகியலின் சிதைவு என்ற கருத்தாக்கம் முதலாளிய வயப்பட்டது. பாட்டாளி வர்க்கத்தின் அழகியற் சுவையும் வர்க்க உணர்வும் வேறுபிரிக்க முடியாதவை. கலை இலக்கியங்கள் வர்க்க உணர்வின் நீர்த் தேக்கங்களாக இருத்தல் மார்க்சிய அழகியலின் சிறப்பார்ந்த பரிமாணமாகின்றது.

அழகியல் என்ற எண்ணக்கரு-'புலன்களாற் காட்சி கொள்ளத்தக்க ஆற்றலுடையது' என்று கிரேக்கத்தில் விபரிக்கப்பட்டுள்ளது. இயற்கையிலே காணப்படும் அழகுக் காட்சிகளுக்கும், மனிதரால் தோற்றுவிக்கப்படும் அழகுக்குமிடையே வேறுபாடு உண்டு. மனிதரால் தோற்றுவிக்கப்படும் கலையாக்கங்களிலே உணர்ச்சிகளும் கருத்தும் உட்பொதிந்திருக்கும். தொடர்பாடல் நோக்கம் அதன் உட்கிடக்கையாக அமைந்திருக்கும். மார்க்சிய அழகியலை விளங்கிக் கொள்வதற்கு இது ஒரு முக்கியமான படிநிலையாகும்.

உளப்பாங்கு என்பது அழகியல் உளவியலிலே வலியுறுத்தப்படும் ஒரு சிறப்பார்ந்த எண்ணக்கருவாகும். பொருத்தமான உளப்பாங்கு இன்றி அழகைச் சுவைக்க முடியாது. அழகியல் அனுபவம் என்பது அழகியல் உளவியலிலே வலியுத்தப்படும் ஒரு சிறப்பார்ந்த எண்ணக்கருவாகும். புலன் தூண்டிகளை அடியொற்றி உருவாக்கப்படும் அந்த அனுபவம் ஒரு முனைவில் திருப்தியையும் மறுமுனைவில் அங்கலாய்ப்பையும் ஏற்படுத்த வல்லது. ஒருபுறம் நேர் உளப்பாங்குகளையும் மறுபுறம் எதிர் உளப்பாங்குகளையும் உருவாக்கவல்லது. அவற்றுடன் இணைந்து எழுச்சிகொள்வது அழகியல் மகிழ்ச்சியாகும்.

விஞ்ஞான அறிகை தனித்துவமான கணிதக் குறியீடுகளை அடியொற்றி எழுதல் போன்று நடப்பியற் சமூகத்தின் கலைப் படிமங்களை அடியொற்றி அழகியல் தனித்துவங்களுடன் வெளியிடல் சோசலிச நடப்பியலில் முன்னெடுக்கப்படுகின்றது.

மார்க்சிய அழகியற் சிந்தனை வளர்ச்சியில் எரிக்புரோம் தனித்துவம் மிக்க ஆளுமை கொண்டவராகக் கருதப்படுகின்றார். மார்க்சியத்துக்கும் உளப்பகுப்பியலுக்குமுள்ள பொதுத் தளங்களைக் கண்டறியும் அறிகை முயற்சிகள் அவரால் மேற்கொள்ளப்பட்டன.

மார்க்சியம் அழகியலின் பிரயோகத்தன்மையை வலியுறுத்தி நிற்கின்றது. கலைப் படைப்பு கண்டுகளிப்பு என்பதிலிருந்த பிரயோக நிலைக்கு அசைந்து செல்லல் வேண்டும். தூய அழகியல் வாதிகள் அழகியலின் பிரயோகத் தன்மையை ஏற்றுக் கொள்வதில்லை. வேறுசில பூர்சுவா அழகியல் வாதிகள் கலையின் பிரயோகத் தன்மையை முதலாளியத்தின் இயக்கத்துக்குத் துணை நிற்பதில் ஏற்புடைமை கொண்டவர்களாக இருக்கின்றனர்.

மார்க்சிய அழகியல் அல்லது மார்க்சியக் கல்வி நோக்கு குறிப்பிட்ட ஒரு குறுகிய சுற்றுவட்டத்துக்குள் மட்டும் கட்டுப்பட்டு நிற்கவில்லை. இலக்கியங்கள் சமூக ஆக்கம் பெறுதல் என்ற கருத்தை மறுத்துரைத்தலில் இருந்து மார்க்சிய மறுதலிப்புத் திறனாய்வு முன்னீடுகள் வரை வளரலாயின். வடிவப் புனைவுக்கும், கருத்தியல் உள்ளடக்கத்துக்குமிடையே உளச்சார்பளவிலான முக்கியத்துவம் மார்க்சிய அழகியலிலே தொடர்ந்து நீடிக்கலாயிற்று. 1917ஆம் ஆண்டு ருசியப் புரட்சியைத் தொடர்ந்து அங்கு நிலைபேறுகொண்டிருந்த உருவ வன்முறையாளர் (போமலிஸ்டுகள்) மரபுவழி மார்க்சிய சிந்தனைகளை உள்வாங்கி புதிய கம்யூனிச சமூகத்துக்குரிய அழகியலுக்கு அடித்தளமிட்டனர். கலைஞரின் தொழில் நுட்ப முறைமை மற்றும் கைவினைத்திறன் முதலியவற்றை அவர்கள் தமது அழகியல் ஆக்கங்களிலே குவியப்படுத்தலாயினர்.

(ருசிய போமலிஸ்டாகிய மக்கரோவ்ஸ்கி மார்க்சிய அழகியல் நோக்கிலே சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர். அழகியலின் சமூக வருகை அவரால் வலியுறுத்தப்பட்டது. கலை இலக்கியங்கள் வரையறுக்கப்பட்ட ஒடுங்கிய கட்டுப்பாடுகளுக்கு அப்பாற்பட்டவை. அது மாற்றங்களுக்கு உட்பட்ட செயல்முறை என்பதை மார்க்சியம் பலகோணங்களிலே தெளிவுபடுத்தியுள்ளது. கலை இலக்கியங்கள் சமூக நடப்பியல் உணர்வை எந்த அளவுக்குப் பிரதிபலிக்கின்றன அல்லது திரிபுக்காட்சியாக்குகின்றன என்பதை அடியொற்றிய ஆய்வை மார்க்சிய அழகியல் முன்னெடுக்கின்றது.

இலக்கியம் பரந்துபட்ட சமூக நடப்பியல் என்ற புலக்காட்சிக்குள்ளே தான் புரிந்து கொள்ளப்பட முடியும் என்பதை மார்க்சியம் வலியுறுத்துகின்றது. உலகையும் சமூகத்தையும் தரிசிப்பதற்குரிய மார்க்சியத்துக்கு மாற்றீடான கோட்பாடுகள் எதுவுமில்லை. சமூக நடப்பியலைக் கண்டறிவதற்குரிய வரலாற்றுத் தடத்தை மார்க்சியம் போன்று வேறு எந்தக் கோட்பாடுகள் எதுவுமில்லை. சமூக நடப்பியலைக் கண்டறிவதற்குரிய வரலாற்றுத் தடத்தை மார்க்சியம் போன்று வேறு எந்தக் கோட்பாடும் முன்வைக்கவில்லை. உலக நடப்பியலே மனித உள்ளத்திலே பிரதிபலிக்கப்பட்டு சிந்தனைக் கோலங்களாகவும் அழகியல் ஆக்கங்களாகவும் வெளிவருதலை மார்க்சியத்தடம் தெளிவுபடுத்துகின்றது. செம்மையாக வடிவமைக்கப்பட்ட ஓர் இலக்கியம் புறவுலகின் பிரதிபலிப்பாகவே அமையும். ஓர் உள்ளடக்கத்துக்குக் கொடுக்கப்படும் அழகியல் வார்ப்பே வடிவமாகின்றது. மரபுவழிவந்த மார்க்சியத் தளத்தில் நின்று அழகியலை நிலைநிறுத்தியும் திறனாய்வுகளை மேற்கொண்டும் வந்தவர் வரிசையில் லூகஸ் சிறப்பிடம் பெறுகிறார்.

தீவிர வினைப்பாட்டின் முக்கியத்துவம் மார்க்யூஸ் அவர்களால் பலபரிமாணங்களிலே வலியுறுத்தப்படுகின்றது. இச் சந்தர்பத்தில் மார்க்யூசின் சிந்தனைகளையும் அழகியல் ஆக்கங்களையும் தொடர்புபடுத்தி நோக்கவேண்டியுள்ளது. அதனை உன்னிப்பாகத் தொடர்புபடுத்திப் பார்த்தால் கலை இலக்கியங்களும் ஒருவித தீவிர வினைப்பாட்டின் வெளிப்பாடு என்றும், அவை ஒருபொது வினைப்பாட்டுக்குரிய ஆக்கம் என்றும் விரிவு பெறும்.

சமூக அடிப்படையிலேதான் உண்மையும், விழுமியங்களும் தோற்றம் பெறுகின்றன. அனைத்து வரலாற்று விதிகளும், அழகியல் விதிகளும் சமூக ரீதியானவை என்பதில் கிராம்சி என்பவர் நம்பிக்கை கொண்டிருந்தார். அவ்விதிகள் இயல்பாகவே சமூக விடுதலைக்கு இட்டுச் செல்ல வல்லவையாக அமைந்தன.

இலக்கியப்படைப்பு கருத்தியல் தேவையை நிறைவேற்றி வைக்கின்றது. கலைப்படைப்பு கருத்தியலுக்கு அழகியல் வடிவம் கொடுக்கின்றது. பொருண்மிய நோக்கில் வரலாறு, கம்யூனிசத்துக்கான வழிமுறை, தொழிலாளர் வர்க்கப் புரட்சி, அரசியல் பொருளாதாரம், மூலதனம், சமூகமாற்றத்துக்கான தருக்கம், பறிப்பும் மனித அந்நியமயப்பாடும் முதலாம் துறைகளிலே விரிவான ஆய்வுகளை மேற்கொண்ட மார்க்ஸின் மேற்குறித்த சிந்தனைகள் அழகியல் விளக்கத்திற்கும் ஆக்கத்துக்கும் எறிவு செய்யப்படக் கூடியவையாகும். ஆகவே மார்க்சிய சிந்தனைகளில் அழகியல் எங்கும் பரந்திருப்பதை அவதானிக்க முடியும்.



# கூண்டில் நித்யானந்தா!

இமாசல பிரதேசத்தில் கைது செய்யப்பட்ட சுவாமி நித்யானந்தா விமானம் மூலம் பெங்களூர் கொண்டுவரப்பட்டுள்ளார். அவரை 4 நாட்கள் பொலீஸ் காவலில் வைத்து விசாரிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**கைது**

நடிகை ரஞ்சிதாவுடன் தொடர்பு மற்றும் பாலியல் புகார் தொடர்பாக பொலிசாரால் தேடப்பட்டு வந்த நித்யானந்தா கடந்த ஒன்றரை மாத காலமாக தலைமறைவாக இருந்தார். அவர் எங்கு இருக்கிறார் என்பது மர்மமாக இருந்து வந்தது.

இந்த நிலையில், இமாசலபிரதேச மாநிலத்தில், சோலன் மாவட்டம் அக்ரி கிராமத்தில் டெல்லியை சேர்ந்த தொழில் அதிபர் ஒருவரின் வீட்டில் நித்யானந்தா தலைமறைவாக இருப்பதாக, சி.ஐ.டி. பொலிசாருக்கு தகவல் கிடைத்தது.

இதையடுத்து, சி.ஐ.டி. பொலிஸ் படையினர் அங்கு விரைந்து சென்று சோலன் மாவட்ட பொலிஸாரின் உதவியுடன் நித்யானந்தாவை கைதுசெய்தனர். அவருடன் இருந்த நித்திய பக்தானந்தா என்ற கோபால் சீலம் ரெட்டி, மிதா சனாதன் நந்தா, அர்பல் சங்கில், அருண்ராஜ் ஆகிய 4 சீடர்களையும் பொலிஸார் கைது செய்தார்கள்.

**பெங்களூர் கொண்டுவந்தனர்**

கைதான அவரை கர்நாடகத்தை சேர்ந்த சி.ஐ.டி. பொலிஸ் துணை சூப்பிரண்டுகளான ஹுசேன் மற்றும் சந்திரசேகர் தலைமையிலான தனிப்படை பொலிஸார் சிம்லாவில் இருந்து சண்டிகர்-மும்பை வழியாக விமானம் மூலம் பெங்களூருக்கு அழைத்துவந்தனர்.

நித்யானந்தா, வந்த விமானம் இரவு 7.10 மணி அளவில் பெங்களூர் தேவனஹள்ளியில் உள்ள சர்வதேச விமான நிலையத்தில் தரை இறங்கியது.

**பலத்த பொலிஸ் பாதுகாப்பு**

நித்யானந்தாவுக்கு எதிராக சில கன்னட அமைப்புகள் போராட்டம் நடத்தக் கூடும் என்று பொலிஸார் கருதியதால் அவரை பத்திரமாக விமானத்தில் இருந்து அழைத்து வந்து அங்குள்ள ஓர் அறையில் தங்க வைத்தனர். அவரை எங்கு அழைத்துச் செல்வது, ரகசிய இடத்தில் வைத்து விசாரணை நடத்துவதா அல்லது நீதிமன்றில் ஆஜர்படுத்துவதா என்பது பற்றி பொலிஸார் ஆலோசனை நடத்தினர்.

பின்னர் நித்யானந்தாவின் சீடர் நித்திய பக்தானந்தா என்ற கோபால் சீலம் ரெட்டி முதலில் வெளியே அழைத்து வரப்பட்டார். அவரை தொடர்ந்து 7.30 மணி அளவில் பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் நித்யானந்தா விமானத்தில் இருந்து வெளியே அழைத்து வரப்பட்டார். அப்போது விமான நிலையத்தில் ஏராளமானவர்கள் கூடி இருந்தனர். அவர்கள் நித்யானந்தாவை பார்க்க முண்டியடித்தனர். கூட்ட நெரிசலுக்கு மத்தியில் பொலிஸார் அவரை பத்திரமாக வெளியே அழைத்து வந்தனர்.

அப்போது அவர் கை கூப்பி கும்பிட்டபடியே வந்தார்.

**மருத்துவ பரிசோதனை**

நித்யானந்தாவை பொலிஸார் வெளியே தயாராக நிறுத்தி இருந்த காரில் ஏற்றினர். பின்னர் கார் விமான நிலையத்தில் இருந்து புறப்பட்டு சென்றது. விமான நிலையத்தில் இருந்து நித்யானந்தா நேரடியாக பெங்களூரை அடுத்து உள்ள ராமநகருக்கு கொண்டு செல்லப்பட்டார். அங்குள்ள அரசு மருத்துவமனையில் இரவு 9.10 மணி அளவில் அவருக்கு மருத்துவ பரிசோதனை நடைபெற்றது.

பின்னர் இரவு 10.30 மணி அளவில் நீதிபதி வீட்டுக்கு கொண்டு செல்லப்பட்ட நித்யானந்தா தலைமை நீதிபதி புஷ்பாவதி முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார். நீதிபதி 15 நிமிடங்கள் விசாரணை நடத்தினார். அப்போது பொலிஸ் காவலில் எடுத்து அவரை விசாரிக்க அனுமதி கேட்டு சி.ஐ.டி. பொலிஸார் மனுதாக்கல் செய்தனர். அந்த மனுவை விசாரித்த நீதிபதி புஷ்பாவதி வருகிற 26ஆம் திகதி வரை சி.ஐ.டி. பொலிஸார் தங்கள் காவலில் வைத்து விசாரிக்க அனுமதி அளித்து உத்தரவிட்டார்.

அதனை தொடர்ந்து சி.ஐ.டி. பொலிஸ் சூப்பிரண்டடன் யோகப்பா தனது பொறுப்பில் நித்யானந்தாவை விசாரணைக்காக ரகசிய இடத்துக்கு அழைத்துச் சென்றார்.

**மர்ம மனிதன்**

நீதிபதி வீட்டில் இருந்து வெளியே நித்யானந்தாவை பொலிஸார் அழைத்து வந்தனர். அப்போது காரின் அருகே நின்றிருந்த மர்ம மனிதன் ஒருவன் திடீரென்று நித்யானந்தாவை நோக்கி ஆவேசமாக பாய்ந்து சென்றான். அப்போது நித்யானந்தாவை கெட்ட வார்த்தையால் அவன் திட்டினான். அங்கு பாதுகாப்புக்கு நின்றிருந்த பொலிஸார் அந்த மர்ம நபரை பிடித்துக்கொண்டனர். பின்னர் அந்த நபரை பொலிஸார் கைது செய்து வாகனத்தில் அழைத்து சென்றனர். இதனால் அங்கு திடீர் பரபரப்பு ஏற்பட்டது.

**நித்தியானந்தர் ஆசிரமத்தில் செக்ஸ் சி.டி.க்கள்**

கர்நாடக சி.ஐ.டி. பொலீஸார் பெங்களூர் பிடுதியில் உள்ள இவரது தியான பீட ஆசிரமத்தில் சோதனை நடத்தியபோது பல ஆவணங்கள் சிக்கின. மேலும் இந்த சோதனையில் 5 பெண்களுடன் நித்யானந்தா செக்ஸ் லீலைகளில் ஈடுபட்ட 35 சிடிக்களும் சிக்கியுள்ளன.

இந்த தியான பீடத்துக்கு வருவோரிடம், குறிப்பாக பெண்களிடம் ஒரு 10 பக்கங்கள் கொண்ட ஒப்பந்தத்தில் கையெழுத்து வாங்கப்படுவதுண்டு.



அதில் கடைசி பக்கங்களில் செக்ஸ், உடலுறவு தொடர்பான ஷரத்துக்களை சேர்த்துள்ளனர். இந்த இரு பக்கங்களில் கூறப்பட்டுள்ளதாவது:

''வாழ்க்கைக்கு 64 வகையான தந்திரங்கள் தேவை. அதில் 6 வகையான தந்திரங்கள் செக்ஸ் தொடர்பானவை. உணர்ச்சியூட்டும் படங்களைப் பார்ப்பது, காம உணர்வுகளை தூண்டும் இசை கேட்பது, நிர்வாணமாக நடமாடுவது ஆகியவை ஆத்மாவின் விடுதலைக்கு அவசியம்.

ஆசிரமத்தில் ஆராய்ச்சிக்கு தேவைப்படும் பட்சத்தில் செக்ஸ் வைத்துக் கொள்ளவும் நேரிடும். அதற்கு எவரும் ஆட்சேபம் தெரிவிக்கக்கூடாது.

எவரும் எவருடனும் உறவு வைத்துக் கொள்ளலாம்; இதனால் சிலருக்கு உடல் அளவிலோ, மனதளவிலோ கஷ்டமாக இருந்தால் அதை தாங்கிக்கொள்ள வேண்டும்.

செக்ஸ் உறவில் சம்பந்தப்பட்ட நபர் அதை பற்றி வெளியே யாரிடமும் எந்த சூழ்நிலையிலும் சொல்லக்கூடாது.

மேலும் இந்த ஒப்பந்தம் பற்றியும் வெளியில் சொல்லக் கூடாது''.

இவ்வாறு அந்த ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ளது.

இந்த 10 பக்க ஆங்கில ஒப்பந்தத்தை படித்துப் பார்க்க நேரமே தராமல் நேரடியாக கையெழுத்து வாங்கியுள்ளனர் இந்த ஆசிரமத்தில் வேலை செய்த நித்யானந்தாவின் ஆட்கள்.

ஆசிரமம்தானே கேட்கிறது என்பதால் பெரும்பாலானவர்கள் என்ன எழுதியுள்ளது என்பதை படிக்காமலேயே கையெழுத்து போட்டுள்ளனர். நீட்டிய பேப்பர்களில் எதுவும் கேட்காமல் கையெழுத்து போட்டுத் தந்துள்ளனர்.

ஆனால், இப்படி ஒப்பந்தம் போட்டு செக்ஸ் வைத்துக் கொள்ள சட்டத்தில் இடமில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஒப்பந்தத்தில் நடிகை ரஞ்சிதாவும் கையெழுத்து போட்டிருக்கலாம் என்று தெரிகிறது.

மேலும் கர்நாடக சி.ஐ.டி பொலீஸார் நடத்திய சோதனையில் நித்யானந்தாவின் 35 செக்ஸ் லீலை சிடிக்களும் சிக்கியுள்ளன. இந்த சிடிக்களில் நித்யானந்தா 5 பெண்களுடன் நாள் கணக்கில் செக்ஸ் கும்மாளம் அடிக்கும் காட்சிகள் அடங்கியிருப்பதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. ❋

---

# முட்டாள் தினக் காதல்



வான்மதி கட்டிலில் படுத்திருக்கிறாள். நேரம் காலை ஐந்தரை இருக்கும். வழமையாக அவள் எழும்பும் நேரம்தான் இது. கண்களை மெதுவாக திறந்தாள். கட்டிலில் எழும்பி இருந்தவாறே வழமையான தெய்வ வணக்கத்தை செய்துவிட்டு கண்களை திறந்தபோது அவளின் கைப்பேசி டிங்.... டிங்... என சத்தமிட்டது. இந்த நேரத்தில் யார் எஸ்.எம். எஸ் அனுப்புவது? எழுந்து மேசையில் இருந்த கைப்பேசியை எடுத்துப் பார்த்தாள். ''ஹாய் வான்மதி, இதை உங்களிடம் நேரே சொல்லும் துணிச்சல் எனக்கு இல்லை. என்னை பிடித்திருந்தால் பதில் எஸ். எம். எஸ் அனுப்புங்க.. இல்லாவிட்டாலும் பரவாயில்லை. ஆனால் நான் உங்களை லவ் பண்ணுறேன்!'' அந்த தொலைபேசி எண் நிலவனின் உடையது என்பது வான்மதிக்குத் தெரியாதா? இத்தனை நாள் இதைத்தானே அவள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். எப்படித்தான் காதலை நிலவனிடம் சொல்வது, அவன் அதை ஏற்பானா என்று எண்ணிக்கொண்டிருந்தவளை தேடி இப்படி ஓர் செய்தி. இனியேது அவளுக்கு ஏக்கம்?

இன்று அவளின் இரண்டாம் எண்ணுக்குரிய நாளாந்த பலன், மகிழ்ச்சி என இருந்தது. சரிதான் போல. நிலவனுக்கு ''உங்கள் அன்புதான் எனக்கு தேவை. எனக்கு காதல் என்றால் நீங்கள் மட்டுமே! எனக்கு உங்களை பிடிச்சிருக்கு....'' இப்படி பதில் எஸ்.எம்.எஸ். அனுப்பினாள் அவள். அவனின் காதல் கிடைத்ததற்கு முதலில் கோயிலுக்குச் செல்ல வேண்டும் என நினைத்தவாறே குளியலறைக்கு போனாள் வான்மதி.

அரைமணி நேரம் கழிந்திருக்கும். கேற்றை திறந்துகொண்டு அவளின் தோழி சுபாசினி வந்தாள். கோயிலுக்கு போக ஆயத்தமாகிக் கொண்டிருந்தாள் வான்மதி. ''ஏய் டென்சன் ஆகியிருப்பே. சொரீடீ.... ஏப்ரல் பூல் தானே! அதுதான்டீ உன்னை முட்டாள் ஆக்கணும் என்று அண்ணாவின் போனை எடுத்து உனக்கு எஸ்.எம்.எஸ். அனுப்பினேன். குழம்பிட்டியா.... அண்ணாவிடம் சொல்லிடாதேயடி'' கெஞ்சினாள் தோழி சுபாசினி. வான்மதியின் மனதுக்குள் நிலவன் இருப்பது சுபாசினிக்கு எங்கே தெரியப் போகிறது. வான்மதியின் மனது திக் என்றது. அவனை காதலிப்பதாக அவசரப்பட்டு பதில் எஸ்.எம்.எஸ். வேறு அனுப்பி விட்டாளே!

''உனக்கு முட்டாள் தினம் கொண்டாட காதலாடீ. கிடைச்சுது? என்னை முட்டாள் ஆக்கேல்டீ. மனசை ஊனம் ஆக்கிட்டே'' முகம்வாடி சொன்னாள் வான்மதி. தான் பதில் எஸ்.எம்.எஸ். அனுப்பியதை சுபாசினிக்கு, வான்மதி சொல்லவில்லை. முட்டாள் தினத்திற்காக அந்த எஸ்.எம்.எஸ். சும்மா அனுப்பினேன் என நிலவனுக்கு சொல்ல பலதடவை அழைப்பு எடுத்தாள். அழைப்பு கிடைக்கவில்லை.

பகல் ஒரு மணி. இன்று ஏன் தனக்கு ஒரு அழைப்பும் வரவில்லை என கைப்பேசியை நிலவன் பார்த்தான். ஸ்விட்சை ஓன் செய்தான். உடனேயே காலையில் வான்மதி அனுப்பிய எஸ்.எம்.எஸ். கைப்பேசியின் திரையில் விழுந்தது. படித்தான். மகிழ்ச்சியில் துள்ளிக்குதித்தான். உற்சாகத்தோடு வான்மதியின் எண்ணுக்கு அழைப்பு எடுத்தான். அவன் ஏதோ திட்டித் தீர்க்கப் போகிறான் எனப் பயந்தவாறே ''ஹலோ..'' என்றாள் வான்மதி. ''உங்கட எஸ்.எம்.எஸ். இப்பதான் கிடைச்சுது. நான் எப்படி லவ் சொல்லலாம் என்று இருந்தேன். நீங்களாகவே சொல்லிட்டீங்கள். ஐ லவ் யூ வான்மதி'' என்றான்.

வான்மதியின் மனதில் ஆயிரம் அல்ல அதைவிட அதிகமாக பட்டாம் பூச்சிகள் சிறகடித்தன. இந்த செய்தி பொய் அல்ல. ஏனெனில் முட்டாள் தினம் அனுஷ்டிக்கும் நேரம் முடிந்த பின்புதானே இந்த முத்தான செய்தி வந்தது.

மோகநாட்சி



# பிரிந்து வாழ்வதால் ஏற்படும் மனபதபதைப்பு, மன அழுத்தம்!

**கேள்வி:** வயது 34 ஆண். சமீபத்தில் எனது விந்து பரிசோதிக்கப் பட்டது. அதில் மொத்த விந்துகள் 38 மில்லியன்/மி.லீட்டர் இருந்தது. இதில் 55 சதவீத மானவை வீரியத்துடன் அசைவனவாகவும் (ACTIVET MOTILE) 5 வீதம் மந்த அசைவுடனும், 40 வீதம் அசைவற்றதாகவும் இருந்தன. இது ஏதாவது பிரச்சினையை தருமா?

**பதில்:** எதற்காக விந்து பரிசோதனை செய்யப்பட்டது என்ற விவரத்தை நீங்கள் தரவில்லை. விந்து பரிசோதனை பொதுவாக ஆண் மலட்டுத்தன்மையை கண்டறிவதற்காக செய்யப்படுவது. திருமணமாகி ஒருவருடத்துக்கு மேலாகியும் - பெண் கருத்தரிக்கவில்லை என்றால் SUBFERTILITY என்கின்ற மலட்டுத்தன்மைக்கு பரிசோதனைகள் மேற்கொள்ளப் படுகின்றன. இந்தப் பரிசோதனைகளில் ஆண்களின் மலட்டுத்தன்மைக்கு விந்து குறைபாடு காரணமாக உள்ளதா என்பதை அறிவதற்காகவே விந்து பரிசோதனை செய்யப்படுகின்றது.

கருக்கட்டுவதற்கு ஒரே ஒரு விந்தணு மட்டுமே போதுமானது. ஆனால் உடலுறவின் போது விந்து ஸ்கலிதமாகி - பெண் முட்டையை சந்திப்பதற்கு முன்னர் அது பயணம் செய்யும் தூரம், பயணத்தின் போது சந்திக்கும் இடர்கள், விந்துக்களின் குறுகிய வாழ்க்கை வட்டம் என பலவித காரணங்களால் மில்லியன் கணக்கில் புறப்பட்ட விந்துக்களில் பல அழிவுகள் ஏற்பட்டு இறுதியில் நூற்றுக்கணக்கில் உள்ள விந்துக்களில் ஒரு அதிர்ஷ்டசாலி விந்தணு மட்டுமே முட்டையை கருவுறச் செய்கிறது.


எனினும் இப்படியான வெற்றிகரமான பயணத்துக்கு மில்லியன் கணக்கில் விந்தணுக்கள் தேவைப் படுகின்றன என்பதை மறுக்க முடியாது. சாதாரணமான ஒரு மனிதனுக்கு ஒரு மி.லீட்டர் கன அளவில் 20 மில்லியன் எண்ணிக்கையான விந்தணுக்கள் சராசரியாக இருக்கும். இவற்றில் 60 வீதம் வீரியத்துடன் அசைவதாக இருக்கும். இதில் 8 மில்லியன் விந்தணுக்கள் FORWAR MOTILITY எனப் படும் முன்னேறிச்செல்லும் வீரியத்துடன் இருக்கும். இந்த விந்தணுக்களில் குறைந்தது 30 சதவீதமானவை முழுமையாகவும், சிதைவுறாமலும் - உடையாமலும் இருந்தாலே - கருக்கட்ட போதுமானது. உங்கள் விந்து பரிசோதனையின் முடிவுகளைப் பார்க்கும் போது நீங்கள் சராசரிக்கும் மேலே இருப்பதால் - எதுவித பிரச்சினையும் இல்லை.

**கேள்வி:** பெண் வயது 33. மூன்று வருடங்களுக்கு முன்னர் TENNIS ELBOW என்ற முழங்கை வலியினால் கஷ்டப்பட்டு, எனது மருத்துவர் தந்த மாத்திரை மற்றும் சிறிது காலம் முழங்கால், மூட்டுக்கு அணிந்து வந்த 'TENNIS BAND' என்ற உறை என்பவற்றால் சுகம் பெற்றேன். ஆனால் கடந்த ஒரு மாதத்திலிருந்து எனது முழங்கை வலி திரும்பவும் ஏற்பட்டுள்ளது. முழங்கை உறையை திரும்ப அணிந்தும் ஓரளவுதான் சுகம் தெரிகிறது. நான் கணினியில் தொழில் புரிகின்றேன். இந்த முழங்கை வலியால் தொடர்ந்தும் பணிபுரிய முடியாமல் உள்ளது. வீட்டு வேலைகளையும் கஷ்டத்துடன் செய்யவேண்டியுள்ளது. எனது முழங்கை வலிக்கு பரிகாரம் கூறவும்.

**பதில்:** உங்கள் முழங்கை வலி பிரச்சினை நிறைய நேரம் கணினியில் பணிபுரிவதால் - கணினி பணியாளர்களுக்கு வழக்கமாக ஏற்படும் (RSI- REPETITIVE STRAIN INJURY) தசை இறுக்க நோயாக இருக்கலாம் என்று எண்ணுகின்றேன். இது தவிர வழக்கமாகவே முழங்கை மூட்டானது 180° அளவிற்கு தான் விரியக்கூடியது. ஆனால் பாரமான பொருட்கள் தூக்குவதனால் - பெண்களாகிய நீங்கள் - வாளிகளில் நீர் பிடித்து தூக்கி வரும் பொழுது முழங்கை மூட்டானது 190° பாகை வரை விரியக் கூடும். இதனால் முழங்கை மூட்டு எழும்புகள் இழுபட்டு சிதைவுற்று வலியைத்தரும். டென்னிஸ் விளையாடும் போது கூட - டென்னிஸ் மட்டையை கரத்தை உயர்த்தி - முழங்கை மூட்டில் சுழற்றி பந்தை அடிக்கும் போதும் இதே வகையில் தசைநார் பாதிக்கப்படுகிறது. எனவே இந்த வகை வலியை TENNIS ELBOW என்று பொதுவாக குறிப்பிடுவார்கள். முன்னர் கூரிய படி டென்னிஸ் விளையாடாமலே - இந்த வலி ஏற்படலாம். மருத்துவத்தில் இதனை LATERAL EPICONDYLITIS என்பார்கள். இதற்கு மருந்து சிகிச்சை என்பவை - வலிதீர்க்கும் மருந்துகளும், பூச்சு மருந்துகளும், முழங்கை இயக்கத்தை கட்டுப்படுத்த TENNIS BAND எனப்படும் உறை அணிதலுமாகும். வலி அதிகமாக, நாளாந்த வாழ்க்கைக்கு சங்கடம் தருவதாக இருந்தால் - இந்த தசைநார் எழும்பில் இருக்கின்ற இடத்தில் சுழற்சியை குறைக்க HYDROCORTISONE வகை ஊசி மருந்தை ஏற்றுவதே இறுதி தேர்வாக இருக்கும். இப்படி ஊசி மருந்து ஏற்றியும், பலன்காணாமல் கஷ்டப்பட்டோரையும் நான் அறிவேன். எதற்கும் நான் கூறும் வழிமுறைகளை பின்பற்றி பாருங்கள்.


இலவச மருத்துவ ஆலோசனைகளை
'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார்
டாக்டர்
எஸ்.அருள்ராமலிங்கம்
நீங்கள் கேள்விகளை
அனுப்பவேண்டிய முகவரி
இலவச மருத்துவ ஆலோசனை
'சுடர் ஒளி'
85, ஜயந்த மல்லிமாராய்ச்சி
மாவத்தை, கொழும்பு - 14.


கணினியின் பணிபுரியும் போது கணினியில் விசைப்பலகை (KEY BOARD) மற்றும் சுட்டி(MOUSE)என்பவை பதிவாகவும் - கையை நீட்டாமல் பணிபுரியக் கூடிய விதத்தில் சமீபமாகவும் இருக்குமாறு பார்த்துக் கொள்ளவும். மடிக்கணினிகளை (Loptop) உபயோகிப்பதை தவிர்க்கவும். மடிக்கணினிகளின் வடிவமைப்பு ERGONOMICS என்கின்ற பணிபுரியும் சூழ்நிலைக்கு நீண்ட நேர பணிகளுக்கு ஏற்புடையதல்ல. முழங்கையை மடித்து உங்கள் வேலைகளை செய்யப் பழகுங்கள். முழங்கை நீட்டப்பட்டு பணிபுரியும் போது தான் பாதிப்பு ஏற்படுகின்றது. கைகளுக்கு நீண்ட நேரத்திற்கு, நீண்ட காலத்திற்கு BAND உறை அணிவதால் வலி குறைவாக தெரிந்தாலும், நீண்ட கால உபயோகத்திற்கு பின்னர் - முழங்கை மூட்டை பாதுகாத்துவரும் தசைகள் வலுவிழக்க இவை காரணமாக இருக்கலாம். எனவே மொத்தத்தில் இவற்றை அணிவதை தவிர்க்கவும். முழங்கையை உபயோகித்து செய்யும் வேலைகளை முடிந்தவரை தவிர்க்க. தினமும் 5-6 தடவைகள் முழங்கை மூட்டு பகுதியில் குளிர் நீராலும், வெப்ப நீராலும் மாறி மாறி ஒத்தடம் 3 நிமிடம் வரை கொடுக்கவும்.



**கேள்வி:** ஆண் வயது 33. எனது சொந்த இடத்தை விட்டு வெளியால் சென்றால் எனக்கு மனப்பதைப்பு, மனஅழுத்தம் (DEPRESSION) ஏற்படுகின்றது. ஒருசில வாரங்களுக்கு முன்னர் எனது சொந்த இடத்தை விட்டு வெளியே நல்லதொரு வேலைவாய்ப்பு கிட்டியது. அங்கு பணிபுரியச் சென்ற போது சில நாட்களின் பின்னர் மனஅழுத்தத்திற்கு ஆளானேன். அழுகையாக வந்தது. எதிர்மறை எண்ணங்கள் (NEGATIVE THOUGHTS) நினைவுக்கு வந்தன. இதனால் மேலும் மனஅழுத்தத்துக்கு உள்ளானேன். இதனால் வேலையை விட்டு எனது சொந்த இடத்திற்கு திரும்பி விட்டேன். அதன் பின்னர் எனது மனம் சந்தோஷமாக இருக்கின்றது. என்னால் எனது குடும்பத்தைவிட்டு பிரிந்து இருக்கவே முடியாது. இது தவிர பஸ்ஸிலோ, ரயிலிலோ பிரயாணம் செய்யும்போது அச்ச உணர்வு ஏற்படுகின்றது. எனது உடல் நிலை பற்றி நான் மிகவும் கவனம் எடுப்பவன். எனது குடும்பம் மனைவி, என்பவர்களை பிரிந்து வாழும் மனோநிலை ஏற்பட வழி சொல்லவும்.


**பதில்:** உங்களுக்கு ஏற்பட்டுள்ளது ANXIETY என்கின்ற மனபதகளிப்பு அல்லது ஏக்க கோளாறு. உண்மையில் இதிலிருந்து விடுபட உங்களுக்கு விருப்பம் இருப்பின் மனோநல வைத்தியரின் ஆலோசனையை நாடுவது அவசியம். அவரிடம் உங்கள் கலக்கத்தின் முழுவிவரத்தையும் - உங்கள் குடும்ப உறவு பற்றியும் விரிவாக கூறவும். மனநல வைத்தியருடன் இப்படி கலந்து பேசுவது - உங்கள் பிரச்சினையின் அடிப்படை காரணத்தை அறிவதற்கு உதவும். இதனால் தூர இடத்தில் வசிப்பதற்கு குடும்பத்தை பிரிந்து வசிப்பதற்கு ஏற்ற மனநிலையை உருவாக்கமுடியும். சிலவேலை உங்கள் மனபதபதைப்புக்கு சில மருந்துகள் உபயோகிக்கவேண்டி வரலாம். எனவே காலம் தாழ்த்தாமல் காரியத்தை கவனிக்கவேண்டியது நல்லது. *


# நரியும் நீர்நாயும்

இளஞ்சுடர்

தயாரிப்பு : தினா

புத்தாக்கம் : கே.கான்






# இரு விஞ்ஞானிகளின் செவ்வாய்க் கிரக அனுபவங்கள் 2

அப்போது அவர்களுக்குப் பின்னாலிருந்த மலைக் கற்பாறைகளிலிருந்து சிறு சிறு வாயில்கள் திறந்துகொண்டன. அவற்றிலிருந்து புற்றீசல் போன்று இரண்டு அடி உயரமுள்ள குள்ளர்கள் அவர்களை நோக்கி ஓடிவந்தனர். இந்தக் காட்சியை அவர்களால் கற்பனை செய்தும் பார்க்க முடியவில்லை. நூற்றுக்கணக்கான குள்ளர்கள் அவர்களைச் சுற்றி வளைத்திருந்தனர். அவர்கள் மத்தியிலிருந்து வெளிப்பட்ட சீருடை அணிந்த பொலிஸ்காரர்கள் இருவர் அவர்களுக்குக் கைவிலங்கிட்டுத் தம்மோடு அழைத்துச் சென்றனர்.

அவர்கள் குறுகிய வாயிலொன்றின் ஊடாக உள்ளே சென்று பார்த்தபோது, திகைத்துப் போய்விட்டனர். அங்கே மனித நடமாட்டமும் அவர்களுடைய ஆரவாரமும் காணப்பட்டது. அங்கே பாதைகளும், கடைகளும், வீடுகளும், மாளிகைகளும் காணப்பட்டன. தூரத்தில் சிறு சிறு கிராமங்களும் இருப்பது தென்பட்டது. கற்பாறைகளைக் குடைந்து ஒரு நாட்டையே செவ்வாய்க் கிரக வாசிகள் உருவாக்கியிருந்தனர்.



இப்போது முஸம்மிலும் மூஸீனும் தம்முடைய அனுபவங்களைப் பகிர்ந்துகொள்கிறார்கள்.

"நாம் பூமியிலிருந்து வந்திறங்கியதிலிருந்து எமது நடமாட்டங்களையும் நாம் மேற்கொண்ட ஆராய்ச்சிகளையும் இவர்கள் உன்னிப்பாக அவதானித்ததைப் பின்னால் தெரிந்துகொண்டோம். அது மட்டு மல்ல, அவற்றைப் பதிவு செய்தும் வைத்திருந்தனர். இவர்கள் பூமியில் இருக்கும் விஞ்ஞானிகளை விட தொழில் நுட்பத்துறையில் மிக முன்னேறியவர்களாக இருந்தனர் என்பதையும் எம்மால் ஊகிக்க முடிந்தது.

**-கனேதன்னை காதர்**

"செவ்வாயக் கிரகப் பொலிஸார் எம்மை அரசனின் முன்கொண்டுபோய் நிறுத்தினார்கள். அதன் பின்னர் எமது கைவிலங்குகள் அகற்றப்பட்டன. அரசன் தன்னுடைய சிங்காசனத்திலிருந்து எழுந்து எம்மிடம் வந்தான். எம்முடைய கைகளைக் குலுக்கி எம்மை மங்களகரமாக வரவேற்றான். அரசன் என்கின்ற அகந்தையோ பெருமையோ அவனிடம் காணப்படவில்லை. அத்தோடு அவனுக்கெனப் பிரத்தியேகமான பாதுகாப்பு ஏற்பாடுகள் எதுவும் இல்லாதிருந்தது எம்மைப் பேராச்சரியத்துக்கு உள்ளாக்கிற்று.

"அதன் பிறகு செவ்வாய்க் கிரகத்தில் எமது நடவடிக்கைகள்பற்றி அரசனுக்கு முன்னால் இருந்த திரையில் போட்டுக் காண்பிக்கப்பட்டது. நாம் வந்திறங்கியது முதல் கைதுசெய்யப்பட்டது வரையிலான அனைத்தும் அரசருக்கு எடுத்துக் காண்பிக்கப்பட்டன. எங்களைப் போல் குள்ளர்களாக மாறியவர்களைத் தான் அவர்கள் கைதுசெய்து அழைத்துச் செல்வார்கள். அப்படி இல்லாவிட்டால், அவர்கள் திரும்பிச் செல்லும் வரை அவர்களது நடவடிக்கைகளைத் தாம் இருந்த இடத்தில் இருந்தபடியே உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருப்பார்கள். செவ்வாய்க் கிரகத்தில் மனிதர்கள் வாழ்ந்து வருவதை மறைக்க அவர்கள் அத்தனை ஏற்பாடுகளையும் செய்துவைத்திருந்தார்கள்.

"அரசன் எங்களை அமரச் சொன்னான். நாம் களைப்படைந்து இருப்பதால் எமக்கு உணவு கொண்டுவருமாறு தன்னுடைய பணியாளர்களைப் பணித்தான். வகைவகையான ரொட்டிகள், இறைச்சி, பால், பழவகைகள் எனபன எமக்குப் பரிமாறப்பட்டன. அமிர்தம் இவ்வாறு தான் இருக்குமோ என்று கூறும் அளவுக்குச் சுவையாக இருந்தன அந்த உணவுகள். இருவரும் நன்றாக உண்டு குடித்து மகிழ்ந்தோம். உடம்பிலே புதுத்தெம்பு வந்துவிட்டது போல் இருந்தது.

"அதனைத் தொடர்ந்து அரசன் பொதுமக்களுக்கு ஓர் உரை ஆற்றினார். அது அங்கிருந்த அனைத்துத் தொலைக்காட்சிச் செனல்களிலும் ஒளிபரப்பப்பட்டது. எம்முடைய படங்களும் காட்டப்பட்டன. அரசர் சொன்னார்:'இங்கே வந்திருக்கும் இருவரும் பூமியைச் சேர்ந்த விஞ்ஞானிகள். இவர்கள் எமது கிரகத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்ய வந்திருக்கிறார்களேயன்றி, எம்மை அழிக்கவோ எமது மூளவளங்களைச் சுரண்டவோ வரவில்லை. இவர்கள் எம்மைச் சேர்ந்தவர்களாகிவிட்டனர். இனி இவர்கள் எமது நாட்டுப் பிரஜைகள். இவர்களோடு சமத்துவ, சகோதரத்துவ உணர்வோடு நடந்துகொள்ளுங்கள். இதன் பிறகு இவர்களுக்குத் திரும்பிச் செல்ல முடியாது. இங்கு வந்து எம் இனத்தவர்களாக மாறிய எவரும் தத்தம் கிரகத்துக்குப் போனதும் கிடையாது. இங்கு நாம் கலந்திருக்கும் 'நாவிக்' திரவத்தைக் குடிப்பவர்கள் குள்ளர்களாவார்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள்."

அரசன் இவ்வாறு சொல்லி முடிந்ததும் செவ்வாய்க் கிரகமெங்கிலும் மகிழ்ச்சி ஆரவாரம் விண்ணதிர முழங்கிற்று.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)







"பல் வைத்திய சாலைக்கு எப்படிப் போகனும் ?"
"சொத்தைபல்லோடத்தான்"

***

"18ஆம் நம்பர் பஸ்ஸுக்காக நீண்ட நேரம் காத்துக்கொண்டிருந்தேன். வரவே இல்லை"
"அப்புறம் என்ன பண்ணினாய் ?"
"9ஆம் நம்பர் பஸ்ஸில் இரண்டு தடவை போய்விட்டு வந்தேன்".

***

மகன்: "அம்மா நான் ஹார்லிக்ஸை அப்படியே சாப்பிடுவேன்."
அம்மா: "பாத்துடா! உள்ளே ரெண்டு கரண்டிகள் போட்டிருக்கேன்."

***

ஆசிரியர்: "ஏண்டா உடம்பு முழுக்க சட்டை போட்டுட்டு வந்திருக்க?"
மாணவன்: நீங்கதானே சார் நீட்டா டிரஸ் பண்ணிட்டு வரச் சொன்னீங்க!


***



"லெக்சரருக்குத் தமிழில் என்ன?"
"பிரசங்கி!"
"அப்போ புரோபஸருக்கு?
"அதிகப்பிரசங்கி"


***

## வர்ணம் தீட்டுங்கள்



யுத்தம் நடைபெற்ற நாட்களில் வன்னியில் எவ்வளவோ சம்பவங்கள் இடம்பெற்றுள் என. தாங்கள் எதிர்கொண்ட அவலங்களை, தங்களுக்கு ஏற்பட்ட பயங்கர அனுபவங்களை பலர் 'உயிர் வலிக்கும் கணங்கள்' என்ற பகுதியில் எழுதி வருகிறார்கள். அதே போன்று வன்னியில் இடம் பெற்ற சம்பவங்களை பலர் கதை வடிவிலும் எழுதி வருகிறார்கள். இந்த தொடரில் 'கச்சேரி சடையன்' என்ற புனை பெயரில் வெளி வருகிறது 'புதிய உறவுகள்' என்ற உண்மைக்கதை.

# 1 புதிய உறவுகள்



**வி**சுவமடு வீதியால் ஆயிரக் கணக்கான மக்கள் இடம் பெயர்ந்து வந்து கொண்டிருந்தனர். அவர்களில் நானும் ஒருத்தியாக உழவு இயந்திரத்தில் வந்து தேராவில் என்னும் சிறிய கிராமத்தில் இறங்கி னேன். வேறும் பலர் வந்து இறங்கினார்கள். அந்த இடம் பெரிய வெளியாக இருந்தது. அந்த இடம் பண்ணைக்காக ஒதுக்கப்பட்ட இடம். அந்த இடத்தில் இருக்க முடியாது என்று சிலர் சொல்ல, வந்தக் கொஞ்சப் பேர் திரும்பிப் போய்க் கொண்டிருந்தனர்.

எனக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. நான் எந்த உதவியும் இன்றி ஒரு தனி மரமாகவே இருந்தபடியால் எல்லா விடயங்களுக்கும் யோசிக்க வேண்டியவளாக இருந்தேன்.

அப்பொழுது ஒரு வெள்ளை நிற வாகனம் வந்து நின்றது. அதில் இருந்து ஒருவர் இறங்கி வந்து எல்லோரையும் பார்த்துவிட்டு சொன்னார் ''பிரச்சினை இல்லை. நீங்க எல்லோரும் இந்த இடத்திலேயே வீடு போட்டு இருங்கோ. தண்ணீர்தான் கஷ்டம். நான் அதை ஒழுங்கு பண்ணித் தாறன்'' என்றார். அவர் சொல்லிவிட்டு போகும் போது என்னைக் கண்டுவிட்டு என்னிடம் வந்தார். ''தங்கச்சி உங்களோடு வேறு ஆட்கள் வந்தவர்களா'' என்று கேட்டார். நான் ''இல்லை'' என்றேன். ''அப்ப எப்படி வீடு போட்டு இருக்க போறீங்கள்'' என்றார். ''நான் தான் போட வேண்டும்'' என்றேன். ''நீங்கள் இந்த நிலைமையில் ஒன்றும் செய்ய வேண்டாம். நான் அதுக்கு ஆட்களைத் தாறன்'' என்று சொல்லிவிட்டு சென்றார்.

அவர் யாரென்றே தெரியாது. ஆனால், உதவி செய்வதாக சொல்லி விட்டு சென்றிருக்கிறாரே! அந்த மனிதர் ஒரு மனிதாபிமானம் உள்ள மனிதராக இருக்கலாம் என்று நினைத்தேன்.

அவரைப் பற்றி தெரிந்து கொள்வதற்காக ஒருவரிடம் போய் அவரது பெயர் என்ன என்று கேட்டேன். காண்டீபன் என்றார் அவர். பொதுவாக எல்லோருக்கும் உதவி செய்வார் என்று கூறிச் சென்றார்.

கொஞ்சம் களைப்பாக இருந்தது. அருகில் இருந்த தறப்பாளில் இருந்தேன். அந்த வெட்டைவெளி யில் ஆக இரண்டு மரங்கள் மட்டுமே இருந்தன. அந்த மரங்களுக்கு அடியில் எல்லோரும் இருந்து விட்டார்கள். சரியான வெயில்தான். என்ன செய்வது?

அப்பொழுது அந்த வெள்ளை வாகனம் மீண்டும் வந்து நின்றது. அதில் இருந்து பச்சை உடுப்புடன் மூன்று அண்ணாக்கள் இறங்கி வந்து கொண்டிருந்தனர். என்னை விசாரித்துக் கொண்டுவருவது எனக்குப் புரிந்தது. நான் எழுந்து நிற்க அவர்கள் என்னிடம் வந்து கேட்டார்கள். ''அக்கா உங்களுக்கா கொட்டகை போட்டுத்தாறன் என்று காண்டீபன் அண்ணா சொன்னவர்'' என்று கேட்டனர். நானும் ஓம் என்றேன்.

''உங்களுக்கு எதில கொட்டகை போட்டு தாறது'' என்று கேட்டார்கள். ''இதிலேயே போட்டுத் தந்தால் போதும்'' என்றேன்.

''அதில் வெயிலா இருக்குமே அந்த மரத்துக்கு கீழ இருக்கிறது தான் நல்லது'' என்றனர். ''அது நல்லது தான் ஆனால் ஏற்கனவே அந்த இடத்தில் வேறு ஆட்கள் இருந்து விட்டார்கள் அதில் இடம் இல்லை'' என்றேன். ''பொறுங்கோ வாறன்'' என்று சொல்லிக் கொண்டு மூவரும் போனார்கள்.

கொஞ்ச நேரம் ஏதோ கதைத்துக் கொண்டு நின்றார்கள். பின்பு வந்து சொன்னார்கள் ''வாங்கோ அதிலேயே போட்டுத் தாறம்'' என்று சொல்லி கொட்டகையை போட்டார்கள். அந்த மரத்தடியில் இருந்தவர்கள் சம்மதித் தப்படியால் எல்லாம் நல்லபடியாக முடிந்தது. அந்த இடத்தில் இருந்தவர் கள் தமது கொட்டகைகளை கொஞ்சம் தள்ளிப் போட்டு இருந்தார்கள்.

வந்தவர்கள் நூறு லீற்றர் வாளி தந்து அதற்குள் தண்ணீரும் அள்ளித்தந்தார்கள். பாவம் அவர்கள் கஷ்டப்பட்டதை பார்க்க எனக்கு கவலையாக இருந்தது. என்னிடம் உளுத்தம்மா இருந்தது. சுடு தண்ணிப் போத்தலில் தண்ணியும் இருந்தது. மாவையும் குழைத்து பிளேன் டீயும் போட்டுக் கொடுத்தேன். அவர்கள் சந்தோஷ மாக சாப்பிட்டுக் குடித்துவிட்டுப் போகும் போது ''நாளைக்கு வருவம் கழிப்பிடம் அமைப்பதற்கான சாமான் கொண்டு வருவம்'' என்று சொல்லி விட்டு சென்றார்கள். அருகில் இருந்தவர்கள் எனக்கு சில உதவிகளை செய்தார்கள். என்னடா எந்த அறிமுக மும் இல்லாமல் இப்படி உதவி செய்யினமே என்று பார்த்தால் பிறகுதான் புரிந்தது வெள்ளை வானில் வந்தவர்கள் தான் எனக்கு உதவி செய்து கொடுக்க சொல்லியிருக் கிறார்கள் என்று.

ஏதோ கடவுள்தான் அவர்களை அனுப்பியிருக்க வேணும். எனது நிலைமைக்கு இவர்கள் செய்தது பெரிய உதவி. மறுநாள் காண்டீபன் அண்ணா மோட்டார் சைக்கிளில் வந்தார். அவர் இறங்கி வர பின்னால் வெள்ளை வாகனமும் வந்தது. அதில் சாமான்கள் கொண்டு வந்திருந்தார் கள். காண்டீபன் அண்ணா எல்லா இடங்களையும் சுற்றிப் பார்த்தார். அந்த இடத்தில் இருந்த சின்னப் பிள்ளைகளின் குடும்பங்களுக்கு பால்மா பக்கற் கொடுத்தார். எனக்கும் தந்தார். அதனுடன் சில சாமான்களும் தந்தார். மற்றும் கழிப்பறையை பொருத்தித் தந்துவிட்டு சொன்னார், ஏதும் உதவி தேவையென்டா - ஒரு இடத்தை சொல்லி - அங்கு தொடர்பு கொள்ளுமாறு. பின்பு அவர்கள் சென்றுவிட்டனர். பிறகு வரவே இல்லை. பல நாட்களாக வரவில்லை. அருகில் இருந்தவர்கள் ஓரளவு உதவி செய்து தருவார்கள். அவர்களுடன் இருந்த ஒரு தங்கை சில வேளைகளில் என்னுடன் தங்குவாள். அப்படி ஒருநாள் இரவு என்னுடன்தான் படுத்திருந்தாள். அப்போ ''அக்கா.... ஒரு விசயம் கேட்பேன் சொல்லுவீங்களா?'' என்றாள். ''ஓம் கேளுங்கோ சொல்லுறன்'' என்றேன். ''உங்கட அம்மா, அப்பா, சகோதரம் எல்லோரும் எங்கே இருக்கினம்'' என்று கேட்டாள்.

சில நிமிடங்கள் என்னை பழைய நினைவுகளுக்கு தள்ளியது அவளது கேள்வி. ''அக்கா என்ன யோசிக்கிறியள் சொல்லக்கூடாது என்றால் சொல்லாதேங்கோ பரவாயில்லை'' என்றாள்.

''அவர்கள் எல்லாம் எனக்கு இல்லை. நான் ஒரு அநாதை. என்னை 10 நாள் பிள்ளையாக எடுத்து மாமாதான் செஞ்சோலையில் வைத்து வளர்த்தார். நல்லா படிக்க வைச்சார். எங்களுக்கு எந்த குறையும் இருக்கேல்ல''.

''அப்ப உங்கட வீட்டுக்காரரை காணவேயில்லையா?''

''எனக்கு இதுவரைக்கும் அப்பா, அம்மா எல்லாமே மாமாதான்.''

''அப்ப உங்களுக்கு கால் எப்படிப் போனது''

''அதை தெரியாதவர்கள் இருக்கவே முடியாது. எங்கட செஞ்சோலை பள்ளிக்கூடத்தில ஒரு கொடூரம் நிகழந்தது. அதில தான் என்ர கால் போனது.''

''என்னெண்டு அக்கா... சொல்லுங்கோவன்...''

''அதுதான் அந்த மிருகம் இறுமிக் கொண்டுவந்த குண்டுகளை கண்ணை மூடிக் கொண்டு வீசிவிட்டுச் சென்றது. அதில் என் காலும் வீசி எறியப்பட்டது'' என்று சொல்லும் போதே ஒரு ஷெல் கூவிக் கொண்டு வந்து வெடித்தது. அந்த தங்கை சரியாகப் பயந்தவள். என்னை இறுக்கக் கட்டிப்பிடித்துக் கொண்டாள். பதுங்கு குழிக்குள் போவம் என்று எழும்பினோம். ஆனால் பிறகு எந்த அசுமாத்தமும் இருக்காத படியால் அப்படியே படுத்து விட்டோம்.

மறுநாள் விடிய நான் தண்ணி அள்ளிக் கொண்டு வந்தேன். அந்த தங்கையின் அம்மா கண்டுவிட்டார். ''எடி பிள்ளை கலையரசி வெறும் வயித்தோட பாரம் தூக்காத. உன்ர உடம்புக்கு கூடாது. உன்ர பிள்ளையை கவனமாய் பெத்தெடுக்கப் பார்'' அவளின் அம்மா என்னை ஏசினாள். நான் எப்படி நெடுகலும் வேறு ஆட்களிடம் கடமைப்படுவது? இப்படி எவ்வளவு காலம் சீவிக்க முடியும்? காலும் இல்லாமல் வயிற்றிலே பிள்ளையையும் சுமந்து கொண்டு நெடுகலும் இப்படி வாழ முடியாது. இதைத் தான் என் கணவரும் எனக்கு அடிக்கடி சொல்லுவார். 'நீ எப்பவும் என்னை எதிர்பார்க்காதே. என்ன என்டாலும் தனியாகச் செய். நான் நெடுகலும் வருவன், இருப்பன் என்றில்லை. நான் இல்லாமல் போட்டா நீ இப்படி இருந்தா சீவிக்க மாட்டாய். நீ தனிய இருந்து பழகிக் கொள்' என்று சொல்லுவார். அவரும் சொல்லிச் சொல்லி என்னைத் தனியா விட்டுட்டு போயிட்டார் என்று என்மனதுக்குள் நினைக்க என்னை அறியா மலே என் கண்கள் அழ அந்த தங்கை என்னை கட்டி ''அக்கா... ஏன் அழுறீங்கள் என்ன பிரச்சினை'' என்றாள். அவள் கேட்க கேட்க எனக்கு அழுகைதான் வந்தது. அவள் என்னை சமாளிப்பதற் காக என்கண்களை துடைத்து என் வயிற்றைத் தடவிக் கொண்டு காதை வைத்து ''குட்டிப் பாப்பா நித்திரை யா?.. ஒரு சத்தத்தையும் காணோம்'' என்றாள். ''இதுக்க தம்பியா, தங்கச்சியா?'' என்றாள். நானும் தம்பி என்றேன். அவரும் இப்படித்தான் கேட்பார். நான் தம்பி என்றால் அவரும் தம்பி என்பார். தங்கச்சி என்றால் தங்கச்சி என்பார். அவருக்கு என் விருப்பம் மட்டும் தான் தேவைப் பட்டது. எனக்காகவே வாழ்ந்தார். பிறக்க இருக்கும் குழந்தையை பற்றி எவ்வளவோ கற்பனை செய்தார். ஆனால், அதைப் பார்க்க அவர் இல்லாமல் போயிட்டாரே!

இப்படியிருக்கும் போது எனக்கு வீடு போட்டுத் தந்த மூவரில் ஒருவர் வந்து இடியை போட்டார். ''காண்டீபன் அண்ணா இறந்திட்டார். விசுவமடு மாவீரர் துயிலும் இல்லத்தில் வித்துடல் வரப் போகுது முடிந்தால் வாங்கோ'' என்று சொல்லி விட்டுச் சென்றார். என் மூச்சே நின்று விட்டது போல் இருந்தது. எவர் என்னுடன் நெருங்கி இருப்பார்களோ அவர்கள் உயிருடன் இருப்பதில்லை. நான் ராசியில்லாதவளாகி விட்டேன். கடவுளே நான் என்ன செய்ய? அழுவதா? ஓர் உயிருக்கு அழுகைதான் சன்மானமா?

என்னால் முடியவில்லை. அழுதேன். அழுதுகொண்டே அந்த தங்கையின் உதவியுடன் நடந்து மாவீரர் துயிலும் இல்லம் சென்றேன். அங்கே மனச்சாட்சி யுள்ள அந்த மனிதனின் வித்துடல் இருந்தது. எல்லோரும் வரிசையில் நின்று பார்த்துக் கொண்டிருந்தனர். அதில் ஒருத்தியாக என்னால் நிற்க முடியவில்லை.

**கச்சேரி சடையன்**

அடுத்தவாரம் தொடரும்....




ந. திரேஷா,
கொழும்பு -12

**கேள்வி:** ஓடு, ஓட்டு இரண்டையும் ஒப்பிடுங்களேன்.

**பதில்:** முன்னதை ஏந்தினால் பிச்சை கிடைக்கும், பின்னதைப் போட்டால் பிச்சை எடுக்கவேண்டி வந்தாலும் வரலாம்.

எம். எஸ் அப்துல் வஹ்ஹாப்,
நிந்தவூர்

**கேள்வி:** முன்மாதிரியாகக் கொள்ளத்தக்க வகையில் தமிழ் நாட்டைச் சேர்ந்த சிறந்த உரைநடை ஆசிரியர்கள் யார்?

**பதில்:** திரு. வி.க, டி.கே.சி, வ.ரா, கல்கி, புதுமைப்பித்தன், பி.எஸ்.ராமையா ஆகியோரைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

க. சுஜீவன்,
ஹட்டன்.

**கேள்வி:** எத்தகைய செயல்கள் சாதனைகளாக மாறுகின்றன?

**பதில்:** அமைதியான மனதுடன், தெளிந்த சிந்தனையுடன், மிகுந்த தன்னம்பிக்கையுடன், முகமலர்ச்சியுடன் செய்யும் காரியங்களே சிறப்படைகின்றன, சாதனைகளாகப் பரிணமிக்கின்றன. இவர் கொடுக்கிற சம்பளத்துக்கு இந்தளவு வேலை போதும் என்று பலர் தங்களைத் தாங்களே தாழ்த்திக்கொள்கின்றனர். இப்படிச் செய்வதால் அவர்களுடைய தரமும் தாழ்கிறது என்பதை அவர்கள் ஒருபோதும் உணர்வதில்லை.

த. தனரத்தனம்,
வவுனியா.


**கேள்வி:** தற்காலத்தில் ஆசிரியர் - மாணவர் உறவு எப்படியிருக்கிறது?

**பதில்:** மாணவர்கள் கற்பிக்கிறார்கள்; ஆசிரியர்கள படிக்கிறார்கள்.

எஸ். கனகரத்தினம்,
கேகாலை

**கேள்வி:** அடைந்த வெற்றியைத் தக்க வைத்துக் கொள்வதெப்படி பித்தரே?

**பதில்:** ஒரு காலத்தில் பயன்பட்ட உத்தி இன்னொரு காலத்துக்குப் பொருந்தாது. காலத்துக்கு ஏற்ப நமது சிந்தனைகளை மாற்றினால் தான் வெற்றியைத் தக்கவைத்துக் கொள்ள முடியும். தொழில் துறை, கலைத் துறை, அரசியல் துறை, இலக்கியத் துறை முதலான எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும், காலத்திற்கு ஏற்ப புதிய சிந்தனைகளைப் புகுத்தியவர்களே வெற்றியாளர்களாக மிளிர்கிறார்கள் என்பதற்கு உலக வரலாறே சான்று பகர்கின்றது.




ஜே. சரண்,
கொழும்பு 11

**கேள்வி:** கம்பர் இப்போது உயிர் பெற்று எழுந்தால் தனது இராமாயணத்தைப் பற்றி என்ன நினைத்துக்கொள்வார்?

**பதில்:** தன்னுடைய கவிதைகளில் தான் கனவிலும் கருதியிராத இவ்வளவு நயம் இருக்கின்றதா என்பதைக் கண்டு மூர்ச்சையாகி விழுந்திருப்பார்.

எஸ்.முர்ஷிதா,
கம்பளை

**கேள்வி:** எந்த விஷயத்திலும் மற்றவர்களைவிட மாறுபட்ட விதத்தில் சிந்திப்பவர்களைப் பற்றி?

**பதில்:** அவர்கள் சாதனை படைப்பார்கள் மிளிர்வார்கள். இப்படி நான் சொல்லவில்லை; பில்கேட்ஸ் சொல்கிறார்.

செல்லையா,
கந்தரோடை

**கேள்வி:** இந்தியாவில் போல நம் நாட்டிலும் பஞ்சாயத்து முறை[illegible]வந்தால் என்ன?

**பதில்:** இதன் மூலம் பெரும்பாலான பிரச்சினைகளைச் சுமுகமாகத் தீர்த்துக் கொள்ளலாம். ஆனால், பொலிஸாருக்கு அடித்து நொறுக்க ஆட்கள் வேண்டும்; அரசியல்வாதிகளுக்குப் புகழ் வேண்டும், சட்டத்தரணிகளுக்கு வழக்காட வேண்டும். விடுவார்களா இவர்கள்?

எம். செல்லத்துரை,
கடுகண்ணாவ

**கேள்வி:** சாதிவிட்டுச் சாதி போய் கலியாணம் செய்யலாமா?

**பதில்:** "சாதிகள் இல்லையடி பாப்பா, குலத் தாழ்ச்சி உயர்ச்சி சொலல் பாவம்"

பிரபா
கொழும்பு 10

**கேள்வி:** தவறைத்திருத்திய சான்றோர் என்று எழுதுவது சரியா?

**பதில்:** தவறு என்பது ஒரு குற்றியலுகரச் சொல் அதனோடு ஐ விகுதி சேர்ந்தால் ஒற்று இரட்டித்தல் வேண்டும். எனவே தவறைத் திருத்திய சான்றோர் என்று எழுதுவதே சரியானது.

சுரண்
நீர்கொழும்பு

**கேள்வி:** இலக்கியம் சோறு போடுமா பித்தரே?

**பதில்:** பட்டினி போட்ட அனுபவங்களே அதிகம்.

கு. தவராசா
மானிப்பாய்

**கேள்வி:** இம்முறை பொதுத் தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னனி மகத்தான வெற்றி பெறக் காரணம் என்ன?

**பதில்:** முதன்மையான எதிர்க் கட்சியின் பலவீனம் தான்.

கலா
களுத்துறை

**கேள்வி:** பெண்களால் அரசியல் தூய்மையாகுமா?

**பதில்:** அரிசிதான் தூய்மையாகும்.

---




# தங்கமணியும், செல்லமணியும்

வே. தில்லைநாதன்.

தங்கமணி ஆச்சி வீட்டுக்கு வெளியே ஒழுங்கையில் நின்றுகொண்டிருந்தாள். முகத்தில் வெயில் சுள்ளென்று அடித்தது. கண்ணை இடுக்கிக் கொண்டு சற்றுத் தொலைவில் வந்து கொண்டிருந்த உருவம் யாரென்று அறிய அவள் எவ்வளவோ முயன்றும், அவளது பலவீனமான கண்கள் ஒத்துழைக்க மறுத்தன.

முற்றத்தில் நின்ற பேரனை அழைத்த தங்கமணி, "யாரடா ஒரு திடுமிலி வாறாள்?" எனக் கேட்டாள். "என்ன, அம்மம்மா அவவைத் தெரியேல்லையா? அது செல்லமணி ஆச்சி" என்றான்.

"செல்லமணியோ? ஓடடா உள்ளுக்கு. ஒரு சட்டையை எடுத்துப் போடு. அவளின்ர கண் கொள்ளிக்கண். உன்ர உடம்பிலை அவளின்ரை கண் பட்டால் போதும், உனக்கு ஆகாது" என்று பேரனை வீட்டுக்குள் அனுப்புவதில் குறியாக இருந்தாள் தங்கமணி.

"போங்க, அம்மம்மா. இவ்வளவு நேரமும் அம்மா படி படி என்று என்னை இருத்தி வைச்சிட்டா. கொஞ்ச நேரம் வெளியில விளையாடுறேனே" அவன் கெஞ்சினான். அவள் மசியாதது கண்டு, "விடுதலைக் காலத்திலையும் என்னை விளையாட விடமாட்டியள்" என்று புறுபுறுத்தான்.

"அதெல்லாம் பிறகு விளையாடலாம். நீ வந்து சட்டையைப் போடு" என அவனைத் தரதரவென இழுத்துக் கொண்டு சென்ற தங்கமணி, "அவளின்ரை கண்ணும் கூடாது, நாக்கும் கூடாது" என்று கடுகடுத்தாள்.

பேரனை உள்ளே தள்ளிய தங்கமணி வாசலுக்கு அண்மையில் இடுப்பைப் பிடித்தபடி தரையில் அமர்ந்தாள். சற்று நேரத்தில் உள்ளே வந்த செல்லமணி, "யார் வீட்டிலை?" எனக் குரல் எழுப்பினாள். "யார் செல்லமே? வா, வா. கண்டு கனநாள். இரு. என்ன நல்லா மெலிஞ்சு போனாய்?" என்று செல்லமணியை வரவேற்றாள்.

சட்டையைப் போட்டுக் கொண்டு வெளியே வந்த பேரன் "யாரோ திடுமிலி" என்று சொன்ன அம்மம்மாவின் வாயிலிருந்து இப்போ "மெலிஞ்சு போனா" என வந்த வார்த்தைகளைக் கேட்டு வாயைப் பொத்தியபடி சிரித்தான்.

"எப்படி இருக்கிறாய் தங்கம்?" செல்லமணி குசலம் விசாரித்தாள்.

"அதையேன் கேக்கிறா, போ. நாரிப்பிடிப்பு. இருக்க எழும்ப ஏலாது. ஒரு இடியப்பத்தை நன்னி நன்னித் தின்ன ஒரு மாதமெடுக்கும். காடு வாவா எண்ணுது, வீடு போபோ எண்ணுது. ஏதோ நடக்கிறதைப் பாப்பம்" என்று செல்லத்தின் கண்பட்டாலு மென்று தனது திடகாத்திரமான உடல் நலத்தைச் சாதுரியமாக மறைத்தாள் தங்கம்.

"இங்கை வா, ராசா. பள்ளிக்குடம் லீவுதானே? நல்ல மாக்ஸ் எடுத்திருக்கிறியா?" சிறுவனின் பக்கம் செல்லத்தின் கவனம் திரும்பியது. அவன் பெருமகிழ்ச்சியுடன் தான் மூன்றாம் பிள்ளை என்று தம்பட்டம் அடிக்க முற்படுகையில் அவசர அவசரமாகக் குறுக்கிட்ட தங்கம், "தறுதலை. அவன் எங்கை படிக்கிற. ஒரே விளையாட்டுத்தான். போடா. போய் அம்மாவைத் தேத்தண்ணி போடச் சொல்லு" என அவனை விரட்டினாள்.

"எப்படி மகன்ரை கடை போகுது? நல்ல வியாபாரமெண்டு கேள்விப்பட்டேன்?"

"ஆர் சொன்ன கதை இது? வாற வருமானம் உப்புப் புளிக்கே காணாது. சரி, செல்லம் நீ ஏதும் அலுவலா வந்தனியோ?" பேச்சைத் திசை திருப்பினாள்.

"ஓமோம். எனக்கொரு நெய்ப்போத்தில் வேணும். அதுதான் வந்தனான்."

"பின்னேரம் எண்டா எடுக்கலாம். நீ போ செல்லம். நான் ஐஞ்சுமணி போல அந்தப் பக்கம் சீட்டுக் காசு வாங்க தங்கம் வருவன். அப்ப கொண்டு வந்து தாறேன்"

செல்லம் புறப்பட்டதுமே தங்கத்தின் முன்னால் வந்து நின்ற பேரன், "ஏன் அம்மம்மா நான் மூன்டாம் பிள்ளை என்று சொல்ல விடேல்லை, நீங்கள்?" என்று குறைப்பட்டான்.

"உனக்குத் தெரியாது,ராசா. அவளுக்கு கரி நாக்கு?" "கரி நாக்கெண்டால்?"

"கரி நாக்கெண்டால் கரி நாக்குத் தான். போய் விளையாடு"

அன்று சாயந்தரம் நான்கு மணி தாண்டியதுமே செல்லமணி வீட்டில் பரபரக்க ஆரம்பித்துவிட்டாள். மகளை அழைத்த அவள் "எடி பிள்ளை, முன் கேட்டுக்கிக்கிட்ட இருக்கிற பூச்சட்டியளையெல்லாம் வாறாக்களின்ரை கண்ணில படாமல் தள்ளிவை" என்று கட்டளையிட்டாள்.

"ஏனம்மா?" ஒன்றும் புரியாமல் கேட்டாள் மகள்.

"அந்த ரோசாப் பூவெல்லாம் என்ன மாதிரி மொட்டுக் கட்டியிருக்குது. இப்ப தங்கமணி நெய்ப் போத்தில் கொண்டு வருவாள். அவளின்ரை கண்டட்டாலே போதும் மொட்டெல்லாம் கருகிப் போகும். போன மாசம் அவளின்ர கண்பட்டு என்ரை அருமந்த பூவெல்லாம் என்ன மாதிரிக் கருகிப் போச்சு. நான் எவ்வளவு கஷ்டப்பட்டு வளர்த்த பூக்கண்டு. அநியாயமாகப் போச்சுதே"

"அதுக்கும் தங்கமணியாச்சிக்கும் என்ன சம்பந்தம், அம்மா? உங்களுக்கு என்ன பிடிச்சிருக்குது?" மகள் சீறினாள்.

"போடி உனக்கொண்டும் தெரியாது. அவளின்ரை கண் கொள்ளிக் கண்ணெடி. உன்னால ஏலாதெண்டா விடு. நான் தூக்கி வைக்கிறன்" என்று கூறியவாறே தனது பருத்த உடலைச் சிரமத்துக்குள் ளாக்கியபடி பூச்சட்டிகளை அப்புறப்படுத்த ஆரம்பித்தாள் செல்லமணி ஆச்சி.

***

## வசந்தங்களை வரவழைக்கும் "தூவானம்"

இலங்கையில் இன்றைய தமிழ் தொலைக் காட்சி அலைவரிசைகளில் புதுமைகளோடு புறப்பட்டிருக்கும் வசந்தம் ரீ.வியானது மக்கள் மனம் கவரும் வகையில் பல்சுவை நிகழ்ச்சிகளை வழங்கிவருவது குறிப்பிடத் தக்கதாகும்.

மேலும், கடந்த 2009 ஜூன் மாதத்தில் ஆரம்பிக்கப் பட்ட வசந்தம் தொலைக்காட்சி தற்போது அசுர வளர்ச்சி கண்டு, ரசிகர்கள் மனதில் நிலையான ஓர் இடத்தை பிடித்துள்ளது.

அந்த வகையில், வசந்தம் ரீ.வியின் 'தூவானம்' நிகழ்ச்சி முழுக்க முழுக்க எமது படைப்பாளிகளின் உணர்வுகளை புரிந்து கொண்டு அவர்களுக்கான ஓர் ஆரோக்கியமான களமாக அமைந்திருக்கிறது.

இலங்கை திருநாட்டில் பல்துறை சார்ந்த படைப்பாளுமைகளோடு இலைமறை காயாக ஒளிந்திருக்கும் எம்மவர்களை இனங்கண்டு - அவர்களது கலைப் படைப்புகள் படைப்பாளுமை சார்ந்த விடயங்கள் இன்னும் படைப்பாக்கத் திறனுள்ளவர்களின் அற்புதமான படைப்புகளென வசந்தம் தொலைக்காட்சியின் தூவானம் நிகழ்ச்சி 'அடையாளம்' பகுதியூடாக அடையாளப் படுத்தி வருவது சிறப்பு மிக்க ஒரு விடயமாகும்.

வசந்தம் தொலைக்காட்சியின் நிகழ்ச்சிகளை வடிவமைக்கும் அதன் பணிப்பாளர் குலேந்திரன் மற்றும் படைப்பாளுமை மிக்க தயாரிப்பாளர்கள், திறமையான அறிவிப்பாளர்கள், தொழில்நுட்பக் கலைஞர்கள் என அனைவருக்கும் வசந்தம் ரசிகர்கள் சார்பாக வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எஸ். ஐனூஸ்

## சக்தியின் "வரம் தரும் குபேரன்"



நாளாந்தம் தமது புதிய நிகழ்ச்சிகள் மூலம் நேயர்களை ஈர்க்கும் சக்தி எவ்.எம், தன் நேயர்களுக்குப் பல்வேறு விதத்தில் பரிசில்களையும் வழங்கி வருகின்றமை நேயர்கள் அறிந்ததே. சக்தியின் பிறந்த நாள் பரிசு, சிறந்த நடிகர், நடிகை, இசையமைப்பாளர் என நேயர்கள் தேர்வு செய்யும் முறையில் நேயர்களுக்கே பரிசுகளை வழங்குவது நாடளாவிய ரீதியில் நேரடியாகச் சென்று தனது அபிமான நேயர்களுக்கு வீட்டுப் பாவனைப் பொருட்களை வழங்கியமை. என கூறிக் கொண்டே செல்லலாம். அந்த வகையில் அண்மைக்காலமாக ஒவ்வொரு மணிநேரமும் நேயர்களின் எதிர்பார்ப்பினைத் தூண்டி, வார்த்தைகளில் நகைச்சுவை தெறிக்க வந்து போகும் ஒரு விசித்திர கதாபாத்திரம் 'சக்தியின் குபேரன்'.

சாதாரணமாக குபேரன் பொன் தருவார் என்று நாம் அனைவரும் கேள்விப் பட்டிருக்கிறோம். அப்படியொரு கதாபாத்திரம் உண்மையிலேயே இருந்ததா? என்று பலர் குழம்பினாலும், சக்தி பண்பலை அந்தக் கதாபாத்திரத்தை நிஜமாக்கியிருக்கிறது.

சக்தியின் வரம் தரும் குபேரன், மக்களின் வாழ்க்கைக்கு சக்தி தரும் விதத்தில், மக்களின் தேவையறிந்து அவர்கள் வாழ்க்கையில் ஒரு மலர்ச்சியை ஏற்படுத்தும் நோக்கில் பல பெறுமதியான பொருட்களை வழங்குபவராகத் திகழ்கிறார்.

நம் நாட்டில் வேலையின்றி அல்லலுறும் மக்களுக்காக அவர்களின் வாழ்க்கையில் தாமாக தேடி தமக்கென்றே ஒரு தொழிலை உருவாக்கிக் கொள்ளும் விதமாக முச்சக்கர வண்டிகள், தையல் இயந்திரங்கள், மோட்டார் சைக்கிள்கள் போன்ற பொருட்களை வழங்கும் குபேரன் இளைஞர்களும் யுவதிகளும் பயன்படுத்தக் கூடிய விதத்தில் மடிக்கணினி போன்றவற்றையும் வழங்குபவராக இருக்கின்றார்.

மன மகிழ்ச்சிக்காக மட்டுமே வானொலி என்றில்லாமல், மக்களின் வாழ்க்கைக்கு சக்தி சேர்க்கும் சக்தி பண்பலையின் வரம் தரும் குபேரன் வரும் நேரத்தைக் கேட்டுக், அதைக் குறுஞ்செய்தி மூலமாகவோ அல்லது தபாலட்டை மூலமாகவோ நேயர்கள் போட்டி போட்டுக்கொண்டு தெரிவிப்பது மட்டுமன்றி, அந்த நேரத்தை தொலைத்தொடர்புச் சாதனங்கள் வாயிலாக தெரிவிக்கும் வசதியில்லாதவர்கள் கூட தங்கள் பதிவுகளை ஒரு சாதாரண அட்டையில் சரியான நேரத்தோடு பதிவு செய்து வைத்திருக்கும் பட்சத்தில், சக்தியின் வரம் குழுவினர் நாடளாவிய ரீதியில் தம் பயணத்தை மேற்கொண்டு அந்தத் தபாலட்டைகளை பெற்றுக் கொள்ளும் சேவையினையும் செய்து வருகின்றனர்.

வாழ்க்கைக்கு சக்தி சேர்க்கும் சக்தியின் சக்தி பண்பலையின் இந்த 'வரம் தரும் குபேரன்' அடிப்படைத் தேவைகளுக்கு அப்பாற்பட்ட தேவைகளை பூர்த்தி செய்து ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் ஒளியேற்றக் காத்திருக்கிறார்.

தொகுப்பு: சாந்தி




## சக்தி எப்.எம் இன் "அந்த நாள் ஞாபகம்"

இலங்கை வானொலி வரலாற்றில் ஒரு வித்தியாசமான புரட்சியை ஏற்படுத்தியது சக்தி எப்.எம் என்றால் அது மிகையல்ல. அந்தவகையில், கடந்த தசாப்த காலங்களில் இலங்கையிலும் உலகளாவிய ரீதியிலும் சக்தி எப்.எம் ஒவ்வொரு தமிழ்த் திண்ணையிலும் தனித்துவமாய் லித்துக் கொண்டிருப்பதை யாரும் மறுத்துரைக்க முடியாது.

கடந்த தசாப்தங்களில் எஸ்.எழில்வேந்தன் ஆர்.பி.அபர்ணா சுதன், சேஷாத்ரி, தற்போதைய சக்தி எப்.எம் இன் நிகழச்சிப் பணிப்பாளர் எஸ்.மாயா என ஒவ்வொருத்தர் காலத்திலும் சக்தி வானொலியின் நிகழ்ச்சித் தரம், படைப்பாளுமை, வானொலி நுகர்வோரின் அதிகரிப்பு மற்றும் பல இதர விடயங்கள் வேறுபாடுகள் காட்டி நிற்கின்றன. எஸ்.எழில்வேந்தன் காலத்து சக்தி எப்.எம் ஒரு ரகமாய் இருந்தது. ஆர்.பி.அபர்ணா சுதன் நிகழ்ச்சிப் பணிப்பாளராய் இருந்த சக்தி எப்.எம் வேறொரு புரட்சியாய் பரிணமித்தது. சேஷாத்திரி பணியாற்றிய சக்தி எப்.எம். மற்றொரு சுவையை கொண்டு வந்தது. அதே போல, தற்போதைய எஸ்.மாயாவை நிகழ்ச்சி பணிப்பாளராய் கொண்டிருக்கும் சக்தி எப்.எம் இவை அனைத்திலிருந்தும் வேறுபட்டு வேறொரு தனித்துவத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது.

ஆனால், சக்தி எப்.எம் ஆரம்பித்ததிலிருந்து இன்று வரைக்கும் ஒரு சில தனித்துவங்கள் சக்தியில் சங்கமித்துக் கொண்டிருக்கின்றன. அவ்வாறான தனித்துவங்களில் முதன்மையானது சக்தி எப்.எம் இன் ஸ்தாபக அறிவிப்பாளர், சக்தியின் இதய ராகம் நிகழ்ச்சியால் நேயர்கள் நெஞ்சில் சிம்மாசனமிட்டிருக்கும் எஸ்.ரீ.ரவூபின் வானொலி ஆளுமையென்றால் அது மிகையல்ல.

அந்த வகையில், அண்மைக் காலமாக அவர் சக்தி எப்.எம் இல் தொகுத்து வழங்கும் 'அந்த நாள் ஞாபகம்' நிகழச்சி - சக்தி எப்.எம் தொலைத்த 'இதய ராகம் ரவூபை' மீளவும் அழைத்து வந்திருப்பதான ஒரு பிரமையை ஏற்படுத்தி வருகிறது.

உண்மையிலேயே, எஸ்.ரீ.ரவூவ் தொகுத்து வழங்கும் இந்த நிகழ்ச்சி சக்தி எப்.எம் இல் வியாழன் தோறும் இரவு 9.30 மணி முதல் - நள்ளிரவு 12 மணிவரை ஒலிபரப்பாகி வருவது, கேட்போர் இதயத்திற்கு ஓர் ஆத்மார்த்தமான மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது என்றால் மிகையல்ல.

இன்றைய ஆர்ப்பாட்டமான இசை வடிவங்களுக்கு மத்தியில் Old is Gold எனும் கருப்பொருளில் 'அந்த நாள் ஞாபகம்' நிகழ்ச்சி மனதின் பாரத்தையும், அழுத்தங்களையும் இறக்கி வைக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும்.

காலத்தால் அழியாத பழைய பாடல்களுடன், பழம் பெரும் சினிமாவின் தகவல் கோவைகளையும் எமது மூத்த திரைத்துறையின் ஆவணப்படுத்தப்பட வேண்டிய விடயங்களையும், தென்னிந்திய தமிழ் சினிமாவின் மூத்த படைப்பாளர்களின் நேர்காணலையும் நவரசங்கள் சொட்ட நல்ல தமிழில் எஸ்.ரீ.ரவூப் தொகுத்துத் தருவது மிகவும் பாராட்டத்தக்க விடயமாகும்.

இன்றைய இலங்கையின் வானொலி நிகழ்ச்சிகளில் அதிகமாய் பழமை சார்ந்த விடயங்கள் புறக்கணிக்கப் படுகின்றன. ஆனால், சக்தி எப்.எம் இன் 'அந்த நாள் ஞாபகம்' நிகழ்ச்சி பழமை போற்றும் ஒரு ஆவணக்காப்பகமாய் உருவெடுத்து, ஒலிபரப்பாகி வருவது போற்றுதலுக்குரிய விடயமாகும்.

எனவே, இந்த ஆதர்சமான நிகழ்ச்சியை தனது இனிமையான குரல் வளத்தினூடாக எல்லோர் இதயமும் சேர தொகுத்து வழங்கும் சக்தி எப்.எம் இன் சிரேஷ்ட அறிவிப்பாளரும், வெளிச்சம் எப்.எம் இன் நிகழ்ச்சி பொறுப்பதிகாரியுமான எஸ்.ரீ.ரவூப் அவர்களுக்கும் - யதார்த்தங்களை உணர்ந்து மாறுபட்ட ரசனைகளில் நிகழ்ச்சிகளை வடிவமைக்கும் சக்தி எப்.எம் இன் நிகழச்சிப் பணிப்பாளர் 'நிலாச்சோறு புகழ்' எஸ்.மாயா அவர்களுக்கும் நேயர்கள் சார்பில் எமது நெஞ்சார்ந்த வாழ்த்துக்கள்.

ரஜா

## நம் நாட்டு இசை விருது "2010"

நம் நாட்டின் இளம் கலைஞர்களை ஊக்குவிக்கும் சக்தி பண்பலை, இன்னும் சிறப்பாக தனது புதுமைகளை சர்வதேச ரீதியில் எட்டச்செய்யும் நோக்கில், புலம் பெயர்ந்து வாழும் நம் நாட்டின் சொந்தங்களை மட்டுமின்றி, இசைக்கு தம்மை அர்ப்பணித்த இசைக் கலைஞர்களையும் சேர்த்தே இலங்கையின் இசைச்சொந்தங்களோடு, இளம் இசைக்கலைஞர்களோடு ஒன்றிணைக்கும் நோக்கிலும், இசை உலகில் ஒரு புது விதி படைக்கவும் ஒரு பிரம்மாண்டமான போட்டியை ஏற்பாடு செய்துள்ளது. ஏப்ரல் மாதம் முதலாம் திகதியில் இருந்து முன்னோட்டங்கள் வாயிலாக மிகப்பெரும் எதிர்ப்பார்ப் பினை ஏற்படுத்தியுள்ள 'சக்தி - நம் நாட்டு இசை விருது 2010' என்ற இந்த அரிய போட்டி வாய்ப்பு இலங்கையில் எந்த ஒரு வானொலியும் இதுவரை எடுத்திராத ஒரு புதிய பரிமாணம்!

நமது ஹிட்ஸ் என்ற இசைப் பயணம் எமது நாட்டுக் கலைஞர்களுக்கான ஊக்கத்தினையும் அவர்களின் திறமையை வெளிப்படுத்துவதற்கான களத்தையும் அதன் மூலமாக அவர்களுடைய திறமைகளை தொடர்வதற்கான உந்து சக்தியையும் சக்தி பண்பலை வழங்கியிருந்தமையை யாராலும் மறுக்க முடியாது. இதன் மூலமாக அவர்கள் பெற்றுக்கொண்ட வாய்ப்புகள் அவர்களை சர்வதேச அளவில்கூட பிரபலமடையச் செய்திருக்கின்றன.

உதாரணத்திற்கு கிருஷான் மகேசனின் 'J Towin' பாடல், கஜன்-தினேஷின் 'Romeo - Juliot' பாடல், லைசியம் குழுவின் 'கனவின் கருவில்' பாடல், பிரதாப் - சமீரின் 'என் காதல் கீதமே' ........ இப்படிச் சொல்லிக்கொண்டே போகலாம்.

நம்மவர்களுக்கான வாய்ப்பையும் வரவேற்பையும் கொடுத்த சக்தி பண்பலை நம்மவர்களுக்கு அங்கீகாரத்தையும் வழங்கும் இன்னுமொரு பரிமாணம் இந்த 'சக்தி நம் நாட்டு இசை விருது 2010' நம்மவர்கள் முன் வந்து இந்த அரிய வாய்ப்பை தமக்கு சாதகமாக பயன்படுத்திக்கொள்வார்கள் என நம்புவோமாக!

சக்தி சுப்பர் ஸ்டார் இறுதி நாள் நிகழ்ச்சியில் சில காட்சிகள்...



# அழைப்பைப் புறக்கணித்த ரஜனி – கமல்



ஐ.ஐ.எப்.ஏ. எனப்படும் சர்வதேச இந்திய திரைப்பட விருது வழங்கும் விழா இந்திய சர்வதேச திரைப்பட நிறுவகத்தினால் இலங்கையில் நடத்தப் படவுள்ளது. இந்திரைப்பட விழா கொழும்பில் எதிர்வரும் ஜூன் மாதம் 3 ஆம் திகதி முதல் 5 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இதில் சிறப்பு விருந்தினர்களாக பாலிவுட் நடிகர் அமிதாப் பச்சன் அவரது மகன் அபிஷேக் பச்சன், மருமகள் ஐஸ்வர்யா ராய் உள்ளிட்டோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதற்கான ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றுக்கான கடந்த 20 ஆம் திகதி உலகப் புகழ்பெற்ற இந்திய ஹொலிவூட் நட்சத்திரம் அமிதாப்பச்சன் இலங்கைக்கு வருகைதந்திருந்தார். இதன்போது இவருக்கு அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது. அன்று மாலை கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்ட லில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்திய அமிதாப்பச்சன் அடுத்த நாள் இந்தியா சென்றார்.

அங்கு சென்ற அவர் இவ்விழாவில் கலந்து கொள்ளுமாறு இந்தியாவின் சகல முன்னணி நடிகர், நடிகைகளுக்கு அழைப்பிதழ் விடுத்தார். இவ்வாறே தமிழக முன்னணி சினிமா நட்சத்திரங்களான சுப்பர் ஸ்டார் ரஜனிகாந்துக்கும், உலக நாயகன் கமலஹசனுக்கும் அழைப்பிதழ்களை அனுப்பியுள்ளார். இந்த அழைப்பிதழைப் பார்த்து மிரண்டு போயிருக்கிறார்கள் சூப்பர் ஸ்டாரும் உலகநாயகனும்.

கொழும்பில் அடுத்த சில தினங்களில் தொடங்கும் இந்த விருது விழாவில் ரஜினி, கமல், விஜய், அஜீத், சூர்யா என முன்னணியில் உள்ள நடிகர்கள் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்க வேண்டும் என்றும் அவர்களை இலங்கை ஜனாதிபதி மற்றும் திரைப்பட விழா குழுவினர் கௌரவிப்பார்கள் என்றும் அந்த அழைப்பிதழில் கூறப்பட்டுள்ளது. இந்த அழைப்பை ரஜனியும் கமலும் புறக்கணித்துள்ளனர்.

விஜய் அஜித் உள்ளிட்ட சில நடிகர்களும் அழைப்பிதழை வாங்கவே மறுப்புத் தெரிவித்துள்ளனர். அதாவது மொத்த முன்னணித் தமிழ்த் திரையுலக நடிகர்களும் இந்த அழைப்பை புறக்கணித்து விட்டனர்.

தமிழின உணர்வும், தமிழ் சினிமாவும் எந்த அளவு பிரிக்க முடியாதது என்பதை உணர்ந்த விழாக் குழு, தற்போது இரண்டாம் கட்ட நடிகர்களுக்கு வலை வீசி வருகிறதாம்.

இந்த விழாவின் தலைவரான அமிதாப்பச்சனின் மகன் அபிஷேக்பச்சனும், மருமகள் ஐஸ்வர்யாராயும் ஜோடியாக இந்த விழாவில் பங்கேற்கிறார்கள். இவர்கள் இருவரும் இணைந்து நடித்த ராவணன் படத்தின் சிறப்புக் காட்சியை இந்த விழாவில் திரையிடப் போகிறார்களாம்.

இதற்காக மணிரத்னத்தை சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ள அழைத்துள்ளனர். ஆனால் இலங்கைக்குப் போனால், இங்கு தன் மீது பெரும் மதிப்பு கொண்டுள்ள தமிழ் ரசிகர்களின் கோபத்தைச் சம்பாதிக்க வேண்டி வருமே என்ன செய்வது என இரண்டும் கெட்டான் மனதுடன் தவிக்கிறாராம் மணிரத்னம். ராவணன் என்றாலே பெரும் பிரச்சினையாக உள்ளதே என்று தனக்கு நெருங்கியவர்களிடம் சொல்லிக் கவலைப்படுகிறார் மணி ரத்னம்.

இவ் விழாவில் ஹிந்தி திரை உலகின் முன்னணி நட்சத்திரம் ஷாருக்கான் உட்பட பலர் பங்கேற்க உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. ✱

---





# நடிகர் பிரசாந்த்தால் சொத்தையெல்லாம் இழந்து வீதியிலிருக்கும் ராமச்சந்திரன்!

**பாலா சங்குபிள்ளை**

வெறும் பொழுது போக்குக்காக உருவாக்கப்பட்டவை தான் திரைப் படங்கள். அவற்றின் நடிக்கும் நடிகர்களும் தேவதூதர்கள் இல்லை. ஆனால் இன்று நடிகர்களை கடவுளர்களாக நினைத்து அவர்களின் கட்- அவுட்களுக்கு பாலாபிஷேகம் செய்கிறார்கள். சிலர் அவர்களுக்காக கோயில் கூட கட்டுகிறார்கள். ஆனால் நடிகர்கள் என்ன செய்கிறார்கள்? ரசிகர்களை மதிப்பதில்லை. தங்களை வைத்து படம் தயாரிக்கும் தயாரிப்பாளர்களை பல்வேறு வகைகளில் வேதனைக்குள்ளாக்கி சில வேளைகளில் அவர்களை பிச்சைக்காரர்களாகவும் ஆக்கி விடுகிறார்கள்.

அன்று- மக்கள் திலகம் எம். ஜி. ஆர். சிவாஜி கணேஷன் உட்பட பல நடிகர்கள் தயாரிப்பாளர்களுக்கு மரியாதை கொடுத்தார்கள். ரசிகர்களை மதித்தார்கள். ஆனால் இன்று அப்படியான நிலைமை இல்லை. சிலரைத் தவிர பல நடிகர்களால் ஏராளமான தயாரிப்பாளர்கள் விலாசமில்லாமல் இருக்கிறார்கள்.

தோப்பு, வயல், அரண்மனை மாதிரியான வீடு என்று ஊரில் மரியாதையுடன் இருந்திருக்கிறார். பினான்ஸ் மற்றும் வைன் ஷொப்மூலமாக ஏராளமாக பணம் சம்பாதித்தவருக்கு படம் தயாரிக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது அவரின் துர்திஷ்டம் தான்.

'காதல் கோட்டை' இயக்குநர் அகத்தியன் ஒரு நல்ல கதை சொல்லவே உடனடியாக அதற்கு இரண்டுலட்சம் கொடுத்து அவரை புக் பண்ணினார். கதாநாயகனாக பிரசாந்தை போட்டார். அவருக்கு முற்பணமாக 25 லட்சம் கொடுத்தார். இந்தநிலையில் பிரசாந்துக்கு அகத்தியன் சொல்லிய கதை பிடிக்கவில்லை. எனவே ஏற்கனவே பிரசாந்துக்கு அட்வான்ஸ் கொடுத்து விட்டமையினால் அவர் பேச்சை கேட்க வேண்டிய நிலைமை. அகத்தியனுக்கு கொடுத்த 2 லட்சமும் அவுட். பிரசாந்தின் தந்தை தியாகராஜன் ஆர்த்தி அகர்வால் என்ற தெலுங்கில் அறிமுகமான நடிகையைப் போடச் சொல்லவே ஒரு புது நடிகைக்கு கொடுக்கக்கூடாத தொகையை கொடுத்து புக் பண்ணினார். பிரசாந்துக்கு 50 லட்சம் சம்பளம் பேசி ஏற்கனவே 25 லட்சம் கொடுத்தாயிற்று. திடீரென ஒரு நாள் படப்பிடிப்பு தளத்தில் வைத்து தான் புதிதாக கட்டிக் கொண்டிருக்கும் வீட்டுக்காக அவசரமாக இரண்டு லட்சம் பணம் வேண்டுமென பிரசாந்த் கேட்க அப்போது அவரிடம் பணம் இல்லாமையினால் அடுத்தநாள் தருவதாக தயாரிப்பாளர் கூறியிருக்கிறார். அங்கேதான் விழுந்தது முதல் அடி. படப்பிடிப்பை ரத்துச்செய்து விட்டு பிரசாந்த் வீட்டுக்குப் போய்விட்டார். அமெரிக்காவிலிருந்து நடிக்கவந்திருந்த ஆர்த்தி அகர்வால் தொடர்ந்து காத்திருக்காமல் திரும்பிப் போகவே அவருக்கு கொடுக்கப்பட்டிருந்த அட்வான்ஸ் எட்டு லட்சமும் அம்பேல். எனவே அதுவரை எடுத்த அகர்வால் சம்பந்தமான காட்சிகளை வெட்டி வீசுவதை தவிர வேறுவழியில்லை.

ஒருவழியாக படத்தை எப்படியாவது முடித்து விடும் நோக்கத்தில் பிரசாந்தை சந்திக்க அவர் வீட்டுக்குப் போன போது தந்தையும், மகனும் அவரை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. அவருக்கு வரவேண்டியிருந்த பணத்தையும் இருவரும் சேர்ந்துதிட்டமிட்டு வரவிடாமல் செய்துவிட்டார்கள். கிட்டத்தட்ட 80 லட்சம் அப்படியே முடங்கிவிட்டது. தயாரிப்பாளர் ராமச்சந்திரன் இரத்தக் கண்ணீர் வடித்தார். கஷ்டப் பட்டு சம்பாதித்த சொத்து மற்றும் பூர்வீக வீடு, காணிபூமி எல்லாவற்றை யும் விற்று பணத்தைச் சேர்த்தார். ஊரில் கம்பீரமாக தோட்டம் வீடு என வாழ்ந்த இவரின் தாய், தந்தை இன்று சுடுகாட்டு பக்கத்தில் ஒரு ஓலைக்குடிசை யில் வாழ்கிறார்கள்.

இந்தப் படம் நன்றாக வரவேண்டும் என்ற நல்லெண்ணத்தில் நகைச்சுவை நடிகர் வடிவேலு நான்கு நாட்கள் பணமே வாங்காமல் நடித்துக் கொடுத்திருக்கிறார். இயக்குநர் சுந்தர் சி ஒரு லட்சம் கொடுத்து உதவினாராம். ஆனால் - படம் நன்றாக ஓடியும் வட்டிக்கு வாங்கி பணத்தை கொடுக்கவே சரியாகிவிட்டதாம். இப்போது சாப்பாட்டுக்கே கஷ்டப்படும் ராமசந்திரனின் மகனை தயாரிப்பாளர் சிவசக்தி பாண்டியன் பண உதவி செய்து படிக்கவைக்கிறாராம். திரைப் படங்களில் உத்தமனாக நேர்மையாளனாக மற்றவர்களுக்கு உதவுபவனாக வெல்லாம் வேஷம் கட்டும் இப்படியான சினிமா நடிகர்கள் பகல் வேஷக்காரர்கள் தானே! 'கைப்புள்ள' கொமெடியைப் பார்க்கும் போதெல்லாம் ரசிகர்கள் வயிறுவலிக்க சிரிப்பார்கள். ஆனால் இப்படத்தயாரிப்பாளர் ராமச்சந்திரன் வயிறெறிய அழுகிறார். நடிகர்களை அவதாரபுருஷர் களாக எண்ணி தங்களின் வாழ்க்கையை தொலைத்துக் கொண்டிருக்கும் சினிமா ரசிகர்களுக்கு இதெல்லாம் ஒரு பாடமாக இருக்க வேண்டும். ✱

கைப்புள்ள நகைச்சுவை காட்சியை பார்த்தவர்கள் நிச்சயமாக சிரிக்காமல் இருக்கமாட்டார்கள். "வின்னர்" படத்தில் வடிவேலுவின் இந்த நகைச்சுவை காட்சிக்காகவே இந்தப் படம் நூறு நாட்கள் ஓடியது. இந்தப் படத்தின் இயக்குநர் சுந்தருக்கு பெரும் புகழைத் தந்தாலும் இப்படத்தின் தயாரிப்பாளர் இப்போது தெருவில் இருக்கிறார். இதற்குக் காரணமானவர் வேறு யாரும் அல்லர். இப்படத்தின் கதாநாயகன் பிரசாந்தேதான். வீடு, வாசலை இழந்து குடும்பத்தைக் காப்பாற்ற இன்று- ஹோட்டலில் வேலை செய்யுமளவுக்கு நொந்து நூலாகி விட்டார். இதற்குக் காரணமானவர் யார் தெரியுமா? இப்படத்தின் நாயகன் பிரசாந்தான் என்று மனவேதனையுடன் கூறுகிறார் படத்தயாரிப்பாளர் ராமச்சந்திரன்.

நாகர் கோயிலைச் சேர்ந்த ராமசந்திரனுக்கு அம்மா அப்பா கஷ்டப்பட்டு சம்பாதித்த சொத்து

---

## குற்றப்புள்ளிகளின்...

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்தில் இருந்து சுலபமாக வெளிச் செல்லவோ, உள் நுழையவோ முடியும். இது மிக நீண்ட காலமாக போருக்குள் வாழ்ந்து சோதனைகளையே சுமந்து கொண்டிருந்த மக்களுக்கு ஆறுதல் தரக்கூடிய விடயம் தான். ஆனால் அத்தகைய ஆரோக்கியமான பயணத்தை சில விஷமிகள் தம்முடைய தனிப்பட்ட நலன்களுக்காக தவறான வகையில் பயன்படுத்தவும் தொடங்கியிருக்கிறார்கள்.

எனவே எத்தகைய பாராதூரமான குற்றத்தைச் செய்தாலும் சட்டத்தின் கண்களில் மண்ணைத் தூவி விட்டு யாழ்ப்பாணத்தில் இருந்து 'எஸ்கேப்' ஆகிவிடலாம் என்ற அதி பயங்கரமான கருத்தியல் சமூக எதிர்மறை நிலை கொண்டவர்களிடம் வேரூன்றத் தொடங்கியிருக்கின்றது. இதன் விளைவே மேற்குறித்த பயங்கர சம்பவங்கள். ஆயினும் இத்தகைய சம்பவங்கள் ஒரு குறித்த பிரதேசத்தை மையப்படுத்தி நிகழ்ந்திருப்பது தான் ஒரு வகையில் மனதை இடறச் செய்கின்றது.

"இவ்வளவு காலமும் கொஞ்ச நாள் எண்டாலும் அடையாள அட்டை காட்டுதல், 'செக்கிங்' எண்ட ஆக்கினைகள் இல்லாமல் இருந்தம். சண்டை முடிஞ்சதாலை அவங்களும் இதிலை அக்கறை காட்டுறேலை. ஆனா இப்ப நடக்கிற சம்பவங்களைப் பாக்கேக்க முந்தின மாதிரி 'செக்கிங்', ஐ சி பாக்கிற முறைய நடைமுறைப்படுத்தினால் நல்லது போல கிடக்கு." என்று ஆதங்கப்பட்டார் ஒரு முதியவர். அவரது வார்த்தைகள் அடங்குவதற்கிடையில் மானிப்பாயில் பரவலாக இத்தகைய சோதனை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக இன்னொரு நண்பர் தொலைபேசி மூலம் தெரிவித்தார்.

உண்மையில் மீண்டும் இராணுவ மயப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளை குடாநாட்டில் மேற்கொள்வதற்கான சூழலை உருவாக்கும் உள்நோக்கத்தோடுதான் திடீரென முளைக்கும் குற்றவியல் சம்பவங்கள் சிருஷ்டிக்கப் படுகின்றனவா? என்ற கோணத்திலும் மக்கள் சிந்திக்கத் தொடங்கியிருக்கிறார்கள். அவர்கள் அவ்வாறு சிந்திப்பதிலும் தவறில்லை என்பது போலவே எமக்குப் படுகின்றது. உங்களுக்கு....?

✱✱✱

## சொற்சிலம்பம் போட்டி இல. 415

சொற்சிலம்பம் 415 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்கவேண்டிய கடைசித் திகதி 2010 ஆம் ஆண்டு மே 08 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் மே 09 ஆம் திகதி சுடர் ஒளியில் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல. 413 இற்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன. தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக ரூபா 250உம், இரண்டாவது பரிசாக ரூபா 150உம், மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**அனுப்பவேண்டிய முகவரி:**
'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14.

## சொற்சிலம்பம் போட்டி இல.413

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 அ | 2 க | ம் | 3 பா | 4 வ | ம் | ■ | 5 தா |
| 6 ச | ரி | ■ | 7 வ | ட | ■ | 8 ச | க |
| ம் | ■ | 9 க | ல | ம் | 10 ப | க | ம் |
| 11 பா | 12 ம | ர | ன் | ■ | 13 க | தி | ■ |
| 14 வி | த | ம் | ■ | 15 பா | ல் | ■ | 16 க |
| 17 த | லை | ■ | 18 க | ட | ■ | 19 உ | ரு |
| ம் | ■ | 20 வி | ள | ம் | 21 ப | ர | ம் |
| ■ | 22 வி | ரை | வு | ■ | னா | ம் | பு |

## சொற்சிலம்பம் போட்டி இல. 413

### பரிசு பெறுவோர்

1. செ.ரமணா, 68, யாழ் வீதி, யாழ்ப்பாணம்.
2. நெல்சன் ஜெபத்துரை 36, பிரதான வீதி, பண்டாரவளை.
3. க.கமால்தீன் புன்னக்குடா வீதி, ஏறாவூர்.

## சொற்சிலம்பம் போட்டி இல. 413

### பாராட்டுப் பெறுவோர்

01. ஐ.தாஜிடின் அட்டாளைச்சேனை.-10
02. திருமதி.பிலோமினா அமிர்தநாதன் யாழ்ப்பாணம்.
03. கே.அரசேஸ்வரன் யாழ்ப்பாணம்.
04. ஜெ.இராஜேந்திரகுமார் கொழும்பு- 08.
05. செ.றொபட் கொழும்பு- 13.
06. திருமதி ராஜினி புண்ணியமூர்த்தி மட்டக்களப்பு.
07. எஸ்.ரஞ்சினி மட்டக்களப்பு.
08. த.சாம்பசிவம் கொழும்பு- 13.
09. கே.சிவதாசன் மட்டக்களப்பு.
10. இ.சர்மௌா கொடிகாமம்.
11. தனபாலசிங்கம் சாவகச்சேரி.
12. சந்திராணி தங்கத்துரை கல்முனை.
13. எஸ். சின்னராசா பெரிய போரதீவு
14. ஆ.பெ.தயானந்தி மன்னார்.

## சொற்சிலம்பம் போட்டி இல.415

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | 4 | ■ | 5 | 6 |
| 7 | | | ■ | 8 | | | |
| 9 | | ■ | 10 | | ■ | | ■ |
| ■ | 11 | 12 | | ■ | 13 | | 14 |
| 15 | | | ■ | 16 | | ■ | |
| | ■ | 17 | 18 | | ■ | 19 | |
| 20 | 21 | | | ■ | 22 | | |
| 23 | | | ■ | 24 | | | |

## சொற்சிலம்பம் போட்டி இல. 415

### இடமிருந்து வலம்

1. அருச்சுனன் மகன்
5. எந்நேரமும்
7. ஒரு காட்டு மிருகம்
8. ஆண்டு
9. நினைவு தினம்
10. ஆறு
11. நித்தியம்
13. வேள்வியில் (யாகத்தில்) சமர்ப்பணம் செய்வது
15. மேலதிகமானது
16. ஒரு பலகாரம், அப்பம்வகை
17. கொடி/'கயிறு விடல்'
19. பாவம் செய்தவன்
20. எரிதல்
22. அருமையான
23. அளவுக்கு அதிகம்
24. விடயம் / கருமம்

### மேலிருந்து கீழ்

1. எதிலி
2. ஒன்றின் அல்லது ஒருவரின் சார்பாக வருபவர்
3. பிள்ளை தூங்குவது தாயின் இந்த இடத்தில்/மடக்கு
4. இளம் பெண்
5. கிரியை/செய்முறை
6. தாங்கள்
10. நமது
12. காட்சிக்குக் கிட்டுவது
13. விருப்பம்
14. பெரும் நிதி/ பெறுமதியான செல்வம்
15. நற்பண்புடையவள்
16. காதணி
18. மேல்நாட்டுக் குடிவகை ஒன்று
19. பெரிய
21. கடைசி எழுத்துச் சேர்ந்தால் காந்தி அணியும் ஆடை
22. சிங்கம்

## நன்றாகக் குடியுங்கள்!

என்ன தான் உடற்பயிற்சி செய்தாலும், மருந்து மாத்திரை சாப்பிட்டாலும், உடல் எடை ஓரளவுதான் குறையும். ஆனால், தொடர்ந்து தண்ணீர் குடித்து வாருங்கள், ஒரு மாதத்திலேயே பலன் தெரிந்து விடும்.

உடலில் கலோரியை கட்டுப்படுத்த மருந்து தேவையல்ல, தண்ணீர் தான் முக்கிய தேவை. தண்ணீர் குடித்து வந்தால், உடலில் வயிற்றில் இருந்து ஆரம்பித்து, குடல், சிறுநீரகம் என்று எல்லா இடங்களையும் சுத்தப்படுத்தி, எலும்பு, தசைகளையும் எந்த பாதிப்பும் இல்லாமல் சீராக்கி சென்று கடைசியில் வெளியேறி விடுகிறது. இப்படி செய்வதால் தான் சிறுநீரக பிரச்சினை, குடல் பிரச்சினை என்று எதுவும் வராது.

நாம் எவ்வளவு தண்ணீர் குடிக்க வேண்டும்? இது தான் பலரின் கேள்வி.

* ஒரு நாளைக்கு எட்டு முதல் பத்து டம்ளர் வரை தண்ணீர் குடிக்கலாம். ஆப்பிள், வத்தகை, ஆரஞ்சு என்று பழங்களாகவும் சாப்பிடலாம். அவற்றில் 70 சதவீதம் வரை தண்ணீர் சத்து தான் உள்ளது. தினமும் ஏதாவது ஒரு சமயம், பழங்களாக சாப்பிட்டால் நல்லது.

* பொதுவாக எமது உடல் எடையில் பாதி அளவுக்கு தண்ணீர் குடிக்க வேண்டும். அதாவது உதாரணமாக 120 இறாத்தல் எடை இருப்பதாக வைத்தால், பாதி அளவு, 60 அவுன்ஸ் தண்ணீர் குடிக்க வேண்டும்.



* ஒரு பக்கம் தண்ணீர் குடித்து விட்டு, இன்னொரு பக்கம் காப்பி குடித்தால் பலனே இல்லை. குடித்த தண்ணீரை வற்றவைத்து விடும் காப்பியில் உள்ள காபன்.

* மதுவும் அப்படித்தான். தண்ணீர் வேண்டிய அளவு குடித்து விட்டு, மதுப்பழக்கம் இன்னொரு பக்கம் இருந்தால், நாக்கு வறண்டு தான் போகும். உடலில் தண்ணீர் ஏறவே ஏறாது.

* தண்ணீர் குடிக்கும் போர்வழி என்று ஒரே மொடக்கில் அடிக்கடி கண்டபடி குடம் குடமாக குடிப்பதும் தவறு.

* வெறும் தண்ணீர் குடிக்க பிடிக்காவிட்டால், அதில் தேயிலை பையை நனைத்தோ, எலுமிச்சை சாறு பிழிந்தோ குடிக்கலாம்.

## பார்வதி அம்மாளுக்கு......

(9ஆம் பக்க தொடர்ச்சி)

கழுவவே முடியாது!'' இப்படிக் கூறினார் வைகோ.

மனதளவில் நொறுங்கிப் போனது மட்டுமின்றி, பக்கவாத நோயாலும் பாதிக்கப்பட்ட நிலையிலிருக்கும் பார்வதியம்மாள், அதற்கான முழுமையான மருத்துவ வசதிகள் மலேசியாவில் இல்லாத காரணத்தால்தான் தமிழகத்துக்கு வந்து சிகிச்சை பெறுவதற்கு விரும்பினார். முறைப்படி விசாவுக்கு விண்ணப்பிக்கப்பட்டு, மலேசியாவிலிருக்கும் இந்திய தூதரகமும் மருத்துவ காரணங்களுக்காக ஆறு மாதங்கள் தமிழகத்தில் தங்கியிருக்க அவருக்கு அனுமதி வழங்கிவிட்டது. இப்படி உரிய ஆவணங்களோடும் அனுமதியோடும் தமிழகம் வந்த பார்வதி அம்மாளை குடியுரிமைத் துறை அதிகாரிகள் விமான நிலையத்திலேயே தடுத்து திருப்பி அனுப்பியிருப்பது ஒட்டுமொத்த தமிழர்களுக்கும் இழைக்கப்பட்ட அவமானமென்றே கருதவேண்டி இருக்கிறது.

பிரபாகரனின் பெற்றோரான வேலுப்பிள்ளை அவர்களும், பார்வதி அம்மாளும் இறுதிப் போருக்கு முன்பாக நீண்ட காலம் தமிழகத்தில்தான் தங்கியிருந்தார்கள். 1983 ஆம் ஆண்டு இலங்கையில் தமிழர்கள் மீது ஏவப்பட்ட கலவரத்துக்குப் பிறகு தமிழ்நாட்டுக்கு குடிபெயர்ந்த அவர்கள், திருச்சியில்தான் தங்கியிருந்தார்கள். இருபது ஆண்டு காலம் அவர்கள் இங்கே வாழ்ந்து வந்தனர். ராஜீவ்காந்தி படுகொலைக்குப் பிறகு ஏற்பட்ட அசாதாரணமான சூழலிலும் கூட அவர்களுக்குத் தொந்தரவு ஏதுவும் ஏற்படவில்லை. 2002 ஆம் ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட அமைதி உடன்பாட்டுக்குப் பிறகு, அங்கு சற்றே நிலைமை மேம்பட்ட காரணத்தால், மீண்டும் தாயகத்துக்குச் செல்ல வேண்டும் என்ற விருப்பத்தின் காரணமாக அந்தத் தம்பதி 2003 இல் இலங்கைக்குப் போனார்கள்.

இன்று அந்த மூதாட்டிக்கு ஏற்பட்ட நிலைமைக்கு ஒரே காரணம் அவர் பிரபாகரனின் தாய் என்ற பார்வைதான்.

2003 ஆம் ஆண்டு பிரபாகரனின் பெற்றோர் இலங்கைக்கு சென்றவுடன் அன்று தமிழகத்தில் ஆட்சி செய்து கொண்டிருந்த அ.தி.மு.க. அரசு, மத்திய அரசுக்கு வேண்டுகோள் ஒன்றை அனுப்பியது. 'மீண்டும் வேலுப்பிள்ளை குடும்பத்தினர் தமிழகம் வருவதற்கு அனுமதிக்கக்கூடாது. அதற்கு மத்திய அரசு தடை விதிக்க வேண்டும்' என்பதே அந்தக் கோரிக்கை. மத்திய அரசும் அதனடிப்படையில் தடை ஆணையைப் பிறப்பித்தது. அந்தத் தடை ஆணையின் அடிப்படையில் இந்தியாவுக்குள் அனுமதிக்கப்படக் கூடாத நபர்களின் பட்டியலில் வேலுப்பிள்ளை தம்பதியின் பெயரும் இடம் பெற்றுவிட்டது. தற்போதும் அதன் காரணமாகத்தான் விமான நிலைய அதிகாரிகள் பார்வதி அம்மாளைத் திருப்பி அனுப்பியிருக்கிறார்கள் - அவருக்கு உரிய விசா வழங்கப்பட்டிருந்தும் கூட!

பார்வதி அம்மாள் இங்கே தமிழகத்துக்கு ஒரு சுற்றுலாப் பயணியாகவோ அல்லது வேறு அரசியல் நிகழ்ச்சிகளுக்காகவோ வரவில்லை. தன்னைச் சுற்றிலும் என்ன நடக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளக்கூட இயலாத நிலையில் இருக்கும் அவர், மருத்துவ சிகிச்சை பெறுவதற்காகத்தான் இங்கு வந்தார். பல்வேறு நோய்களுக்கும் சிறந்த மருத்துவ சேவைகளை வழங்கி, தமிழகம் உலகப் புகழ் பெற்று வருகிறது. இதைத் தமிழக அரசும் பல சமயங்களில் பெருமையோடு சொல்லிக் கொள்வதைப் பார்க்கிறோம். அப்படி இருக்கும்போது பார்வதி அம்மாள் திருப்பி அனுப்பப்பட்டிருப்பது எந்த விதத்திலும் ஏற்கத்தக்கதல்ல.

பார்வதி அம்மாள் தமிழகத்துக்கு வந்து, உரிய சிகிச்சை பெற்றால்தான் தமிழ்நாட்டின் மனிதாபிமானத்துக்கு மறுபடி உயிர் கிடைக்கும்.

# 26-04-2010முதல் ராசி பலன்

## மேஷம்

அஸ்வினி, பரணி, கார்த்திகை 1-ம் பாதம்

மலர்ந்த முகத்தோடு காட்சியளிக்கும் மேஷ ராசி அன்பர்களே!



செய்யும் செயல்களில் முயற்சியோடு ஈடுபடுவீர்கள். பல காரியங்களில் முன்னேற்றமான பலன்கள் ஏற்படும். உறவினர்களும், நண்பர்களும், உற்ற சமயங்களில் உதவி செய்யக் காத்திருப்பர். வரவேண்டிய பணம் சரியான காலத்தில் கைக்கு வந்து சேரும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகளும், செல்வாக்கும் வந்து சேரும். குடும்பத்தில் சுமூகமான சூழ்நிலை காணப்படும். குடும்பத் தேவைகள் பூர்த்தியாவதால் அங்கத்தினர்களுக்குள் மகிழ்ச்சி இருக்கும். கலைஞர்கள் பிரபல நிறுவனங்களில் இருந்து வரும் ஒப்பந்தங்களின்படி பணிகளில் ஈடுபடுவர். பொருள் வசதிகளும் புகழும் அதிகமாகும்.

அதிர்ஷ்ட எண்கள் : 3,6,9
அதிர்ஷ்ட நிறம் : வெளிர்மஞ்சள்
அதிர்ஷ்டக் கிழமை : வியாழன்

## இடபம்

கார்த்திகை 2, 3, 4-ம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1,2

செயல்களை துணிவுடன் செய்யும் ரிஷப ராசி அன்பர்களே!



இந்த வாரம் உங்களுக்கு செய்யும் செயல்களில் சிறப்பான பலன்கள் ஏற்படும். சில காரியங்களில் தொய்வு ஏற்பட்டாலும், அவைகளைத் தீவிர முயற்சியோடும், நண்பர்களின் உதவியோடும் செய்து வெற்றி காண்பீர்கள். பணவரவு அதிகத் தொல்லை தராமல் வந்து சேரும். புதிய முயற்சிகளில் எதிர்பார்க்கும் வெற்றி கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்குப் பொறுப்புகள் அதிகமாகும். குடும்பத்தில் சீரான போக்கு காணப்பட்டாலும் சிறு சிறு பிரச்சினைகளும் இல்லாமல் இருக்காது. கலைஞர்கள் புதிய வேலைகள் கிடைத்து ஓய்வில்லாமல் பணிகளில் கவனம் செலுத்துவார்கள். பண வசதிகள் போதுமான அளவு கிடைக்கும்.

அதிர்ஷ்ட எண்கள் : 1,3,5
அதிர்ஷ்ட நிறம் : இளஞ்சிவப்பு
அதிர்ஷ்டக் கிழமை : செவ்வாய்

## மிதுனம்

மிருக சீரிடம் 3, 4-ம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3-ம்பாதங்கள்

மிடுக்கான தோற்றத்திற்கு சொந்தக்காரரான மிதுன ராசி அன்பர்களே!



தீவிரமான முயற்சிகளோடு செயல்படும் காரியங்களில் எதிர்பார்க்கும் பலன்களைப் பெறுவீர்கள். தக்க சமயங்களில் நண்பர்கள் உங்கள் செயல்களுக்கு ஆதரவாக இருப்பார்கள். மனச்சோர்வு அகன்று புதுத்தெம்பு ஏற்படும். உத்தியோகஸ்தர்களில் சிலருக்கு புதிய பதவிகள் அலுவலகத்திலேயே ஏற்படக்கூடும். குடும்பத்தில் சிறு சிறு பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பெண்கள் அவற்றை சுலபமாக சமாளித்து விடுவார்கள். கலைஞர்கள் தங்கள் பணிகளில் அதிக ஈடுபாட்டுடன் செயல்படுவார்கள். வருமானம் எதிர்பார்த்தபடி இருக்கும்.

அதிர்ஷ்ட எண்கள் : 3,6,9
அதிர்ஷ்ட நிறம் : இளஞ்சிவப்பு
அதிர்ஷ்டக் கிழமை : வெள்ளி

## கடகம்

புனர்பூசம் 4-ம் பாதம், பூசம், ஆயில்யம்

தருமம் செய்வதில் ஈடுபாடு காட்டும் கடக ராசி அன்பர்களே!



செய்யும் காரியங்களில் அதிக முயற்சிகளோடு செயல்பட்டு வெற்றிகரமான பலன்களை அடைவீர்கள். பணவரவுகள் எதிர்பார்த்தபடி கிடைத்தாலும், அவசியமான செலவுகளுக்கு உடனே பயன்படுத்தும்படி இருக்கும். உறவினர்களும், நண்பர்களும் தக்க சமயத்தில் உதவி செய்வார்கள். அலைச்சல் இருந்தாலும், ஆதாய வரவுகளும் இருக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களில் சிலர் முக்கிய பணியொன்றைச் சிறப்பாகச் செய்து உயர் அதிகாரிகளிடம் பாராட்டுப் பெறுவார்கள். குடும்பத்தில் உற்சாகம் காணப்படும். கலைஞர்கள் தங்கள் பணிகளில் உற்சாகமாக ஈடுபடுவார்கள். பிரபல நிறுவனங்களிடம் இருந்து ஒப்பந்தங்களைப் பெற சகக்கலைஞர்கள் மூலம் முயற்சிகளை மேற்கொள்வார்கள்.

அதிர்ஷ்ட எண்கள் : 5,6,9
அதிர்ஷ்ட நிறம் : இளம்பச்சை
அதிர்ஷ்டக் கிழமை : புதன்

## சிம்மம்

மகம், பூரம், உத்திரம் 1-ம் பாதம்

கற்பனை மிகுந்த எழுத்தாற்றல் பெற்ற சிம்ம ராசி அன்பர்களே!



முயற்சியோடு ஈடுபடும் செயல்களில் முன்னேற்றமான பலன்களை அடைவீர்கள். வரவேண்டிய பணவரவுகளில் சிறிது தாமதம் நேரக்கூடும். உத்தியோகத்தில் உள்ளவர்களில் சிலருக்குப் புதிய பொறுப்புகள் ஏற்பட்டு செல்வாக்கு பெருகும். வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் குறைபடாமல் இருக்கும். குடும்பத்தில் மகன் அல்லது மகளுக்கு புதிய வேலை கிடைக்கும். கலைஞர்களுக்குப் புதிய ஒப்பந்தம் ஒன்றினால் பொருளாதார நிலை உயரும்.

அதிர்ஷ்ட எண்கள் : 2,5,6
அதிர்ஷ்ட நிறம் : வெண்மை
அதிர்ஷ்டக் கிழமை : திங்கள்

## கன்னி

உத்திரம் 2,3,4-ம் பாதங்கள், அஸ்தம், சித்திரை 1, 2-ம் பாதங்கள்

பிறருக்கு உதவி செய்யும் குணம் கொண்ட கன்னி ராசி அன்பர்களே!



செய்யும் காரியங்களில் அதிக முயற்சி தேவைப்படும். சில செயல்களில் மட்டுமே நீங்கள் எதிர்பார்க்கும் திருப்தியை அடைய முடியும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு அதிக வேலைப் பளுவினால் சிரமங்கள் இருக்கும். விடுமுறையில் உள்ள சக ஊழியர் வேலையில் அதிகக் கவனம் செலுத்த வேண்டி நேரிடும். சுயவேலை செய்பவர்கள் தங்கள் பணிகளில் மிகுந்த கவனம் செலுத்தாவிட்டால் வாடிக்கையாளர்களை திருப்திபடுத்த இயலாது. குடும்பத்தில் கடன் தொல்லைகள் இருக்கும். வருமானம் தேவையான அளவு இல்லாமல் போகலாம். கலைஞர்களுக்கு, பழைய வாய்ப்புகளிலேயே வருமானம் கிடைக்கக் கூடும். சகக்கலைஞர்களின் மூலம் புதிய வாய்ப்புகள் கிடைக்க முயற்சிகளை மேற்கொள்வீர்கள்.

அதிர்ஷ்ட எண்கள் : 1,5,6
அதிர்ஷ்ட நிறம் : சிவப்பு
அதிர்ஷ்டக் கிழமை : ஞாயிறு

## துலாம்

சித்திரை 3, 4-ம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3-ம் பாதங்கள்

கருணை கலந்த அன்புடன் பழகும் துலாம் ராசி அன்பர்களே!



சில காரியங்களில் தீவிர முயற்சியுடன் செயல்பட்டு வெற்றியடையக் கூடும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு அலுவலகத்தில் அதிகப் பொறுப்புகள் வந்து சேரலாம். குடும்பத்தில் ஏற்படும் சிறு சிறு தொல்லைகளை பெண்களே சமாளித்து விடுவர். அண்டை அயலாரிடம் சுமூகமாக நடந்து கொள்வது அவசியம். கலைஞர்கள் சகக்கலைஞர் ஒருவருக்கு முக்கியமான நிகழ்ச்சிக்காக பொருள் உதவி செய்ய நேரலாம். பங்குச் சந்தை வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் இருக்காது.

அதிர்ஷ்ட எண்கள் : 5,6,9
அதிர்ஷ்ட நிறம் : இளம்பச்சை
அதிர்ஷ்டக் கிழமை : புதன்

## விருச்சிகம்

விசாகம் 4-ம் பாதம், அனுஷம், கேட்டை

எப்போதும் நேர்மையை விரும்பும் விருச்சிக ராசி அன்பர்களே!



முயற்சியோடு செயல்பட்டு பல காரியங்களில் வெற்றிகரமான பலன்களைப் பெறுவீர்கள். அவசியமான நேரங்களில் நண்பர்களின் ஆதரவு பயன்தரும். யாருக்கும் வாக்குறுதிகள் கொடுக்க வேண்டாம். உத்தியோகத்தில் உள்ளவர்களில் சிலருக்கு அலுவலகத்திலேயே இடமாற்றம் ஏற்படக்கூடும். பொறுப்புகளில் மாறுதல்கள் இருக்கலாம். சுயவேலை செய்பவர்களுக்கு வேலைகள் அதிகமாகலாம். குடும்பத்தில், குடும்பத் தலைவருக்கு வேறு இடத்திற்கு மாற்றம் ஏற்பட்டு பிரிய நேரலாம். பெண்கள் எதிர்பார்க்கும் செயல் ஒன்று இனிதே நிறைவேறலாம். கலைஞர்களுக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கும். பொருளாதார நிலை மேம்படும்.

அதிர்ஷ்ட எண்கள் : 5,6,9
அதிர்ஷ்ட நிறம் : இளஞ்சிவப்பு
அதிர்ஷ்டக் கிழமை : வெள்ளி

## தனுசு

மூலம், பூராடம், உத்திராடம் 1-ம் பாதம்

வேலைகளை அழகுடன் செய்யும் தனுசு ராசி அன்பர்களே!



உங்கள் செயல்களில் வெற்றி பெற தீவிரமான முயற்சியோடு பாடுபடுவீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு வேலையில் பொறுப்புகள் அதிகமாகலாம். சுயவேலை செய்பவர்கள் வேலைப் பளுவினால் அல்லல் பட நேரலாம். குடும்பத்தில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும், மங்கல நிகழ்ச்சிகளுக்கு முன்னேற்பாடுகள் செய்வீர்கள். பெண்கள், மனதிற்கினிய சம்பவத்தால் மனம் மகிழ்வார்கள். கலைஞர்கள் பணிகளில் உற்சாகமாக ஈடுபடுவார்கள்.

அதிர்ஷ்ட எண்கள் : 5,6,9
அதிர்ஷ்ட நிறம் : இளஞ்சிவப்பு
அதிர்ஷ்டக் கிழமை : செவ்வாய்

## மகரம்

உத்திராடம் 2,3,4-ம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2-ம் பாதங்கள்

புதுமையாகச் சிந்தித்து செயல்படும் மகர ராசி அன்பர்களே!



இந்த வாரம் நீங்கள் முன்னேற்றமான பலன்களைப் பெற முயற்சியோடு செயல்களில் ஈடுபடுவீர்கள். திட்டமிட்ட வரவுகள் மகிழ்வளித்தாலும், செலவுகள் அதிகமாகி உற்சாகத்தைக் குறைக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் முயற்சியின்பேரில் பதவி உயர்வு பெறக்கூடும். சம்பள உயர்வும், செல்வாக்கும் ஏற்படலாம். குடும்பத்தில் சீராக நடைபெறும். சிறு சிறு தொல்லைகள் ஏற்பட்டாலும் அவை பெண்களாலே சமாளிக்கப்படும். கலைஞர்கள், பிரபல நிறுவனங்களின் ஒப்பந்தம் பெற்று புகழும், பொருளும் பெறக்கூடும். உறவினர் இல்லத்து நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அன்பர்களால் மங்கல நிகழ்ச்சி ஒன்று உருவாகலாம்.

அதிர்ஷ்ட எண்கள் : 3,6,9
அதிர்ஷ்ட நிறம் : வெளிர்மஞ்சள்
அதிர்ஷ்டக் கிழமை : வியாழன்

## கும்பம்

அவிட்டம் 3,4-ம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1,2,3-ம் பாதங்கள்

காரியங்களை திட்டமிட்டு செய்யும் கும்ப ராசி அன்பர்களே



முயற்சியோடு செயல்பட்டு பல காரியங்களில் வெற்றிகரமான பலன்களைப் பெறுவீர்கள். நண்பர்களும், உறவினர்களும் உங்கள் செயல்களுக்கு ஆதரவாக இருப்பார்கள். வரவேண்டிய பணவரவுகள் திட்டமிட்டபடி வந்து சேரும். செலவுகள் குறைந்து கைகளில் பணப்புழக்கம் அதிகமாகும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர் அதிகாரிகளின் ஆதரவோடு சில சலுகைகள் கிடைக்கும். பண வசதிகள் அதிகமாகும். குடும்பம் சீராக நடைபெறும். கடன்கள் அடைபடும். மகன் அல்லது மகளின் திருமணம் பற்றிய முன்னேற்பாடுகளில் ஈடுபடுவீர்கள். பெண்கள் சகோதர வழி உறவுகளில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் பங்குபெறுவர்.

அதிர்ஷ்ட எண்கள் : 5, 8, 9
அதிர்ஷ்ட நிறம் : வெளிர் நீலம்
அதிர்ஷ்டக் கிழமை : சனி

## மீனம்

பூரட்டாதி 4-ம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி

கனிவான பேச்சோடு பழகும் மீன ராசி அன்பர்களே!



தீவிரமான முயற்சிகளுடன் பணிகளில் ஈடுபடுவீர்கள். சில செயல்கள் திருப்தியைத் தந்தாலும், மேலும் சிலவற்றில் முன்னேற்றமான பலன்களை அடைய அதிக முயற்சிகள் தேவைப்படலாம். வீட்டினை அழகாக வைத்திருப்பதில் கவனம் செலுத்துவீர்கள். நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்த செய்தி கிடைத்து மகிழ்ச்சி அடைவீர்கள். குடும்பத்தில் சிறு சிறு கடன் தொல்லைகள் தலை தூக்கும். பெண்கள், தங்கள் பேச்சில் இனிமையை கலப்பது பிரச்சினைகள் ஏற்படுவதை தவிர்க்கும். கலைஞர்கள் பழைய ஒப்பந்தங்களிலேயே பணியாற்றி தங்கள் திறமைகளை வெளிப்படுத்துவர். விருது, பாராட்டு பெறும் வாய்ப்புகளும் சிலருக்கு உண்டு.

அதிர்ஷ்ட எண்கள் : 5,8,9
அதிர்ஷ்ட நிறம் : வெளிர் நீலம்
அதிர்ஷ்டக் கிழமை : சனி

# ஐஸ்லாந்தில் குமுறும் எரிமலை

தமிழில்: சுப்பர்

ஐரோப்பாவின் பெரும் பகுதியை ஸ்தம்பிதம் அடையச் செய்த ஐஸ்லாந்து எரிமலையின் குமுறல் மூலம் ஏற்பட்ட சாம்பல் மண்டலம் கடந்த திங்கட்கிழமை புதிய கட்டத்தை அடைந்து சாம்பல் வெளியேற்றம் குறைவடைந்தது. எனினும் அக்கினிக் குழம்பின் கொந்தளிப்பும் உருகிய பாறைத் துண்டுகளின் விசிறியடிப்பும் மாறவில்லை.

ஸ்தம்பிதம் அடைந்துள்ள விமானப் பிரயாணிகளுக்கு இச்சாம்பல் மண்டல ஆக்கிரமிப்பு குறைந்துள்ளது நிம்மதியளித்துள்ள போதிலும் இந்த எரிமலைக் குமுறலை அவதானித்து வரும் விஞ்ஞானிகள் அபாயம்

அடங்கவில்லையென வொக்ப் ஜோர்ட் தெரிவித்துள்ளார். எரிமலையின் நிலைமையை அவதானிக்க நியமிக்கப் பட்டுள்ள பல புவியியல் வல்லுனர் களினதும் வானிலை அவதானிகளி னதும் குழுவில் வொக்ப் ஜோர்ட் அங்கம் வகிக்கின்றார்.

இந்த எரிமலையின் நிலையையும் அவதானிக்கவல்ல விமான நிலைய ராடார் கதிர் மூலமாகவும், வானிலை சுமுகமாகவுள்ள நேரங்களில் கரையோரக் காவல் விமானங்கள் மூலமாகவும் இந்த எரிமலையின் நிலையை அவதானித்து வருகின்றது. தற்போது எரிமலையின் சீற்றம் குறைந்துள்ள போதிலும் ஐஸ்லாந்தில் நடமாட்டமற்ற ஐஸ்லாந்தின் துருவப் பகுதிகளுக்கு காற்றால் அள்ளுண்டு சென்றதால் இப்போதைய இக்கட்டு ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக் கது. இம்முறை ஐரோப்பாவின் பிரதான வான் எல்லையான ஐஸ்லாந்தின் தென்கிழக்குப் பிராந்தியத்தை புகை மண்டலம் ஆக்கிரமித்துள்ளதாலேயே விமானப் பயணங்கள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன. பத்து வருடங்களுக்கு ஒரு முறை குமுறுவதை வாடிக்கையாக கொண்டுள்ள Mount Hekla வையும் பனிப்பாறைகளால் மூடப்பட்ட Oraefa Jokull மற்றும் பிரமாண்டமான Ketla எரிமலைகள் இரண்டையும் விஞ்ஞானிகள் உன்னிப்பாக அவதானித்து வருகின்றனர்.





இன்னும் முற்றாக நீங் கவில்லை யெனவும் அயலிலுள்ள ஏனைய எரிமலைகளும் குமுறக் கூடிய வாய்ப்புகள் உள்ளதாகவும் கருத்து தெரிவித்துள்ளனர்.

Eyjaf jalla jokull என்ற எரிமலையில் இருந்து அக்கினிக் குழம்பு வழிந்தோடாதிருந்த போதும் அதன் முதல் குமுறல் திங் கட்கிழமையே அவதானிக்கப்பட்ட தாக புவியியல் வல்லுனர்கள் தெரிவித்துள்ளனர்.

புவியியல் வல்லுனரான கிரிஸ்டின் வொக்ப் ஜோர்ட் (Christin Vogf jord) கருத்துத் தெரிவிக்கையில், இந்த எரிமலையின் குமுறலும் கொந்தளிப் பும் இன்னும் குறையவில்லையென வும் அநேகமாக மேலும் சில எரிமலைகள் குமுறக் கூடிய அபாயம் உள்ளதாகவும் கூறினார்.

இருநூறு மீட்டர் கனமுள்ள பனிப்பாறையின் அடுத்தடுத்த அழுத்தத்தின் காரணமாக எரிமலை யின் குமுறல் அதிகரித்து வந்துள்ளது. உருகும் பனிப்பாறையில் இருந்து வரும் நீரால் கிட்டத்தட்ட ஒன்பது கிலோ மீற்றர் உயரத்துக்கு எழுந்த சாம்பல் குறைவதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள் ளது. தற்சமயம் பனிப்பாறையின் பெரும் பகுதி உருகிப் போய்விட்ட தால் சாம்பல் மேகம் மூன்று கிலோ மீற்றருக்கு குறைந்துள்ளது. எனினும் எரிமலையின் குமுறல் இன்னும்



நில அதிர்வையும் உன்னிப்பாக அவதானிக்க நவீன உபகரணங்களும் மாணிகளும் அதன் அயலில் பொருத்தப் பட்டுள்ளன. எரிமலையின் அதிர்வு இப்போது சுமார் 20 கிலோ மீற்றர் (12 மைல்) தூரத்துக்கு அப்பால் கேட்கக் கூடியதாகவுள்ளது. பொருத்தப் பட் டுள்ள கருவிகளில் ஏராளமானவை சாம்பலால் இயக்கமிழந்துள்ளன என்று வொக்ப் ஜோர்ட் தெரிவித்தார். இச்சாம்பல் மிகத் துல்லியமானதாக இருப்பதால் நுணுக்க மான கருவிகள், கணினி கள் மற்றும் கமெராக் களில் எளிதாகப்புகுந்து அவற்றைப் பழுதாக்கு கின்றது என அவர் மேலும் கூறினார். அதே சமயம் இப்புகை ஜெட் விமானங்களின் என்ஜின்களிலும் தாக்கத்தை ஏற்படுத் தலாமென விஞ்ஞானிகள் அச்சம் தெரிவித்துள்ள னர். ஜெட் விமானங்களின் என்ஜின் கள், எரிகலன்கள் ஆகியவற்றுள் புகுந்து கண்ணாடியை ஒத்த ஒரு படலத்தை இச்சாம்பல் உருவாக்கக் கூடிய அபாயம் உள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

வொக்ப் ஜோர்ட் தலைமையிலான குழு செயற்கைக் கோள் (Satellite) மூலமாகவும், மூன்று கிலோமீற்றர் உயரத்துக்கு மேலுள்ள எதையும் அவதானிக்கவல்ல விமான நிலைய

குமுறக் கூடிய ஏனைய எரிமலைகளால் வான் வழிப் பயணம் மீண்டும் ஸ்தம்பிதம் அடையலாமென புவியியல் வல்லுனர்கள் எச்சரிக்கை செய்துள்ளனர். குமுறக் கூடிய ஏனைய எரிமலைக ளால் வான் வழிப் பயணம் மீண்டும் ஸ்தம்பிதம் அடையலாமென புவியியல் வல்லுனர்கள் எச்சரிக்கை செய்துள்ள னர். பாறையில் அழுத்தமற்ற எரிமலை யொன்றின் குமுறல் கூட சாதாரண வர்த்தக விமானங் கள் பறக்கும் வான் எல்லையில் சாம்பலை விசிறி வான் வழிப் பயணத்தை ஸ்தம்பிதம் அடையச் செய்யலாமென அவர்கள் கருத்துத் தெரிவித் துள்ளனர். 2000 ஆம் ஆண்டு மவுண்ட ஹெக்லா (Mount Hekla) எரிமலையின் குமுறலின் போது 2004 இல் கிரிம்ஸ் வொட்டன் (எனூடிட்ண ஙணிஞண) எரிமலையின் குமுறலின் போதும் இதே நிலை ஏற்பட்டதென வும் இவ்விரு ஐஸ்லாந்து ஏரிமலைக ளும் வடகிழக்குப் பக்கமா இருந்தன எனவும் அவர்கள் சுட்டிக் காட்டியுள் ளனர். எனினும் முன்பு ஏற்பட்ட இரு எரிமலைகளின் சீற்றத்தின் போது வெளியேறிய புகை மண்டலம் சன





ஓர் எரிமலையின் குமுறல் அயலி லுள்ள மற்றொன் றையும் உயிர்ப்பிக்கும். கடந்த காலங்களில் Eyjaf jalla jokull மற்றும் Ketla ஆகிய இரண்டும் இவ்வாறு குமுறியுள்ளன என்று ஐஸ்லாந்து பல்கலைக்கழகத்தின் புவி பௌதிகவியல் விரிவுரையாளரான பேராசிரியர் Eyjaf Pall Einarsson சுட்டிக் காட்டினார். Ketla எரிமலை மீதுள்ள பனிப்பாறை Eyjaf jalla jokull எரிமலை மீதுள்ள பாறையை விட இரு மடங்கு கனமானது.

எனவே Ketla வின் குமுறல் தற்போது ஏற்பட்டுள்ள நிலையை விட பாரதூரமாக அமையலாமெனவும் அதன் காரணமாக வான் வழிப் பயணம் நீண்ட நாட்களுக்கு பாதிப்படை யலாம்.

இதுவரை Ketla எரிமலை குமுறக் கூடிய எவ்வித அறிகுறியும் இல்லை எனவும் வழக்கமாக நூறு ஆண்டுக ளுக்கு ஒரு முறை சீற்றமடையும் இந்த எரிமலை கடைசியாக 1918ஆம் ஆண்டு தனது சீற்றத்தைக் காட்டி ஒருவருட காலம் நீடித்த பாரிய வெள்ளப் பெருக்கை ஏற்படுத்தியது குறிப்படத்தக்கது.


TIEFSTE PREISE!!









Möbel Ferrari
Kleine Preise
Grosse Auswahl

www.moebel-ferrari.ch

HINWIL Wasserstrasse 28
Tel. 044 931 20 40

Täglich offen von 9.00 bis 20.00 Uhr

Direkt-Kedit – 6 Monate ohne Zins



இப்பத்திரிகை கொழும்பு - 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் எண்டர் பிரைசஸ் ஸ்தாபனத்தினால் 2010, ஏப்ரல் 25 ஆம் திகதி வெளியிடப்பட்டது.